09 JUL 1999

# சரிநிகர்

இதழ்-174 ஜூன் 24- ஜூலை 07, 1999 விலை 10.00



## புதைகுழியிலிருந்து புதைகுழியை நோக்கி..!



## தணிக்கைக்கு ஆண்டு ஒன்று!



தமிழர்கள்
சிங்களவர்களை
திட்டமிட்டு
தாக்கி வருகிறார்கள்!

-சம்பிக ரணவக்க




காஷ்மீர் விடுதலைப் போராட்டமும்

## 'இந்திய பக்தியும்'

# செம்மணி









செம்மணியிலிருந்து படங்கள் :- பரமர்

## 'தாய்மொழி'க்குத் தடா?

தமிழ் மக்களுக்கு விடுதலை வாங்கித் தரப்புறப்பட்ட இயக்கத் தலைமைகளைச் சேர்ந்த பலர் விடுதலையை விட வியாபாரம் இலாபகரமானது என்று புரிந்து கொண்டதாலோ என்னவோ கொப்பறா-விலிருந்து கொய்யாப்பழம் ஈறாக பனங்-கட்டியிலிருந்து பனஞ்சாராயம் ஈறாக கொழுத்த இலாபம் தரும்தொழில்களில் இறங்கி விட்டார்கள்.

தீவுப்பகுதியில் சும்மா கிடைத்த தேங்காயை எடுத்துக் கொப்பறா போட்டுக் கொழும்-புக்கு ஏற்றினார்கள். மேய்ப்பாரில்லாமல் திரிந்த ஆடுகளையும் மாடுகளையும் பிடித்து படையினருக்கு சப்ளை செய்து படையினருக்கான இறைச்சி விநியோகஸ்தரானார்கள்.

இந்த வியாபாரங்கள் ஒருபுறம் நடந்து கொண்டிருக்க மறுபுறத்தில் பத்திரிகை வியாபாரமும் நல்ல இலாபம் தரும் தொழில் என்று கண்டதால் அதிலும் முதல் போட்டார்கள்.

அற்புதராசா நடராசா என்கிற ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் ஆசிரியரானார். தினமுரசு வந்தது. கொழுத்த இலாபம் என்று கண்ட இன்னொரு பாராளுமன்ற உறுப்பினரான உமாபதி பாஸ்கரன் தானும் ஒரு சஞ்சிகையை ஆரம்பித்தார். தாய்மொழி வெளிவந்தது.

இதிலுள்ள சுவாரசியம் என்னவென்றால் தினமுரசு அரசுக்கு ஆதரவளிக்கிறார்கள் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட அனைத்துக் கட்சிகளையும் கடுமையாகத் திட்டும். ஆனால் தமிழ்க்கட்சிகளிலேயே அதி கூடிய பாராளுமன்ற ஆசனங்களை வைத்துக் கொண்டு- ஒன்பது - அரசுக்குத் தேவையான போதெல்லாம் முண்டு கொடுத்து நிமிர்த்தி விடுவார்கள்.

இதில் இரண்டு இலாபம் இருக்கிறது அவர்களுக்கு.

ஒன்று: தமிழ் மக்களின் உணர்வலைகளைப் புரிந்து கொண்டு தமிழ்க்கட்சிளைத் திட்டுவதனூடாக அந்த உணர்வுக்கு வடிகாலாக இருந்து கொண்டு வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்வது.

இரண்டு : அரசாங்கத்திடமிருந்து பெறக்கூடிய அனைத்து சலுகைகளையும் வசதி வாய்ப்புக்களையும் பெருக்கிக் கொள்வது.

அற்புதராஜா நடராஜாவைப்பின்பற்றி உமாபதி பாஸ்கரனும் வியாபாரத்தைத் தொடங்க வந்தது பிரச்சினை.

இன்னமும் தமது கட்சி செய்வதெல்லாம் தமிழ் மக்களின் நன்மைக்காகத்தான் என்று நம்பிக் கொண்டிருக்கும் ஒரு அப்பாவித் தோழர் ஒருவர் தலைமையை நோக்கிப் பின்வருமாறு கேள்வியெழுப்பியிருக்கிறார்.

அவசர காலச்சட்டத்தையும் அரசாங்கத்-தையும் ஆதரிப்பவர்களை எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் நடாத்தும் பத்திரிகைகளான தினமுரசும் தாய்மொழியும் கண்டிக்கின்றன. கிண்டலடிக்கின்றன. ஆனால் எமது பாராளுமன்ற உறுப்பினர்களோ பாராளுமன்றத்தில் அதற்குக் கையுயர்த்தி தமிழ் மக்கள் மீதான அரசாங்கத்தின் [illegible] ஆதரவளித்து வருகிறார்கள் [illegible] தலைமை சொல்கிறது மக்களின் நலன்கருதித் தான் நாங்கள் ஆதரவளிக்-கின்றோம் என்று. அவ்வாறானால் இப்பத்திரிகைகள் மக்களின் நலன்களுக்கு முரணாகவா நடாத்தப்படுகின்றன? அதனைக்கட்சி எப்படி அனுமதிக்கின்றது? கட்சியின் இன்னொரு உறுப்பினரோ ஒன்றில் நீங்கள் அரசுக்கு ஆதரவளிப்பதை நிறுத்த வேண்டும், அல்லது அதை எதிர்த்து எழுதுவதை நிறுத்த வேண்டும்.நீங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்து கிடைக்கும் வசதி வாய்ப்புக்களை எல்லாம் அனுபவித்துக் கொண்டு மற்றவர்கள் தான் அரசை ஆதரிக்கின்றார்கள் என்பது போல எழுதுவது நியாயமானதல்ல என்று சொல்லி நீங்கள் இப்போது என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டிருக்கிறார்.

கட்சி இப்போது தாய்மொழிக்கு தடை விதித்திருக்கிறது?

அடுத்தது தினமுரசுக்கா?

ஈ.பி.டி.பியின் ஜனநாயகத்தில் தவறு ஓரிடம் தண்டனை வேறோரிடம் போலும்!

## காற்சட்டை போட்ட எலிகள்!

செம்மணிப் புதைகுழிகளை கொலைக்குற்றவாளியான ராஜபக்ச அடையாளம் காட்ட தோண்டுதல் நடவடிக்கை நடந்தது.

இருவரது எலும்புக் கூடுகள் எடுக்கப்பட்டது மட்டுமல்லாமல், அவர்கள் அடையாளமும் காணப்பட்டார்கள்.

முதல் நாள் தோண்டிய போதே காற்சட்டையுடன் ஒரு கால் எலும்பு கண்டெடுக்கப்பட்டது.

இது பற்றி சகல பத்திரிகைகளும் செய்தி வெளியிட்டன. ஆனால், 'ஐலண்ட்' பத்திரிகையாளருக்கு மட்டும் அவை எலிகளதும், பாம்புகளதும் எலும்புக் கூடுகளாக தெரிந்தன.

ஒரு வேளை, ஐலண்ட் பத்திரிகையாளருக்கு தெரிந்த பாம்புகளும் கூட காற்சட்டை போடுமோ என்னவோ?

## செத்துப்போன சமூகம்

சிங்களவர்கள் இனவாதிகள் அல்ல. தமிழர்கள் தான் இனவாதிகள். அவர்கள் தான் திட்டமிட்டு சிங்களவர்கள் மீது தாக்குதல் தொடுத்து வருகிறார்கள். படிப்படியாக இலங்கையைக் கைப்பற்ற, தமிழ் விரிவாக்க வாதத்துடன் செயற்பட்டு வருகிறார்கள்...

-இப்படிப் பொரிந்து தள்ளுகிறார் தன்னை ஒரு இனவாதி அல்ல என்றும், சிங்கள மக்களை பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்க செயற்படுபவர் என்றும் கூறும் பயங்கரவாத எதிர்ப்புக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் சம்பிக்க றணவக்க.

அவருக்குத் தெரிந்த வரலாறு 1983க்குப் பிந்திய வரலாறு மட்டும் தான். 1983க்குப் பிறகு சிங்களவர்கள் தமிழர்களைத் தாக்கவில்லை. தமிழர்கள் 128 தடவை தாக்கிவிட்டார்கள் என்பது அவரது நியாயம்.

சிங்கள இனவாதம் புதுப்பொலிவுடன் வேகமாக வளர்ச்சி பெற்று தீவிரமாக இயங்க ஆரம்பித்துள்ளதற்கு இந்த இயக்கம் ஒரு நல்ல உதாரணம்.

தமிழ் இனவாதிகளைப் பற்றியும் தமிழ்ப் பயங்கரவாதம் பற்றியும் பேசும் அவர் சிங்கள இனவாதம் என்று ஒன்று இல்லையென்று கூறுகிறார். ஆனாலும் அவர் கூட ஒரு உண்மையை சொல்கிறார். அதுதான் 'தமிழ் சமூகம் ஒரு செத்துப்போன சமூகம்' என்பது.

துப்பாக்கி மனிதர்களால் சவமாக்கப்பட்டு விட்டது அது என்கிறார் அவர்.

இதிலே ஒரு உண்மை இருப்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

ஆனால், தமிழினத்தை இப்படிச் சாகடித்த பெருமையை அவர் தமிழ் இயக்கங்களுக்கு மட்டும் வழங்கியிருப்பதைத்தான் என்னவோ ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

## பொட்டும் பர்தாவும்

பொட்டு வைப்பது தமிழர்களின் இன அடையாளம் என்று கருதப்படுவதால் பொட்டு வைத்த பெண்கள் விசேடமாக சோதனைச் சாவடிகளில் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவது தெரிந்த விடயமே.

1958க்கு முன்னர் தமிழர்கள் மத்தயில் ஆண்களும் காது குத்தும் வழங்கத்தைக் கொண்டிருந்தனர். ஆனால் 1958 கலவரத்தின் போது காதில் துளையுள்ளவர்கள் தேடிப்பிடித்துத் தாக்கப்பட்டதன் காரணமாக 1958இன் பின் பிறந்த பல தமிழ் குழந்தைகளுக்கு காது குத்துவதைத் தமிழர்கள் நிறுத்தி இருந்தார்கள் என்று கூறப்படுகிறது. அன்று இப்படி ஆரம்பித்த அடையாளங்களை மாற்றுதல் மூலம் தப்பித்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் தமிழர்களின் இயல்புகளில் ஒன்றாக ஊறி விட்டது. சில தமிழர்கள் தமது பிள்ளைகளின் பெயர்களை சிங்களப் பெயரோ என மயங்கக் கூடிய விதத்திலும் வைத்திருந்தார்கள்.

இப்போது, பொட்டு தமிழர்களின் அடையாளங்களில் ஒன்று என்பதால் ஏற்படும் கோதனைச் சாவடிச் சிக்கல்களிலிருந்து தவிர்த்துக் கொள்ளப் பெண்கள் பொட்டுக்கள்ள் அணியாமல் விடுவது அல்லது சோதனைச்சாவடி வரும் போது கழற்றி விட்டு (ஒட்டுப் பொட்டு வந்த பின் இது மிகவும் வசதியாகி விட்டது.) அதைக் கடந்ததும் போட்டுக் கொள்வது நடந்து வருகிறது.

பொட்டைக் கண்டாலே எரிச்சலடைந்து விடும் மனோபாவம் வெறும் இராணுவ மட்டத்தில் மட்டுமல்ல படித்த மட்டங்களுக்கும் பரவி வருவது ஒரு சோகமான யதார்த்தம். அண்மையில் கொழும்பிலுள்ள ஒரு பிரபல கிறிஸ்தவ மகளிர் கல்லூரியில் ஒரு தமிழ்ச் சிறுமியின் பொட்டைப் பிடுங்கி எறிந்துள்ளார் அப்பாடசாலையின் அதிபர்.

பொட்டு வைக்கக் கூடாது என்றும் சட்டம் போட்டாராம் அவர்.

இதில் ஆச்சரியம் என்னவென்றால் இப்படிச் செய்தவர் ஒரு அருட் சகோதரி என்பது தான். மதங்களுக்கிடையேயும் இனங்களுக்கிடையேயும் ஐக்கியத்தை வளர்ப்பதற்காக மதத்தலைவர்கள் முயற்றி எடுக்கின்ற ஒரு நிலையில் மத/ இன அடையாளங்களை சகிக்க முடியாத பொருட்களாகப் பார்த்து பிடுங்கி வீசுவது அதுவும் பாடசாலை மாணவர்கள் மத்தியில் இவ்வகையான செயல்களைச் செய்வது ஒரு மோசமான முன்னுதாரணம் ஆகும். எப்படியோ இவ்விவகாரம் பிற ஆசிரியர் தலையீட்டால் சரியாகப் போய்விட்டதாகக் கேள்வி. பொட்டு இந்து மத அடையாளமோ / தமிழின அடையாளமோ என்பது ஒரு புறமிருக்க பாடகாலையில் இல்லாத ஒரு விதியைத் திடீரென அறிமுகப்படுத்தி ஒரு சிறுமியின் மனதை நோகடிப்பது எந்த வகை மனோதத்துவம் என்பது புரியவில்லை.

இதேபோல பௌத்த இந்து மாணவர்கள் கைகளில் கட்டியிருக்கும் அவர்களது கோவில்களில் வழங்கப்பட்ட நூல்களையும் வெட்டி விடுமாறு கோருகிறார்களாம்.

கிறிஸ்தவ மதப்பாடசாலை என்பதற்காக பிற மத உரிமைகளை மறுப்பது ஒரு நூற்றாண்டு வரலாறு கொண்ட பழம் பெரும் பாடசாலைக்கு எந்த விதத்தில் பெருமை தரக் கூடியது என்று அங்கலாய்க்கிறார் அப்பாடசாலையின் முன்னாள் ஆசிரியர் ஒருவர்.

இதேபோல இன்னொரு சம்பவம். இது நடந்தது பதுளையில். அங்குள்ள சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் கற்பிக்கும் இரு முஸ்லிம் ஆசிரியைகள் பர்தா அணிந்து வந்ததை விரும்பாத அப்பாடசாலை அதிபர் அவர்களைப் பாடசாலையிலிருந்து இடமாறுமாறு வற்புறுத்தியதாகத் தெரிய வருகிறது. அவர்கள் இடமாற மறுத்ததால் குறித்த பாடசாலைப் பகிஷ்கரிப்பாக மாறிய இச்சம்பவம் பதுளை மாவட்டம் முழுவதற்கும் பரவியது.

இந்த அதிபர் ஒரு சைவ சமயத்தவர் என்பது ஒரு விசேட தகவல்.

பர்தா போடுவது இஸ்லாமிய மத வழக்கிற்குட்பட்ட ஒரு விடயம். இதைக்கட்டாயம் பின்பற்ற வேண்டும் என ஒரு சில முஸ்லிம்கள் கருதக்கூடும். அப்படியான நம்பிக்கையை அவர்கள் வைத்திருப்பதற்கும் அதை நடைமுறைப்படுத்துவதற்கும் அவர்களுக்கு உரிமை உண்டு.

அதைத் தடுப்பது ஒரு வகை அத்துமீறலும், மத சகிப்பின்மையுமாகும்.

பொட்டு, நூல், பர்தா என்பவை ஒருவருக்குபு அவசியமா என்பது பற்றி அவரே தான் தீர்மானிக்க வேண்டும். இனமத முரண்பாடுகள் வளர்ச்சியுற்று நாடு சின்னாபின்னப்பட்டிருக்கும் இவ்வேளையில் இத்தகைய நடவடிக்கைகள் மேலும் குரோதத்தையே தரும்.

இதைக்கல்விக்குப் பொறுப்பான அதிகார மட்டம் புரிந்து கொள்ளுமா?

# கொழும்பு — இனவாத எதிர்ப்புப் பேரணி:
# இ.தொ.கா.வின் இன்னொரு காட்டிக்கொடுப்பு!

"பேரினவாதச் செயல்பாடுகளை அரசுக்கும், இந்நாட்டு மக்களுக்கும் உணர்த்தி அதற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்த்தே நமது போராட்டத்தை ஏற்பாடு செய்தோம். இவ்விடயங்கள் நிறைவேறும் அறிகுறிகளும், உறுதிமொழிகளும் கடைத்துள்ளமையால் நாம் மெற்கொள்ளவிருந்த ஆர்ப்பாட்டமும் ஊர்வலமும், பொதுக்கூட்டமும் தற்போதைக்கு நடத்துவது உசிதமில்லை என கருதுகிறோம்."

இப்படி பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டவர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன். யூன் 18ஆம் திகதியன்று கொழும்பில் நடத்தப்படவிருந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தாமல் நிறுத்திவிட்டு அதற்கு கூறிய காரணம் தான் இது. 17ஆம் திகதியன்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையுடன் யோகராஜன் எம்பியும், ஏ.எம்.டி.ராஜனும் சென்று சமரசம் செய்துவிட்டு வந்ததும் விடுத்த அறிக்கை தான் இது.

இப்படி ஒரு ஆர்ப்பாட்டத்தையும், ஊர்வலத்தையும் எதிர்பார்த்து காத்திருந்தோர் பலர். பெருமளவான தமிழர்கள், மாணவர்கள், வர்த்தகர்கள், முற்போக்கு சக்திகள் என தன்னிச்சையாகவே இதற்கு தயாராகிக்கொண்டிருந்தார்கள் என்பது தான் உண்மை. ஆனால் வழமையாக மலையகத்தில் தொழிலாளர்கள் நடத்தும் தொழிற்சங்கப் போராட்டங்களின் போது இ.தொ.கா. செய்து வந்த அதே காட்டிக்கொடுப்பை இங்கும் செய்து காட்டியது இ.தொ.கா.

கொழும்பில் இந்த பிசுபிசுத்துப்போன ஆர்ப்பாட்டத்தை பற்றி பொதுவாக "எங்களுக்குத் தெரியும் இந்த கும்பல் இப்படிச் செய்யும் என" என்று ஆத்திரத்துடன் புலம்பியதைக் காணக்கூடியதாக இருந்தது.

பொதுவாக தென்னிலங்கையில் தொண்டமானையும் இ.தொ.கா.வையும் பற்றி சிங்கள மக்கள் மத்தியில், சிங்கள மக்களின் உரிமைகளைப் பறிக்கும் சக்திகள் என நீண்ட காலமாக கருத்தூட்டப்பட்டு வந்திருக்கிறது. அதன் இன்றைய வளர்ச்சி புலிகளின் பேச்சாளர் என்றும், புலிகளின் "God father" என்றும், சிங்கள மக்களை அழிக்க வந்தவர் என்றும் கூறுமளவுக்கு வந்திருக்கிறது.

மாறாக தொண்டமானோ குறைந்தது மலையக மக்களின் குறைந்தபட்ச நலன்களைக்கூட பெற்றுக்கொடுக்காதவர் என்பதும், சிங்கள அரசாங்கங்களுடன் தனது நலனுக்காக மலையக மக்களின் உரிமைகளை விலை பேசுபவர் என்பதும் யாவரும் அறிந்த உண்மை.

இதற்கு முன்னரும் தேசிய விடுதலை முன்னணி எனும் பேரில் 50களில் இயங்கிய ராஜரட்னா எம்.பி. தலைமையிலான கட்சி, சிங்கள பாஷா பெரமுன, சிங்கள பாதுகாப்புச் சபை, அதன் பின்னர் ஹெல உறுமய, ஜாதிக்க சிந்தனய, மத்ரு பூமி பக்ஷய, சிங்களயே மஹா சம்மத்த பூமி புத்திர பக்ஷய... என இன்னும் பல அமைப்புகள் இதே பாணியில் இயங்கி வந்திருக்கின்றன, வருகின்றன.

ஆனால் இப்போது வந்திருக்கின்ற சிங்கள வீரவிதான இயக்கம் முன்னைய இயக்கங்கள் போன்றது அல்ல. முன்னைய இயக்கங்களுக்கு வெறும் அரசியல் பின்னணி இருந்தது. அல்லது பொருளாதார பின்னணி இருந்தது. அவற்றின் நோக்கங்களாகக் கூட பெரும்பாலும் குறுகிய அரசியல் நோக்கங்கள் மட்டும் தான் இருந்தன. ஆனால் சிங்கள வீரவிதானவுக்கு இன்று நன்கு வார்த்தெடுக்கப்பட்ட பேரினவாத கருத்தாக்கம் இருக்கிறது. அந்த கருத்தாக்கத்தை வலிமைப்படுத்தி கோட்பாட்டக்கம் செய்யும் முக்கிய பணியில் தொடர்ந்து அவ்வியக்கம் வேலை செய்து வருகிறது. சிங்கள பௌத்த வர்த்தகர்கள் பலர் அதன் அமைப்பாளர்களாக உள்ளனர். முன்னை நாள் மற்றும் தற்போது களத்தில் இருக்கும் இராணுவ அதிகாரிகள் முக்கிய பொறுப்புகளில் உள்ளனர். நாடு முழுவதும் பல கிளைகள் அமைத்தாகிவிட்டது. சிறு சிறு பகுதிகளுக்கும் சென்று கிளைகளை அமைத்து வருகிறார்கள். துணை அமைப்புகளாக பெண்கள், அமைப்புகள் பிக்குகள் அமைப்புகள், வர்த்தக அமைப்புகள் மாத்திரம் 84 இருப்பதாக கடந்த ஏப்ரல் மாத அறிக்கை ஒன்றிலிருந்து தெரிய வருகிறது.

அப்படிப்பட்ட ஒரு முக்கிய உப அமைப்பாகத்தான் பயங்கரவாத ஒழிப்பியக்கமும் காணப்படுகிறது. இது மருதானை குண்டு வெடிப்போடு சேர்த்து ஆரம்பிக்கப்பட்டது. இதனை சிங்கள வீரவிதான அமைப்பின் உத்தியோகபூர்வ கிளை அமைப்பு என பகிரங்கமாக கூறாவிட்டாலும், அதன் அமைப்பாளர்கள், அதன் செயற்பாட்டுக்கான திட்டங்கள் என அனைத்து விடயத்தையும் சிங்கள வீரவிதானவே தீர்மானிக்கிறது என்பதை அது வெளியிட்டுவரும் "ஹெல ருவண" எனும் பத்திரிகையின் வாயிலாக அறிய முடியும். இது தவிர சர்வதேச கிளைகளும் அமைத்தாகிவிட்டது. அவற்றின் பங்களிப்பு, மற்றும் செயல்பாடுகள் குறித்தும் அப்பத்திரிகையில் தெரிந்துகொள்ளலாம்.

கடந்த இரு மாதங்களாக சிங்கள வீரவிதான இயக்கத்தின் உத்தியோகபூர்வ வெப் தளமும் நிறுவப்பட்டுள்ளது. அதன் விலாசம் www.svv.com என்பதாகும்..

இன்று இலங்கையில் எந்த இயக்கத்தின் செயற்துடிப்பையும் விஞ்சிவிடுமளவுக்கு இதன் செயல் வேகம் காணப்படுகிறது என்றால் அது மிகையில்லை. ஒவ்வொரு நாளும் அவர்களின் பணிகள் நடந்து கொண்டிருப்பதை சிங்கள தொடர்பூடகங்களை அவதானிக்கும் எவரும் அறிய முடியும். ஏற்கெனவே சிங்களவர்களை நிறுவனப்படுத்திக்கொண்டிருப்பது விகாரைகள். இந்த விகாரைகளை மகாசங்கத்தினர் மையப்படுத்தியுள்ளனர். நன்றாக வலைப்பினலாக நிறுவனப்படுத்தப்பட்டிருக்கிற இந்த கட்டமைப்பு அப்படியே இன்று வீரவிதான கட்டுப்படுத்துகிற ஒன்றாக மாறியிருப்பது வீரவிதானவுக்குள்ள முக்கிய பலமெனலாம்.

கடந்த மே 1ஆம் திகதி நுவரெலியாவில் இ.தொ.கா. மே தினம் நடத்தியபோது அதனை சிங்கள வீரவிதான இயக்கத்தினர் வந்து குழப்பினர். இதற்கு முன்னரும் மலையகத்திலி நடத்தப்பட்ட வேலை நிறுத்தப்போராட்டங்களின் போது கடையடைப்புகளை செய்ய விடாது மிரட்டியும், தாக்குதல் நடத்தியும் இருந்தனர்.

மேதின சம்பவம் முடிந்ததன் பின்னர் அது பற்றி சகல தொடர்பு சாதனங்களிலும் விவாதங்களும், பிரச்சாரங்களும், நடத்துகொண்டிருக்க இன்னொருபுறம் வீரவிதான இயக்கத்தினர் 20ஆம் திகதியன்று கொழும்வில் தமிழர்களுக்கு எதிராக இனவாதத்தைக் கக்குகின்ற சுலோகங்களைத் தாங்கிய வண்ணம் ஊர்வலம் நடத்தி விகாரமகாதேவி வெளியரங்கில் ஒரு மாபெரும் கூட்டமொன்றையும் நடத்தியிருந்தனர். இதில் பல முக்கிய இனவாதிகள் கலந்துகொண்டிருந்தனர். மடிகே பஞ்ஞாசீல தேரோவும் கலந்து கொண்டிருந்தார். பிரபலமான பாடகர்கள் இதில் சிங்களப் பெருமிதம் பேசும் பாடல்களைப் பாடினர். இறந்த படையினரின் குடும்பங்களுக்கு விருதுகள் வழ[illegible]னர். தங்களின் திட்ட[illegible]றுக்கொண்டால் ஒரு லட்சம் படையினரை ஒரே மாதத்தில் படைக்கு சேர்த்துத் தருவதாக பயங்கரவாத தேசிய இயக்கத்தின் தலைவர் சம்பிக்க ரணவக்கவால் பகிரங்கமாக தெரிவிக்கப்பட்டது. தமிழ் விஸ்தரிப்புவாதத்தை முறியடிக்க வேண்டும் என்றும் கொழும்பில் இருக்கும் தமிழர்கள் எல்லோரும் சிங்களவர்களை அனுசரித்து நடக்காவிட்டால் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்பன போன்ற வசனங்கள் பாவிக்கப்பட்டன. இதனை சுலோகங்களாகவும் எழுதியிருந்தனர்.



சிங்கள வீரவிதானவின் கொடி

இந்த நிகழ்ச்சிகள் பற்றி சிங்களப் பத்திரிகைகள் முக்கிய இடம் கொடுத்திருந்தன. டீ.என்.எல் சேவை இரண்டு மணி நேரம் அண்மையில் இந்த நிகழ்ச்சியை விளம்பரமின்றி ஒலி/ஒளிபரப்பியது.

இந்த நிலையில் தான் கடந்த தினம் பெரும் ஊர்வலம் மொன்றை பிக்குமார், சிங்கள வீரவிதான உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டு ஜனாதிபதியின் வாஸஸ்தலமான அலரிமாளிகைக்குச் சென்று அங்கு மகஜர் ஒன்றை கையளித்தனர். இலங்கையிலேயே மிகவும் அதி பாதுகாப்பு வலையம் என்று கூறப்படும் இந்தப் பகுதிக்கு எதுவித பொலிஸ் அனுமதியுமின்றி இவர்களால் ஊர்வலம் செல்ல முடிந்ததை இங்கு குறிப்பிட வேண்டும். அப்படி எந்த அனுமதியும் பெறவில்லை என்பதை பின்னர் பொலிஸ் மா அதிபரும் ஒப்புக்கொண்டிருந்தார்.

இந்த ஊர்வலம் முடிந்து திரும்பி சென்று கொண்டிருந்த வழியில் தான்



இ.தொ.கா.வின் தலைமைச் செயலகமான சௌமியபவான் அருகில் நின்று அங்கு ஏற்றப்பட்டிருந்த இ.தொ.கா. கொடியை கீழிறக்கி அதனை சின்னாபின்னப்படுத்திவிட்டு, வீரவிதான கொடியையும், தேசிய கொடியையும் ஏற்றினர். அவ்வலுகத்தின் வாசலில் இருந்துகொண்டு ஆர்ப்பாட்டமும் செய்து விட்டுச் சென்றனர்.

இந்தச் சம்பவம் உண்மையில் இ.தொ.கா.வின் கச்சையையும் உருவியதற்குச் சமமான சம்பவம் என்று தான் கூறவேண்டும். மே தின சம்பவத்தின் பின்பும் கூட வீரவிதானவின் பின்னணியில் அரசாங்கத்தைச் சேர்ந்த அமைச்சர் இருக்கிறார் என்று கூறிய தொண்டமான் யார் அவர் என்பதை வெளியுலகுக்கு வெளிப்படுத்தவில்லை. அந்த அமைச்சரைப் பாதுகாத்தார். அதுபோல அவரின் மீது நடவடிக்கை எடுக்கும்படி பத்திரிகைகளுக்கு விலாசமாக அறிக்கை விடுத்துவிட்டு அதனை செய்யக்கோரி எந்தவித முயற்சியையும் செய்யவில்லை.

அது போலத் தான் சொந்த அலுவலுக தலைமையகத்திற்குள் புகுந்து இத்தனையும் செய்துவிட்டுப் போனபின்னரும் வெளியுலகுக்குத்தான் தமது வீரத்தைக் காட்ட வழமைபோல வாய்ச்சவாடல் விட்டர்களே தவிர, ஆக்கபூர்வமான எதனையும் செய்யவில்லை. இவர்களையும் நம்பி அகில இலங்கை தமிழ் காங்கிரசின் தலைவர் குமார் பொன்னம்பலமும், நவசமசமாஜக்சட்சியினர், வாசுதேவ நாணயக்கார என சகலரும் இதற்கெதிராக ஒன்று கூடினர். சிங்கள வீரவிதானவின் பேரினவாதத்தை எதிர்த்து ஒரு மாபெரும் பேரணி ஒன்றை திட்டமிடுவது குறித்து உரையாட 8ஆம் திகதி சுகததாச ஹோட்டலில் வைத்து நடத்திய கூட்டத்தில் மேற்படி தலைவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். அக்கூட்டத்தில் பெருமளவு வர்த்தகர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இறுதியில் 11ஆம் திகதி இந்த பேரணியை நடத்த திட்டமிட்டனர். குமார் ஒரு புறத்தில் தமிழர்கள் அனைவரையும் இந்த கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுத்தார். விக்கிரபாகு தலைமையிலான ந.ச.ச.க. இன்னுமொரு புறத்தில் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து அழைத்தனர். வாசுதேவ நாணயக்கார பல தொண்டர் நிறுவனங்களை இந்த நடவடிக்கையில் பங்குகொள்ளச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுக்கொணடிருந்தார். வர்த்தகர்கள் பலர் கடையடைப்பு செய்து தங்களின் எதிர்ப்புகளை காட்டப்போவதாக அறிவித்தனர். சாதாரண மக்கள் இதனைக் கண்டு தைரியமாயினர் என்றால் மிகையில்லை.

இப்படி எல்லோரும் தயாராகிக் கொண்டிருந்தனர். இந்த சந்தர்ப்பத்தில் ப்ார்த்து பொலிஸ் மா அதிபர் இ.தொ.கா.-வினரை அழைத்து, தென் மாகாண சபைத் தேர்தல் கடமைகளுக்காக பொலிஸார் பலர் அனுப்பப்பட்டுள்ளதால் இதனை கைவிடுமாறு அழுத்தம் கொடுத்துள்ளனர். இந்தத் தடையை அப்படியே ஏற்றுக்கொண்டு வந்துவிட்டனர். குறைந்தபட்சம் இவர்களோடு இணைந்து போராடத் தயாரான அமைப்புகள், கட்சிகளைக் கூட கலந்தாலோசிக்கவில்லை. அது மட்டுமன்றி அவர்களுக்கு இந்த தகவல் கூட அறிவிக்கப்படவில்லை. அவர்களுக்கு வெளியார் கூறித் தான் தகவல் தெரிந்திருந்தது.

இ.தொ.கா.வுக்கு இப்படி ஒரு சந்தர்ப்பத்தை தான் நினைத்திருந்தாலும் உருவாக்கியிருக்க முடியாது. அப்படியொரு சூழ்நிலை தற்செயலாக உருவாகியிருந்தது. அதனை பயன்படுத்த இ.தொ.கா. தயாராக இருக்கவில்லை.

சிங்கள வீரவிதானவின் ஊர்வலம், கூட்டம் என்பன எந்த அனுமதியும் பெறாமல் நடத்தி முடித்திருந்தது. அதற்குப் பின்னரும் கூட அவர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்காத பாதுகாப்பு தரப்பினர், இ.தொ.கா.வின் ஊர்வலத்தை தடை செய்தமை பற்றி அரசை கண்டிக்கவில்லை. அரசின் பேரினவாத சார்பை அம்பலப்படுத்தவில்லை. மாறாக எந்த அவசரகால சட்டத்தைக் காட்டி தங்களின் ஊர்வலம் தடை செய்யப்பட்டதோ அதே அவசரகால சட்டத்துக்கு 15ஆம் திகதியன்று ஆதரவாக வாக்களித்துவிட்டுவந்தனர். தொண்டாவும், சிஷ்யகோடிகளும். காலாகாலமாகச் செய்து வரும் இந்தத் துரோகத்தின் மத்தியில் பின்னர் வந்த எதிர்ப்புணர்வுகளைக் கண்டு, அனுமதி கிடைக்கிறதோ இல்லையோ 18ஆம் திகதியன்று கூட்டம் நடத்தியே தீருவது என அறிவிக்கப்பட்டது.

ஆனால் 17ஆம் திகதியன்று பிரதிபாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை யோகராஜன் எம்பியை அழைத்துப் பேசியதன் பின் அவரோடு சமரசம் செய்து வந்ததுமில்லாமல், "நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் வாக்குறுதி அளித்திருப்பதால் கைவிடுகிறோம்" என அறிவித்தார். அனுருத்த ரத்வத்தை இது வரை மக்களுக்கு அளித்திருக்கும் எந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அவர் தனது சொந்த மக்களுக்கு யுத்தக் காலக்கெடு பற்றியும் தான் பல வாக்குறுதிகளை வழங்கியிருகக்கிறார். முடிந்திருக்கிறதா அவரால்? பண்ண முடியாதவற்றையெல்லாம் வாக்குறுதிகளாக அறிவிப்பதில் கெட்டிக்காரர்களிடம் வாக்குறுதிக்காக நாடி நிற்பதும், அளித்த வாக்குறுதியை நம்பி வந்ததும், அதே வாக்குறுதியை மக்களையும் நம்பச் சொல்வதையும் விட முட்டாள் தனம் வேறென்ன உண்டு?

ஆனால் யோகராஜன் எம்.பி.க்கு உண்டு. இ.தொ.கா. ஊர்வலத்தை நடத்தியதோ இல்லையோ சிங்கள வீரவிதான அதனை எ[illegible] கொள்ளத் தயராகத் தான் இருந்தது. இ.தொ.கா. தயராரிப்புகளைச் செய்ததோ இல்லையோ வீரவிதான 17ம் திகதி அன்று ஒரு துண்டுப்பிரசுரத்தை பகிரங்கமாக விநியோகித்தது. கொழும்பில் பொரல்லை, மருதானை, கிருளப்பனை, நுகேகொடை போன்ற இடங்களில் விநியோகித்திருந்தது. அதில் "...கொழும்புவாழ் தமிழர்களுக்கு நாம் விடுக்கும் எச்சரிக்கை, கொழும்பிலிருந்து கொண்டு தென்பகுதி சிங்கள மக்களின் சுதந்திரத்தைப் பறிக்கின்ற முயற்சியில் ஈடுபட வேண்டாம். அப்படி முயற்சித்தால் பாரதுரமான விளைவுகளை எதிர்நோக்க வேண்டி நேரிடும்...." என்றிருந்தது.

இந்த மிரட்டலையும் மீறி நான்காம் குறுக்குத் தெரு, மெயின் வீதி, போன்ற புறக்கோட்டைப் பகுதிகளில் உள்ள தமிழ்க்கடைகள் பல 18ஆம் திகதி கடையடைப்பு செய்திருந்தன. அந்தளவுக்கு தயாரில்லாது இருந்த இ.தொ.க.வோ, தன்னெழுச்சியாக அன்று தயாராக இருந்தவர்களை ஏமாற்றிவிட்டிருந்ததுமல்லாமல், அன்றைய தினம் கடையடைப்புகளுக்கு தாம் தான் காரணம் என சொந்தம் கொண்டாடுவதில் மட்டும் பின்நிற்கவில்லை!

இ.தொ.கா. அப்போதும், இப்போதும், எப்போதும் இப்படித்தான் நடந்து கொள்கிறது. இன்று இ.தொ.கா. மக்கள் மத்தியில் உள்ள கொஞ்ச நஞ்ச செல்வாக்கு வேறு மாற்று சக்தி இல்லாததன் காரணமாகவே ஒழிய அதன் பலத்தால் அல்ல. அதன் வெற்றியால் அல்ல. அதன் அஸ்தமனத்துக்கு சரியான மாற்று சக்தி இல்லாதது தான் இ.தொ.கா.வுக்கு வாய்ப்பாகப் போயிருக்கிறது என்பதை இ.தொ.கா உணரும் காலம் வந்துவிட்டது.

சிங்கள இனவாதத்தின் குறியீடாக இத்தனை காலம் அறியப்பட்ட நளின் டி சில்வாவே கூட கடந்த மே 16 ஞாயிறு திவய்ன பத்திரிகையில் எழுதிய தனது பத்தியில் சம்பிக்கவையும், சிங்கள வீரவிதான இயக்கத்தையும் பற்றி எச்சிரித்திருப்பதுடன், சிங்கள தேசியவாத இயக்கங்களில் பாசிசம் தலைத்தோங்கத் தொடங்யிருப்பதையும், இது வன்முறையை நோக்கியும், மோசமான இன அழிப்பை நோக்கியும் தான் கொண்டு செல்லும் என்றும் எழுதியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சிங்கள பேரினவாதத் தர்ப்பிலேயே சிங்கள வீரவிதான இயக்கம் குறித்து இத்தனை விழிப்பாக இருக்கக் கோரும் எச்சரிக்கைகள் வெளிவந்துகொண்டிருக்க, அவற்றுடன் சமரசத்துக்குப் போகும் எமது தலைவர்களை என்ன செய்யலாம்?

— முகுந்தன்



# அஷ்ரஃபின் அதிரடி விஜயங்கள்: அதிருப்தியின் உச்சமும் அரங்கேறிய அடாவடித்தனங்களும்..!

முஸ்லிம் காங்கிரஸ் தொடர்பான மீண்டுமொரு மறுபக்கப் பார்வையைப் பார்க்கும் சந்தர்ப்பம் அதன் தலைவர் அவர்களின் அண்மைக்கால 'ஏரியா' விஜயங்களினால் ஏற்பட்டுள்ளது. அஷ்ரப் விஜயம் செய்த 'ஏரியா'க்கள் தொடர்பில் சில விடயங்களைக் குறிப்பிட்டாக வேண்டும். அவர் இம்முறை கிழக்கின் சில முக்கிய பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். பொதுவாக கிழக்குப் பிராந்தியம் ஏதோ ஓர் தேர்தலை எதிர்கொள்ள இருப்பதே இவ்விஜயங்களுக்கான அடிமுதற் காரணியாகக் கொள்ளப்படுகிறது. அவர் விஜயம் செய்த பல பிரதேசங்களில் முஸ்லிம் காங்கிரஸில் பெரிதும் அதிருப்தி நிலவும் மூன்று முக்கிய இடங்கள் இருக்கின்றன. அவை மூதூர், கிண்ணியா, காத்தான்குடி என்பனவே.

திருமலை மாவட்ட மூதூர் - கிண்ணியா பிரதேசங்கள் பல வருடங்களுக்கு முன்னரேயே மு.கா. மேல் அதிருப்தியுற்ற இடங்களாக விளங்கின. பல வருடங்களுக்கு முன்னரேயே அஷ்ரஃப் கிண்ணியாவிற்குச் சென்றபோது தக்காளியெறி, கல்லெறி, சொல்லெறிக்குட்பட்டவர். (இவற்றைச் செய்வதில் முன்னின்றவர்கள் அண்மைய விஜயத்தின் போது மாலையணிவித்து பொன்னாடை போர்த்தி பிராயச்சித்தம் தேடிக்கொண்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.)

மு.கா பொதுச் செயலாளர் ரவூப் ஹக்கீம் கடந்த வருடம் மூதூருக்குச் சென்ற போதும் பலத்த அவமானப்படுத்தப்பட்டு திருப்பியனுப்பப்பட்டார். காத்தான்குடி, அமைச்சரினதும், தலைவரினதும் புறக்கணிப்புக்குள்ளாவதாகக் கருதப்படுவதனாலும் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வின் அதிருப்தியான சில நடவடிக்கைகளாலும், தென்கிழக்கு கோரிக்கையாலும் அதிருப்தி அலைகள் திரண்ட இடமாக இது இருந்தது.

உண்மையில் இம்மூன்று இடங்களும் மு.காவின் அரசியல் நிலைப்பாட்டுக்கு மிக முக்கியமாகத் தேவைப்படுகிற தளங்களைக் கொண்டதாகும். இவற்றின் முக்கியத்துவத்தை மு.கா. நன்கு உணர்ந்தே வந்துள்ளது. எதிர்கால இலக்குகளை மையப்படுத்தி இவ்விடங்களை தரிசிக்கும் பணியை அஷ்ரஃப் நன்கே திட்டமிட்டார். இதற்கு அவரின் அமைச்சுப் பதவியும் நன்கு உதவியது. புனர்வாழ்வு உதவி, நஷ்டஈடு நிவாரணம் என்ற பெயர்களில் தனது 'திறமை'யை, அரசியல் சாணக்கியத்தை பிரயோகித்தார். அதன்படி விஜயங்களை மேற்கொண்டு வந்தார் எனினும், மேற்குறித்த பிரதேசங்களில் முஸ்லிம் காங்கிரஸ்க்கான வரவேற்பு மிக மோசமாக இருந்ததையே நிகழ்ந்த சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

மூதூருக்கு அமைச்சர் அஷ்ரஃப் விஜயம் செய்ய ஒரு மாதத்திற்கு முன்னமிருந்தே அதற்கான எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு சிலர் தயாராகி வந்தனர். கடையடைப்புச் செய்வதென்றும் கறுப்புக்கொடி கட்டுவதென்றும் தீர்மானித்திருந்தனர். எனினும், எடுபிடிகளின் பலத்த கண்காணிப்பால் அவ்வாறு இடம்பெறவில்லை. மூதூரில் இவருக்கெதிரான துண்டுப்பிரசுரங்கள் (உதாரணம்: பவுடர் பபா, கப்பல் எங்கே? இன்னுமா தேங்காய் திருவுகிறாய் - காலஞ்சென்ற ஐ.தே.க. எம்.பி. மஹ்ரூபைப் பார்த்து அஷ்ரப் கேட்ட அதே வார்த்தைகளைக் கொண்டே அஷ்ரபும் கிண்டலடிக்கப்பட்டிருக்கிறார்.) வெளியிடப்பட்டுள்ளன. 'அமைச்சர் வருவார்' என்ற தலைப்பில் கிண்டலான கவிதையொன்றும் வெளியிடப்பட்டுள்ளது. அங்கு இடம்பெற்ற கூட்டத்திலும் கூட உணர்ச்சிவசமான எந்தப் பேச்சுக்களும் கைதட்டல்களும் இடம்பெறவில்லை. அத்துடன் நிவாரணம், நஷ்டஈடு வழங்கல் என்பவற்றுக்காக ஒழுங்குபடுத்தப்பட்ட மூதூர், கிண்ணியாக் கூட்டங்களில் நஷ்டஈட்டுக்குரியவர்கள் நீண்ட நேரம் காக்க வைக்கப்பட்டு கூட்ட முடிவு நேரத்தின் போது நாலைந்து பேருக்கு வழங்கி ஏனையோரை பிரதேச செயலகத்தில் பெறுமாறு வேண்டினர். கிண்ணியாவில் இவ்வாறு வேண்டப்பட்டவர்கள் 'இடைத் தரகர்களின்' இலஞ்சக் கோரிக்கைக்கு உள்ளாகியிருப்பதாக நம்பகரமான தகவல்களும் கிடைக்கின்றன. உதாரணத்திற்கு இது தொடர்பான கையெழுத்து ஒன்றுக்காக ஓர் ஏழைப் பெண்மணியிடம் கிராம சேவகர் ஒருவர் ரூபா ஐயாயிரம் கோரியுள்ளார். இன்னொருவரிடம் அதிகாரி ஒருவர் மூப்பதாயிரம் அளவில் கோரியுள்ளார். இதெல்லாம் தெரியாமல் தலைவர்கள் வந்தார்கள், போனார்கள் என்பது வேறு விடயம்.

மூதூரைப் பொறுத்தவரை மக்கள் எதிர்கொள்ளும் மிக அடிப்படையான பிரச்சினை கடற்போக்குவரத்துக்கான கப்பல்சேவை. இதுபற்றி நிறையக் கதைத்தும், எழுதியும், அறிக்கைகள் சமர்பித்தும் ஆயிற்று. நடந்தது ஒன்றுமில்லை. அஷ்ரஃப்பின் விஜயத்தின் மூலமும் அது நடக்குமென்று பார்த்தார்கள். நடக்கவில்லை. டக்ளஸ் எம்.பியின் வேண்டுகோளின்படி அமைச்சர் பௌஸியால் கப்பல் கொள்வனவுக்காக 45 லட்சம் ஒதுக்கப்பட்டதாகவும் அறியமுடிகிறது. அது அரசியல் உள்வீட்டு இழுபறிகளுக்கு ஆளாகிவிட்டதோ எனவும் தற்போது அச்சப்பட வேண்டியுள்ளது.

அஷ்ரஃப்பின் கிண்ணியா விஜயத்திலும் பல அதிருப்தியான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. 'நயவஞ்சகன் அஷ்ரப்பிற்கு வரவேற்பா?' என்ற தலைப்பில் 'இளம் சந்ததிகள்' என்ற பெயரிட்டு துண்டுப் பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இதில் சுமார் 23 விடயங்கள் அளவில் மிகவும் காரசாரமான முறையில் எழுதப்பட்டிருக்கின்றன. வேலைவாய்ப்பில் அம்பாறை மாவட்டத்தவர்களுக்கான முன்னுரிமை, பிரதேச பாகுபாடு, திருமலை மு.கா. பட்டியல் எம்.பியின் கையாலாகாத்தனம் மற்றும் அஷ்ரஃப்பின் புறக்கணிப்பு நடவடிக்கைகள் என இப்பிரசுரம் காரசாரமான கேள்விகளை எழுப்புகிறது.

கிண்ணியாவில் அமைச்சரின் அடிக்கல் நடுகைக்காக ஐ.தே.கவால் கட்டப்பட்ட ஒரு சந்தை இரண்டு நாட்களில் தரைமட்டமாக்கப்பட்டிருப்பதும் இன்னொரு விசனிக்கத்தக்க விடயமாகும். கிண்ணியா புஹாரியடி பாலத்தருகே பல லட்சம் செலவில் அமைக்கப்பட்ட சந்தை உடைக்கப்பட்டு அவ்விடத்தில் நூலகத்திற்கான அடிக்கல் இடப்பட்டுள்ளது. தரைமட்டமாக்கலுக்கு 32 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. கிண்ணியாவில் நூலகத்திற்குத் தோதான வேறிடங்கள் இருக்கையில் இவ்வாறு நிகழ்ந்திருப்பது அரசியல் வக்கிரத்தனத்தையே காட்டுகிறது.

கிண்ணியாவைப் பொறுத்தளவில், நஜீப் எம்.பி. முஸ்லிம் காங்கிரஸ் தலைவரால் ஆட்டுவிக்கப்படுகிறார் அல்லது சில விடயங்களில் ஏமாற்றப்படுகிறார் என்றே கருதப்படுகிறது. நஜீப் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர். தேர்தலில் வென்றது மு.கா பட்டியலில். இதனால் செயற்படுவதற்கான நெருக்கடிகளை அவர் எதிர்கொள்கிறார். அவ்வாறில்லாவிட்டாலும் இவர் ஏதாவது செய்திருப்பாரா என்பதும் கேள்வி தான்! முஸ்லிம் காங்கிரஸால் நஜீப் ஓரங்கட்டப்படுகிறார் என்பதற்கு உதாரணமாக கல்லூரி அடிக்கல் நாட்டு மற்றும் நினைவுக் கல் திறப்பின் போது அதில் நஜீப் எம்.பியின் பெயர் போடப்பட்டிருக்கவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்கள் சிலர். இது போக அன்றைய விஜயத்தின் போது பல சுவர்களில் மிக மோசமாக அஷ்ரஃப் திட்டப்பட்டிருந்தார். வீதியோரச் சோடனைகளும் அதிருப்தியாளர்களால் வீசியெறியப்பட்டுமுள்ளன.

நஜீப் ஒரு சந்தர்ப்பவாதியாகவே இத்துண்டுப்பிரசுரத்தில் சித்திரிக்கப்படுகின்றார். 'கிண்ணியாவின் எதிர்காலத்தை இளைஞரின் எதிர்பார்ப்பை, நியாயமான கோரிக்கைகளை அவமதிப்பவர் என அவர் விளிக்கப்பட்டுள்ளார்.



அத்துடன் தொழில் வழங்கும் நடவடிக்கைகளில் உத்தியோகபூர்வமாக அழைக்கப்பட்டு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கு தொழில் வழங்காது தனது உறவுக்காரர்களுக்கு வழங்குகிறார் என்ற குற்றச்சாட்டும் அவர் மேல் உள்ளது. 96ம் ஆண்டில் பெற்றோலியக் கூட்டுத்தாபன நேர்முகப்பரீட்சைக்குச் சென்ற 23 பேரில் எவருக்கும் தொழில் வழங்கப்படவில்லை. இத்தனைக்கும் இவர்கள் கட்சியின் தீவிர உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அஷ்ரஃப் அவர்கள் விஜயம் செய்த மற்றொரு அதிருப்தியான இடம் காத்தான்குடியாகும். இங்கு ஏனைய குறித்த இரு பிரதேசங்களைவிட பலத்த எதிர்ப்பு நிலவியுள்ளது.

12.06.99 சனியன்று காத்தான்குடி பிரதேச சபையை நகரசபையாக்கும் வைபவத்திற் கலந்து கொள்வதற்காகவே அமைச்சர் விஜயம் மேற்கொண்டார். இந்நிகழ்வுக்கு அமைச்சர் அலவி மௌலானாவும் வருவதாக இருந்ததாகவும், சுகவீனம் காரணமாக அவரால் வரமுடியாது போனதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காத்தான்குடியில் (மு.காவின் அடித்தளம் இங்கே தான் இடப்பட்டது என்பது சுட்டிக் காட்டத்தக்கது.) எதிர்ப்பலைகள் எழும்ப பிரதான விடயமாகிப் போனது முஸ்லிம் காங்கிரஸின் / அஷ்ரஃபின் தனியான மாகாணசபை என்றதிலிருந்து தேய்ந்து கட்டெறும்பாய்ப் போன தென்கிழக்கு அலகு என்பதாகும். தென்கிழக்கு அலகால் பாதிக்கப்படும் என்று கருதப்படும் முஸ்லிம் பிரதேசங்களில் மட்டக்களப்பு மாவட்ட காத்தான்குடியும் முக்கியமானதாகும். தென்கிழக்கு அலகு பற்றிய பாதக அம்சங்களை பொறியியலாளர் அப்துர் ரஹ்மான் என்பவர் சிறு வெளியீடாகக் கொண்டு வந்தார் என்பது மேலதிகத் தகவல்களுக்கு உகந்தது.

இவ்வருகைக்கு முன்னர் பிரச்சினையான இன்னொரு சம்பவமும் நிகழ்ந்துள்ளது. அதாவது காத்தான்குடி எல்லை வரைபடத்தை வரையும் விடயத்தில் காத்தான்குடியின் சில பிரதேசங்கள் அதில் சேர்க்கப்படாது விடப்பட்டிருக்கின்றன. இது வரைந்தவரின் திட்டமிட்ட செயலா, அல்லது அரசியல் விளையாட்டுக்களின் தாரைவார்ப்பா என்பது தெரியாமல் இருக்கிறது. பின்னர் இடம்பெற்ற கூட்டத்தில் இது தவறுதலாக இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டாலும் கடந்த 14.06.1999 இப்பிரதேசவாசிகள் எதிர்ப்பார்ப்பாட்டம் நடாத்தும் வரையிலும் எதுவித திருத்தங்களும் மேற்கொள்ளப்படவில்லையென்றே தெரிகிறது.

குறித்த தென்கிழக்கு அலகின் பாதக அம்சங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே அஷ்ரப்பின் வருகையன்று சிலர் நோன்புப் போராட்டம் ஒன்றை மௌலான கபுறடியருகே நடாத்தினர். இது அன்றைய தினம் 7 மணியளவில் 15 நோன்பாளிகளுடன் சில எதிர்ப்புச் சுலோக அட்டைகளுடன் ஆரம்பமானது. "தென்கிழக்கை கைவிடு", "நீ இழந்தது தலை முடியை, நாம் இழந்தது முஸ்லிம் மாகாணத்தை", "விகிதாசாரப்படி வேலை வழங்கு", "மட்டு, திருமலை முஸ்லிம்களை நட்டாற்றில் விடாதே" என்பன போன்ற பதாதைகள் எழுதப்பட்டிருந்தன.

காலை 8.45 மணியானபோது பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாவின் கையாட்கள் எனச் சொல்லப்பட்டோர் சுமார் 8 மீட்டர் நீளமான வெள்ளைத் துணியில் "உன்னத தலைவர் அஷ்ரஃபே வருக" என்று எழுதி பொலிசாருடன் அவ்விடம் வந்து, உண்ணாவிரதிகளின் முகம் மறையுமாறு பதாதையொன்றை எதிர்ப்புக்கு மத்தியிலும் கட்டிவிட்டுச் சென்றனர் சிலர். அத்துடன் எதிர்ப்புக்காகக் கட்டப்பட்டிருந்த கறுப்புக் கொடிகளையும் அவிழ்த்துச் சென்றனர். சற்று நேரம் கழித்து 'முஸ்லிம்களின் தன் மானம் காத்த தானைத் தலைவரே வருக" என்று எழுதப்பட்ட மற்றொரு பதாகையையும் கொணர்ந்து அனைவரையும் மறைத்து கட்டிவிட்டுச் சென்றனர். பிற்பகல் 2 மணியளவில் தென்கிழக்கு அலகை எதிர்த்து நின்றவர்களால் அவ்விரு பதாதைகளும் கழற்றப்பட்டு தீயிடப்பட்டன. 2.30 மணியளவில் திடீரென அவ்விடம் வந்த பிரதியமைச்சர் கையாட்களின் உதவியுடன் (பொலிசாரும் உடன் நின்றனர்) "தென்கிழக்குக்கு எதிரான சாத்வீகப் போராட்டம்' என்று எழுதப்பட்ட கறுப்பு பதாதையை தனது கைகளாலேயே கிழித்துவிட்டு, தூஷண வார்த்தைகளால் அங்கு நின்றவர்களுக்கு ஏசிவிட்டுச் சென்றார்.

மாலை 5.15 மணியளவில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் ஏனையோரும் வருகையில் எதிர்ப்புக்களைக் கண்டு விடாமலிருக்க எதிர்ப்பாளர்களை கையாட்களை ஏவி தாறுமாறாக தாக்கச் செய்தார் பிரதியமைச்சர். இதனால் தூண்டப்பெற்ற அங்கிருந்த அதிருப்தியாளர்கள் பிரதி அமைச்சரை நோக்கி கற்கள், போத்தல், ஓடுகளை எறிந்துள்ளனர். இதன்போது கையாட்கள் சவள், தடி, அலவாங்கு போன்றவற்றால் அங்கிருந்தவர்களைத் தாக்கினர். பொலிசாரும் எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்து மக்களைக் கலைக்க முயன்றும், அவர்கள் செல்லாததால் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை பிரயோகித்து விரட்டியுள்ளனர். இந்த அமளி துமளி சுமார் அரை மணித்தியாலம் வரை இடம்பெற்றது. துப்பாக்கி வேட்டொலிகள், இடம்பெற்ற பிரச்சினைகள் யாவையும் அஷ்ரப் சற்று தூர இருந்து கேட்டுக் கொண்டிருந்தார். இதன் பின்னர் எஸ்.டி.எப். பொலிசார் புடைசூழ கூட்டமேடைக்கு அவர் அழைத்து வரப்பட்டார்.

இந்த அடாவடித்தனங்களின் பின்னணியில் தான் பல லட்சம் செலவளிக்கப்பட்ட விழாவில் அமைச்சர் கலந்து கொண்டு தன் அரசியல் பேச்சாற்றலை வெளிக்காட்டியுள்ளார். அன்றைய கூட்டத்தில் அதிகமாகப் பெண்கள் கலந்து கொண்டமையையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். மற்றும் மக்கள் பெரிதும் எதிர்பார்த்த தென்கிழக்கு அலகு பற்றிப் பேசாது முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் சாதுர்யமாக நழுவிக் கொண்டனர். பெண்களைக் கவர்ந்து கவிழ்க்கும் விதத்தில் "நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு மூன்று வயதில் தைத்த சட்டையை இப்போது போடுவீர்களா?" என சூசகமாகப் பேசி நழுவியுள்ளனர். மூதூர்க் கூட்டத்திலும் இது பற்றி வினவப்பட்டபோது 'இது தொடர்பில் இன்னும் மூன்று மாதத்தில் ஒரு கருத்தரங்கு ஏற்பாடு செய்து விளங்கப்படுத்துவோம்" என்று கூறப்பட்டிருக்கிறது.

காத்தான்குடி சம்பவத்தின் பின்னணியில் பிரதேச சுதந்திரக் கட்சி அமைப்பாளரே முன்னின்று திட்டமிட்டு நடத்தினாரென்றும், இதற்கு அலவி வாழ்த்துத் தெரிவித்தாரென்றும் குற்றச்சாட்டுக்களும், மறுப்பறிக்கைகளும் பத்திரிகைகளில் வெளிவந்தன. எனினும், இதனை மக்களிடையே எழுந்துள்ள எதிர்ப்பலைகளை மறைக்க உருவாக்கப்பட்ட ஒரு கயிறாகவே கொள்ளமுடிகிறது. ஏனெனில், முஸ்லிம் காங்கிரஸ் தொடர்பான அதிருப்திகள் குறித்த இப்பிரதேசங்களில் எப்போதோ வேர் விட்டு வளரத் தொடங்கியுள்ளன என்பது அவதானிக்கத்தக்கது.

இதில் அண்மையாக அவதானிக்கத்தக்க இன்னொரு விடயம் சாதுவான ஹிஸ்புல்லாவின் அதிரடி நடவடிக்கைகள். இவரின் இன்னொரு நடவடிக்கை பற்றி கடந்த சரிநிகர் இதழிலும் வெளியானது குறிப்பிடத்தக்கது. தனக்கான ஓர் அடிதடிக்கும்பலொன்றை இவர் வைத்துள்ளார் என்பது இப்போது வெள்ளிடை மலை. குறித்த காத்தான்குடி அடாவடித்தனங்களில் 'சலுசல....' நபரொருவர் பிரதான பாத்திரம் வகித்துள்ளார்.

இவைதான் அமைச்சர் அஷ்ரஃபின் குறித்த பிரதேசங்களுக்கான விஜயத்தின் மறுபக்க நிகழ்வுகள். இவ்விஜயங்களின் நேரிடையான விடயங்கள், தாவல்கள், தழுவல்கள், பூச்சுற்றல்கள் எல்லாவற்றையும் வாசகர்கள் அரச மற்றும் பிற ஊதுகுழல்கள் மூலம் அறிந்திருப்பீர்கள் அல்லவா!

# புதைகுழியிலிருந்து புதைகுழியை நோக்கி.....!

சந்திரிகாவின் பொ.ஜ.மு. அரசாங்கத்திற்கும் புதைகுழிகளுக்கும் உள்ள சம்பந்தம் பற்றி யாராவது சிந்தித்துப் பார்திருக்கக் கூடும்.

எம்பிலிப்பிட்டிய மனிதப் புதைகுழிகளைத் தோண்டுவதுடன் அம்மையாரின் ஆட்சி ஆரம்பமானது. மாணவர்களிடையே ஏற்பட்ட ஒரு சிறு சம்பவம் ஒரு வகுப்பு மாணவர்கள் அனைவரையுமே புதைகுழிக்கு அனுப்புவதில் போய் முடிந்த கதை இன்று பிரசித்தமானது. அந்தப் புதைகுழிகளுக்கு நேரிலேயே போய் அவை தோண்டப்படுவதை பார்த்து, இவ்வளவு மோசமான வக்கிர உணர்வு கொண்டவர்களும் படையில் இருக்கிறர்கள் என்று தெரிந்து கொண்ட போது அம்மையார் மேல் மாகாண சபை முதலமைச்சராக இருந்தார். ஐ.தே.க.வின் 17வருட ஆட்சிக்கால அட்டுழியங்களுக்கும் மனிதப் படுகொலைக்கும் சிகரம் வைத்தால் போல், இந்த அட்டூழியங்களைப் புரிந்த அதே படையின் உறுப்பினர்களால் நடாத்தப்பட்ட இந்தச் சம்பவம் நிகழ்ந்திருந்தது.

எல்லாவிதமான இத்தகைய அனர்த்தங்களுக்கும், அப்பாவிப் பொதுமக்கள் புதை குழிகளுக்கு அனுப்பப்படுவதற்கும் காரணமான யுத்தத்தை ஒழிக்க வேண்டும், சமாதானத்தை இந்த நாட்டில் மீளக் கொண்டுவரவேண்டும் என்று உணாச்சி மிகுந்தவராய் அவர் முழங்கினார்.


ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் தீவிரமாக நடந்து கொண்டிருக்கும் போது கொழும்பு தொட்டலங்கவில் நடைபெற்ற குண்டு வெடிப்பின் பின்னர், பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை புலிகளுடன் அவர்கள் விரும்பினால் நாம் யுத்தம் என்ற மொழியிலும் பேசத் தயார் என்று அறிவிக்கையில், பதட்டமடையாமல், பேச்சுவார்த்தையின் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார் சந்திரிகா. ஆனால், அவர் ஜனாதிபதியாகி, முப்படைக்கும் தலைவராகிய பின்னர், அதற்கு முன்பு பேசிய பல விடயங்களை கொஞ்சம் கொஞ்சமாக மறந்துபோகத் தொடங்கினார். குறிப்பாக எம்பிலிப்பிட்டிய படுகொலைகளில் சம்பந்தப்பட்டவர்கள் என்று கருதப்பட்ட இராணுவ அதிகாரிகள், மற்றும் சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டவர்கள் எனப் பொதுவாகக் குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிகளில் பெரும்பாலானோர் அதே பதவிகளில் தொடர்ந்தும் இருந்தனர். அதுவும், புலிகளுடனான பேச்சுவார்த்தை முறிவடைந்து, யுத்தம் ஆரம்பமான பின், தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டிருந்தவர்கள் கூட மீளவும் வடக்கு கிழக்குக்கு அனுப்பப்பட்டனர்.

யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தைக் கொண்டு வருவது என்ற அரசாங்கத்தின் முடிவு, யுத்தம் மூலம் சமாதானத்தைக் காண்பது என்பதாகச் சுருதி மாறியது. வடக்குக்கான பாதையைத் திறப்பது, யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவது, இராணுவத்தை ஒரு தொழிற்துறை நிபுணத்துவம் வாய்ந்த இராணுவமாக, நவீன ஆயுதங்களைக் கொண்டதாக வளர்த்தெடுப்பது இத்தியாதி விடயங்களால் யுத்தத்தை மிகக் குறைந்த உயிர்ச்சேதம் பொருட்சேதத்துடன் நடாத்தி வெற்றி பெறுவது, இதன் மூலம் சமாதானத்தை காண்பது என்று புதிய திட்டத்தை அவரது அரசாங்கம் அறிவித்தது.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த போது, ஐ.தே.க. அரசாங்கத்திற்குப் பதில், ஒரு ஜனநாயக அரசாங்கம் வந்துவிட்டது, தமிழ் முஸ்லிம் மக்கள் இனிமேல் நிம்மதியாக இயங்கலாம், இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு நிச்சயம் கிடைத்துவிடும் என்று நம்பியவர்கள் பலர். இலங்கையின் ஜனநாயக சக்திகள் பலரும், வழமைபோல, வரலாற்றுப் படிப்பினைகளை உதாசீனம் செய்துவிட்டு, அதிசயம் நடக்கப்போவதாக நம்பிக்கை தெரிவித்தனர். பரந்துபட்ட மக்களிடம் அந்த நம்பிக்கையை அரசாங்கத்தின் ஏஜன்டுகளை விட வேகமாகவும் தீவிரமாகவும் விதைக்கப் பாடுபட்டனர். வரலாற்றில் தமக்குள்ள பாத்திரத்தை மறந்தவர்களாக, தாம் நினைப்பதும் பேசுவதுமே சரி என்ற மனப் பிராந்தியுடன் அரசாங்கத்தை தூக்கிப் பிடித்தனர்.

மனித உரிமைகளுக்காகச் செயற்படுவதாக தம்மைக் கூறிக் கொள்ளும் பல சக்திகளும் இந்த மனப்பிராந்திக்கு உள்ளாகினர். அரசாங்கத்திற்கு ஜனநாயகத்தையும் சமாதானத்தையும் மீட்டெடுக்க இலவச ஆலோசனை வழங்குவதே தமது வரலாற்றுக் கடமை என்று நினைத்தவர்களாகச் செயற்பட்டனர்.

இராணுவ நிபுணர்களே சொல்லத் தயங்கும் விடயங்களை - அதாவது பொதுமக்கள் பாதிக்கப்படாமல் யுத்தத்தை நடாத்த முடியும் - அதுவும் வடக்கு கிழக்கில், முழுக்க முழுக்க தமிழ் மொழி மட்டும் பேசப்படும் ஒரு பிரதேசத்தில், சிங்களம் மட்டும் தெரிந்த, இனவாத கட்டமைப்பைக் கொண்ட ஒரு இராணுவத்தில், விமானப்




படையின் உதவியுடன் மட்டுமே யுத்த நகர்வுகளை மேற்கொண்டிருந்த ஒரு இராணுவத்தால் - பொதுமக்களுக்கு ஆபத்தின்றி யுத்தம் நடாத்தப்பட முடியும் என்று நம்பினர். நம்பியது மட்டுமல்லாமல் அவ்வாறு நம்பச் சொல்லி, வடக்குக் கிழக்குக்கு வெளியிலிருந்து கொண்டு மக்களுக்கு அறிவுரையும் கூறினர்.

> இந்த ஜனநாயகவாதிகளும் மனித உரிமையாளர்களும் அதிகாரம் உரிமை அது இது என்று எல்லாப் புரட்சிகர கோசங்களையும் நம்பமுடியாத அளவிற்கு தீவிரமாக முழங்குவார்கள். ஆனால் அவற்றை அடைவதற்கான வாய்ப்பும் பொறுப்பும் கைக்கு வரக் கூடிய சமயங்களில், தாமாகவே தாம் தோற்றுப் போகும் விதத்தில் செயற்பட ஆரம்பிப்பார்கள். தோல்வி நிச்சியமானதும், நம்பமுடியாத தம்மை மீறிய ஒரு மூன்றாவது மாய சக்தியால் நிலைமை மோசமாகி விட்டது என்று தம்மை நியாயப்படுத்திப் பிதற்றுவர்.

இந்தப் பத்தியில் இவர்களது இரண்டக நிலை பற்றியும், வெற்றுக் கோசங்கள் பற்றியும் பலதடவைகள் எழுதப்பட்டிருந்தது வாசகர்கட்கு ஞாபகமிருக்கலாம். இந்த ஜனநாயகவாதிகளும் மனித உரிமையாளர்களும் அதிகாரம் உரிமை அது இது என்று எல்லாப் புரட்சிகர கோசங்களையும் நம்பமுடியாத அளவிற்கு தீவிரமாக முழங்குவார்கள். ஆனால் அவற்றை அடைவதற்கான வாய்ப்பும் பொறுப்பும் கைக்கு வரக் கூடிய சமயங்களில், தாமாகவே தாம் தோற்றுப் போகும் விதத்தில் செயற்பட ஆரம்பிப்பார்கள். தோல்வி நிச்சயமானதும், நம்பமுடியாத தம்மை மீறிய ஒரு மூன்றாவது மாய சக்தியால் நிலைமை மோசமாகி விட்டது என்று தம்மை நியாயப்படுத்திப் பிதற்றுவர் என்று இப்பத்தியில் எழுதியிருந்தோம்.

அவர்கள் அப்படியே செய்தார்கள். அரசாங்கத்துடன் சேர்ந்து நின்று, அதைக் கேள்வி கேட்டவர்களை எல்லாம் சாடினார்கள். புலிகள் என்றும், ஐ.தே.க. என்றும் முத்திரை குத்தினார்கள்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகள், அதன் மக்கள் மீதான தாக்குதல்கள் பற்றிய பேச்சுக்களையும் எழுத்துக்களையும், புலிசார்பு கருத்துக்கள் என்று நிராகரித்தனர். புலிகளின் செயல்களை இவர்கள் இப்படி கேள்வி கேட்பதில்லை என்று 'மறுத்தான்' போட்டு தமது 'நடு நிலையை' நியாயப்படுத்தினர்.

ஆனால், இவர்கள் வெளிப்படையாக இப்படி பேசிக் கொண்டிருக்கையில் அரசாங்கம் தீவிரமான மனிதப் படுகொலை மற்றும் இனப்படுகொலை நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. இவை பற்றி தெரிந்தும் தெரியாத அப்பாவிகளாக இவர்கள் பழைய கதையையே பேசிக் கொண்டிருந்தனர்.

புலிகளின் அத்துமீறலும், மக்கள் விரோத செயற்பாடுகளும் பற்றிய இவர்களது தீவிர விமர்சனங்கள் ( அவற்றில் பெருமளவுக்கு நியாயம் இருந்த போதும்) அரசாங்கம் தனது கைங்கரியங்களைச் செய்வதற்கு போதியளவு வாய்ப்புகளை வழங்கி கொண்டிருந்தன. வடமராட்சி முதல் யாழ்ப்பாணம் ஈறாக பொதுமக்களின் கோடிக்கணக்கான சொத்துக்கள் தரைமட்டமாக்கப்பட்டு "பண்ட்" கட்டப்பட்டது, பலர் திடீர் திடீரென காணமால் போனார்கள். கைது செய்யப்பட்டவர்கள் சித்திரவதை முகாம்களுக்குள் அணுஅணுவாகக் கொல்லப்பட்டுக் கொண்டிருந்தனர்.

ஆயினும் இராணுவம் மக்களிடையே நற்பெயரை ஈட்டிவருவதாக இந்த சமாதான ஜனநாயக காவலர்கள் சாட்சி கூறினர்.

புலிகள் பற்றியும், அவர்களது நடவடிக்கைகள் பற்றியும் விமர்சிப்பதோ, அவர்களது சிறைகளில் வைக்கப்பட்டிருந்தவர்கள் பற்றி அம்பலப்படுத்துவதோ தவறானதென யாரும் கூறமுடியாது. ஆனால், அரசாங்கத்தின் அணியுடன் சேர்ந்து நின்று இதனைச் செய்யும் போது அது தவிர்க்க முடியாமல் இனவாத நோக்கிலான இன்றைய யுத்தத்திற்கு முண்டு கொடுப்பதாகவே, அதை ஊக்குவிப்பதாகவே அமையும். இது உண்மையில் இந்த ஜனநாயகவாதிகளை யுத்தவாதிகளாக இனங்காணவே வழிவகுக்கும்.

ஆனால், அவர்கள் ஜனநாயக வாதிகளாக இருப்தைவிட அரச ஆதரவு யுத்தவாதிகளாக இருக்கவே விரும்பினர். ஆனால் தாம் இன்னும் ஜனநாயக வாதிகளே என நிரூபிக்க புலிகளையும் அவர்களது ஜனநாயக மீறல்களையும் தொடர்ந்து பட்டியல் இட்டுக் கொண்டிருந்தனர்.

எப்படியோ, இந்த ஜனநாயக வேஷத்தை கலைத்துவிடும் தீவிரத்துடன் இப்போது செம்மணித் தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. சோமரட்ன ராஜபக்ஷ யாழ் நீதிமன்றத்தில் கொடுத்த வாக்கு மூலத்தில் வடக்கில், அவர் கடமையில் இருந்த பகுதியில் மட்டும் நடந்த படுகொலைகள் பற்றி தெளிவாக தெரிவித்திருக்கிறார். எப்படி அங்கு கைது செய்யப்பட்டவர்கள் கொல்லப்பட்டு, பெண்களாயின் நிர்வாணமாக்கப்பட்டபின் அடித்துக் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டார்கள் என்பதை அவர் தெளிவாக தெரிவித்திருந்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டு தப்பி வந்தவர்கள் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கு வழங்கிய வாக்கு மூலங்களில் தாம் எவ்வாறு படையினரால் நடாத்தப்பட்டோம், சித்திரவதை செய்யப்பட்டோம், பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டோம் என்று தெரிவித்திருந்தார்கள்.

ஆக, அரசாங்கத்தின் பதவிக்காலம் முடிகிற காலகட்டம் மீண்டும் புதைகுழிகளுடன் ஆரம்பித்திருக்கிறது.

அன்றைய புதைகுழிகள் சந்திரிகா கட்சிக்கு உச்ச புகழை வாங்கித் தந்தது என்றால், இன்றைய புதைகுழிகள் அவரது அரசாங்கத்தின் புகழை புதைகுழிக்குள் தள்ளிச் செல்கின்றன.

செம்மணியில் கிண்டியெடுக்கப்பட்டவைகள் பாம்புகளும், எலிகளும் என்று இனவாதிகள் கூறிக்கொண்டிருக்கையில் எலும்புகளும் உடைகளும் யாருடையவையென உறவினர்கள் அடையாளம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். முடிந்தளவு இழுத்தடித்து இவற்றை ஆறப்போட்டுவிடலாம் என்று கருதிய அரச தரப்பிற்கு உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் ஏற்பட்டு வந்த அழுத்தங்கள் தோண்டுதலை நடைமுறைப்படுத்த வேண்டிய சங்கடமான நிலைமையை உருவாக்கிற்று. புதைக்கப்பட்ட . புதைகுழிகளில் இருந்து எலும்புக்கூடுகள் மட்டுமல்ல இந்த ஜனநாயகவாதிகளால் மறைக்கப்பட்ட 'சமாதான யுத்தவாதிகளது' முகத்திரைகளும் சேர்த்து கிளப்பப்பட்டு வருகின்றன.

இந்தச் செயலைக் கூட தமது அரசியல் இலாபத்திற்காக அரசாங்கம் தான் நீதிக்குத் தலைகுனிந்து நடப்பதாக காட்ட முயல்கிறது. தமது சொந்தப்படை மீதே விசாரணை நடத்த தமது ஆட்சி அனுமதி அளித்ததாகப் பெருமையடிக்க முயல்கிறது. ஆனால் உண்மையென்னவென்பது அரசாங்கத்தை உன்னிப்பாகக் கவனிப்பவர்களுக்குத் தெரியும். அரசாங்கம் உண்மையில் விரும்பியிருந்தால் இந்தப்புதை குழிகள் எப்போதோ தோண்டப்பட்டு குற்றவாளிகளைத் தண்டித்திருக்க முடியும்.

ராஜபக்ச சொல்கிற, இந்தப் புதை குழிகளுக்கும், படுகொலைகளுக்கும் காரணமானவர்களை கண்டுபிடித்து நீதிமன்றம் முன் நிறுத்துவதன் மூலம், குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டு விடக் கூடும். அதன் மூலம் நீதிக்கு வழிசமைத்த பெருமையை அரசாங்கம் பெற்றுக் கொண்டு விடவும் கூடும். ஆனால், இந்த படுகொலைகளை செய்தவர்கள் தான் இக் குற்றங்களின் நேரடிக் காரணர்களா? இவர்கள் இப்படி நடப்பதற்கான நிலமையையும் சூழலையும் வழங்கியவர்கள் குற்றவாளிகள் அல்லவா? இவ்வாறான அநீதிகள் நடப்பதாகவும், தமது பிள்ளைகளைக் கைது செய்தவர்கள் பற்றியும் அவர்கள் மீதான தாக்குதல்கள் சித்திரவதைகள் பற்றியும் பலநூறு குற்றச்சாட்டுகள் ஆதாரங்களுடன் பொலிஸ் நிலையங்களில் பதியப்பட்டு இருக்கின்றனவே, பத்திரிகைகளில் வெளியாகினவே, பாராளுமன்றத்தில் கூட கேள்விகள் கேட்கப் பட்டனவே இவை எல்லாமிருந்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையே அவை எல்லாம் குற்றமில்லலையா? அதற்குக் காரணமானவர்கள் குற்றவாளிகள் இல்லையா?

உண்மையில் செம்மணி புதைகுழி தோண்டலும் விசாரணையும் நடப்பதன் மூலம் புதிய புதைகுழிகள் உருவாவதை தடுத்துவிட முடியாது. அவை இன்னமும் இரகசியமாகவும் கவனமாகவும் தொடரத்தான் போகின்றன. ஏனென்றால் இந்த விசாரணையும் தண்டனையும் இக் குற்றங்கள் நடக்காமல் இருப்பதற்கான நிலைமையை உருவாக்கப் போவதில்லை.

அதற்கு முதல் தேவை இராணுவம் 'சிவில் நிர்வாகம்' நடாத்தும் யுத்த சூழலை நிறுத்துவது, அதற்கு அடிப்படையான அரசியல் தீர்வுக்கு முழுமனதுடன் இறங்குவது.

இதை அரசாங்கம் செய்யும் என இனியும் எதிர்பார்ப்பதில் எந்த நியாயமும் இல்லை.

ஆனால் அதை செய்விக்கும் பொறுப்பினை மக்களும் மக்கள் அமைப்புக்களும் கையில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பதில் நியாயமுண்டு.


அது தான் இன்றுள்ள முக்கிய தேவை.!

விசேடநிருபர்.

## கனடா மாநாடு :
# கோமாளியாகிப்போன அரச தரப்பினர் !

சென்ற வாரம் " நினவ்வ " - (நினைவுகள் -இது லக்பிம பத்திரிகையில் விக்ரமபாகு கருணாரத்ன எழுதும் ஒரு பத்தி) பத்தியை என்னால் எழுத முடியாது போய் விட்டது. கனடாவில் நடைபெற்ற தமிழ் இனத்துவமும், சமாதானமும் தொடர்பான மாநாட்டில் கலந்து கொண்டதே இதற்குக் காரணம். அந்த மாநாடு பற்றி ஆச்சரியப்படத்தக்க விதத்தில் அரசாங்கப் பத்திரிகைகளில் பிரச்சாரம் செய்யப்பட்டிருந்தது.

புலிகள் இயக்கத்துக்கு நிதி சேகரிக்க நடத்தப்பட்ட பிரச்சாரக் கூட்டம் அது என ஒரு இடத்தில் அறிமுகப் படுத்தப்பட்டிருந்தது. ஆனால், உண்மையிலேயே அந்த மாநாடானது பல்வேறு அரசியல் கட்சிகள் சம்பந்தப்பட்ட ஒரு கலந்துரையாடல் சம்மேளனமாகும். அங்கு நடைபெற்ற எனக்குத் தெரிகின்ற முக்கிய விடயம், தமிழ் விடுதலைப் போராட்டம் தனி நாடொன்றிலே போய் முடிவதைத் தவிர வேறு எந்தத் தீர்வும் இல்லை என அங்கு முன்வைக்கப்பட்ட ஒரு கருத்துக்கு எதிராக நான் தெரிவித்த கருத்துக்களுக்குக் கிடைத்த பிரதிபலிப்பாகும். நான் பிரிந்து போவதைத் தவிர்ந்த தீர்வொன்று உள்ளது என்றும், அதற்கு இன்னும் இடம் இருக்கின்றது என்றும் தொடர்ந்தும் கூறியிருந்தேன். உண்மையிலேயே இந்தக் கருத்துக்குப் பெரும் பிரதிபலிப்புக் கிடைத்தது. பலரும் பாராட்டினார்கள். தனி நாடொன்றைவிட வேறு வழியேதும் இல்லை என நினைக்கும் மக்களுக்கு, அதற்கு முரணாகக் கருத்துக்களை முன்வைக்கக் கிடைக்குமானால் அதிலுள்ள தவறு தான் என்ன ? இது மிகவும் முக்கியமான சந்தர்ப்பமல்லவா?



கனடாவில் மாநாட்டை ஒழுங்கு செய்தவர்கள் கா(ர்)ல்ரன் பல்கலைக்கழகத்தின் தமிழ் மாணவர்களின் சங்கமும், அதன் ஆலோசகராகவுள்ள பேராசிரியர் இல்குப்பிள்ளையுமாவர். இவர்கள் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவானவர்களாக இருக்கலாம். ஆனாலும் இலங்கையில் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்குச் சமாதானமான தீர்வொன்றை எதிர்பார்க்கின்ற பலரும் அதில் இருந்தனர். இலகுப்பிள்ளை என்னுடன் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற எனது சம காலத்தவர். நான் பொறியியல் பீடத்திற்குச் செல்கையில், அவர் பௌதீக விஞ்ஞானத்தைக் கற்கச் சென்றார். கனடாவுக்குச் சென்று கடந்த காலத்தை நினைவுபடுத்திப் பார்க்கையிலேயே இவை எனது நினைவுக்கு வந்தன. நான் தெரிவித்த கருத்துக்கள் காரணமாக நாட்டில் சமாதானம் பற்றிய நம்பிக்கையொன்று மீண்டும் ஏற்பட்டது என அவர் எனக்கு வரும்போது கூறினார். இன்னும் பலரும் அதனையே கூறினார்கள்.

உண்மையிலேயே, அரசாங்கம் சொல்லிக்கொள்ளும் விதத்தில் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வொன்றை வழங்குவதாயிருந்தால், கனடா போன்ற நாடொன்றில் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினை பற்றிய மாநாடொன்றை இலங்கை அரசாங்கம் தானே ஒழுங்கு செய்திருக்க வேண்டும். அல்லது, அரசாங்கம் அது பற்றிச் சரியான நடவடிக்கைகளை வைத்திருந்தால் அவற்றை உலகத்தினர்க்கு விபரித்துக் கூறுவது மிக அவசியமானதாகும். ஜனநாயகத் தீர்வு பற்றிய எதிர்பார்ப்புடன், அது பற்றிக் கனடிய அரசாங்கத்துக்கு அழுத்தங் கொடுக்க விரும்பும் பெருமளவு மக்கள் அந்த நாட்டில் இருப்பதாகத் தெரிகின்றது. மறுபுறம் இலங்கையிலிருந்து சென்ற தமிழ் மக்கள், இரண்டு இலட்சம் பேர் மட்டில் அந்த நாட்டில் வாழ்கின்றார்கள். அதேசமயம் அந்த நாட்டினுள்ளும் பிரெஞ்ச் மொழி பேசும் மக்களும், சிறுபான்மைத் தேசிய இனமென்ற வகையில் தனி நாடொன்றுக்கான அழுத்தங்களை ஏற்படுத்துகின்றனர். அதற்குத் தீர்வாகச் சுயாட்சியைப் பலப்படுத்தி மாகாண சபை முறை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக எமது பிரச்சினையையும் விளங்கிக் கொள்ளும் விசேட தேவை அந்த நாட்டிலுள்ள எல்லா வர்க்கப் பிரிவுக்கும் உள்ளது.

அரசாங்கம் அவ்வாறானதோர் மாநாட்டை ஒழுங்குபடுத்துவதற்குப் பதிலாக இலகுப்பிள்ளையும், தமிழ் மாணவர் அமைப்பும் ஏற்பாடு செய்த மாநாட்டைக் குழப்ப மட்டுமே முயற்சி எடுத்தது. ஆனால் அதனூடாக, அரசாங்கமே பெரும் நகைப்புக்கிடமாகிக்கேலிக்குரிய நிலைக்கு உட்பட்டு மூக்குடைபட்டுப் படுகுழியில் வீழ்ந்துள்ளது. மாநாட்டின் வரவேற்பு உபசாரம் கனடியப் பாராளுமன்றக் குழு அறையிலேயே நடைபெற்றது. இலங்கைத் தூதுவர் அதனைத் தடுத்து நிறுத்தக் கோரிக்கை விடுத்தாலும் அது சரிப்பட்டு வரவில்லை. அடுத்து மாநாடு கா(ர்)ல்ரன் பல்கலைக்கழகத்தின் பிரதான மாநாட்டு மண்டபத்திலேயே நடைபெற்றது. அதனைத் தடுத்து நிறுத்த அழுத்தங்கள் கொடுக்கப்பட்டாலும் அதுவும் கேலிக்குரியதானது. அங்கு பேச்சாளர்களாகக் கலந்து கொண்ட சிலரும் கூடக் கடந்த காலத்தில் சந்திரிகாவின் அணைப்பில் வளர்ந்த தீவிர புத்திஜீவிகளும், துணை அரசியல்வாதிகளுமேயாவர். வசந்தராஜா, சந்திரிகாவினால் ரூபவாஹினி ஒப்படைக்கப்பட்ட அவரது நெருங்கிய நண்பராவார். ஜோசப் பராராஜசிங்கம், சந்திரிகா அரசாங்கத்துக்குத் தொடர்ந்தும் ஆதரவு வழங்கிய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினராவர். பேராசிரியர் எதிர் வீரசிங்கம், கடந்த காலங்களில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் உதவிக்கு இலங்கையினுள் பணியாற்றிய ஒருவராவர். நாங்கள் சிறுவர்களாயிருந்த காலத்தில் இலங்கையின் உயரம் பாய்தல் போட்டிகளில் வீரராகத் திகழ்ந்தவர் இவர்.

ஏனைய பேச்சாளர்கள் மத்தியில் ஜேர்மன், ஸ்வீடன் மற்றும் ஆங்கிலேய இனப் புத்திஜீவிகள், கல்விமான்கள் அரசாங்கத்தின் அனுமதியுடன் இலங்கையினுள் தேசிய இனப் பிரச்சினை பற்றியும், மனித உரிமைகள் பற்றியும் ஆராய்ந்தவர்களாவர். இவர்கள் எல்லோருக்கும் பிரயாண, தங்குமிட, உணவுச் செலவு ஆகியன வழங்கி நியாயமான அர்ப்பணிப்புடன் நிதி சேகரித்துச் செயற்படுவது குறித்து உண்மையிலேயே நன்றி தெரிவித்து, அரசாங்கம் பேராசிரியர் ஜீ. எல். பீரிசையும் மாநாட்டுக்கு அனுப்பி வைத்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் அங்கு கலந்துரையாடல் முழுமையடைந்திருக்கும். அரசாங்கம் அதனைச் செய்யவில்லை. அதற்குப் பதிலாக முட்டாள்தனமான கேள்விகள் கேட்டு மூக்குடைபடப் பிரதிநிதிகள் சிலரையே அனுப்பி வைத்திருந்தது. அவ்வாறு வந்தவர்களில், பெண் ஒருவர் " நீங்கள் இங்கு முன்வைத்த விடயங்களை ஏன் இலங்கையில் முன்வைப்பதில்லை, நான் இலங்கையில் கடந்த காலம் பூராவும் இருந்தேன், எங்கும், எப்போதும் நீங்கள் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினை பற்றிப் பேசுவதைக் கண்டதும் இல்லை, கேட்டதும் இல்லையே, அது ஏன்?" எனக் கேட்டார். இந்த விதமான முட்டாள்தனமான கேள்விகளால் கனடிய அரசாங்கத்தின் முன்னிலையிலும், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட்ட பொதுச் சபையின் முன்னிலையிலும் கோமாளிகளாகத் தங்களைக் காட்டிக் கொண்டதையே அரசாங்கத்தின் இந்தப் பெரும் புள்ளிகளால் செய்ய முடிந்தது.

கலாநிதி சச்சிதானந்தனிற்கும், எனக்குமிடையில் நடைபெற்ற உரையாடல் சபையில் பலரதும் கவனத்தை ஈர்த்தது. இடதுசாரி அரசாங்கமொன்றை அமைப்பதனால் மாத்திரமே தமிழ் மக்களுக்குச் சமத்துவம், சுயாட்சி மற்றும் சுயநர்ணய உரிமை ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்ட தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற எனது கருத்துடன் அவர் பெரிதும் முரண்பட்டு மோதினார். சிங்கள இடங்களில் சம்பிக்க ரணவக - அனுருத்த ரத்வத்தை கூட்டு மூலம் ஏற்படும் இராணுவச் சர்வாதிகாரத்தை இடதுசாரிகளால் ஒருபோதும் தடுத்து நிறுத்த முடியாது என்று அவர் தெரிவித்தார். இன்னும் சில தினங்களில் புதிய இடதுசாரி முன்னணியையும், மக்கள் 'விடுதலை முன்னணியையும் தரைமட்டமாக்கிவிட்டு சம்பிக ரணவக - அனுருத்த ரத்வத்தை கூட்டு சர்வாதிகார அரசொன்றை ஏற்படுத்துவது உறுதி என்று அவர் தெரிவித்தார். நான், அப்படி இலங்கையில் நடைபெறுமானால் இது அமெரிக்க - இந்திய முதலாளித்துவங்களின் தேவையின் மீது மட்டும்தானே நடக்க முடியும் எனத் திருப்பிக் கேட்டேன். அப்படியானால் அவர்கள் எதிர்பார்க்கும் ஈழ அரசொன்று உருவாவது எங்ஙனம் என்று நான் கேட்ட போது அவரால் பதில் ஏதும் தர முடியவில்லை.

உண்மையிலேயே கலாநிதி சச்சிதானந்தன் போன்று ஈழ நாடொன்றை எதிர்பார்ப்பவர்கள், தென் பகுதி இனவாதிகளின் எழுச்சியின் காரணமாகத் தமிழ்த் தாயகத்துக்குக் கொழும்பிலிருந்து மட்டுமல்ல, மலையகத்திலிருந்தும் தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து அணிதிரள வேண்டி இருக்குமென்றே நினைக்கின்றார்கள். அதேபோலவே இனவாத சக்தியொன்றை உருவாக்க மேற்கத்தேய நாடுகள் ஆதரவு நல்கும் என நினைப்பதற்கும் இடமில்லை. இப்போது, மேற்குலக நாடுகளின் உதவியுடனேயே யுத்தம் நடைபெற்று வருகின்றது. இந்தப் பெருஞ் செலவை நிறுத்துவதற்குப் பதிலாக, அரசியல் தீர்வொன்றை வழங்க வேண்டுமென ஏகாதிபத்தியச் சண்டியர்கள் இந்த அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கின்றனர். அந்தக் கொள்கையை நிறுத்திக் கொசோவா (Kosova) நிலைமை இந்த நாட்டினுள் பரவும் விதத்தில் ஏகாதிபத்தியவாதிகள் செயற்படுவர் என்று தர்க்கிப்பது அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என நான் கருதவில்லை.

சம்பிக ரணவக - அனுருத்த ரத்வத்தை கூட்டு ஒரு புறம் இடதுசாரிகளுக்கும், மறு புறம் மேற்கத்தேய ஏகாதிபத்திய சக்திகளுக்கும், இந்திய அழுத்தங்கள், நிர்ப்பந்தங்களுக்கும் எதிராக இந்த நாட்டினுள் அதிகாரத்துக்கு வருவார்கள் என நினைக்கக் கூட முடியாது. மேற்குலக அல்லது இந்திய முதலாளித்துவங்களுக்குச் சந்திரிகா மீது உள்ள நம்பிக்கை இன்னும் குறைவடையவில்லை. அவரை விட நல்லதொரு முதலாளித்துவ ஆட்சியாளர் ஒருவரை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. சம்பிக ரணவக போன்ற அரசியல் பைத்தியக்காரரொருவரை அதிகாரத்துக்குக் கொண்டு வருமளவிற்கு மேற்கத்தேய ஆட்சியாளர்களுக்குத் தேவையேதும் இதுவரை எழவில்லை. இப்போதைக்கு இனவாத சக்திகளால் செய்யக் கூடியது ஒன்று மட்டுமே. இப்போது உடைவுக்குள்ளாகி இடதுசாரிகளை நோக்கி வரும் மக்கள் அணிகளைக்

- 19

* எனக்கு 19 வயது. நான் தற்போது தெலவெல, கட்டுபெத்த பிரதேசத்தில் வசிக்கிறேன். எனது ஊர் பிபிலை. நான் இங்கு வேலைக்கு வந்ததற்கு பொருளாதாரக் காரணம் எதுவுமில்லை. எனது வீட்டிற்கு அருகிலிருக்கும் பெண் பிள்ளைகள் இங்கு வந்து கைநிறையச் சம்பாதிக்கிறார்கள். அதனால், நானும் இங்கு சம்பாதிப்பதற்காக வந்தேன். இங்கு 365 நாளும் விடுப்புப்பெறாது வேலை செய்தால் தங்கமாலையெல்லாம் பரிசாகக் கொடுக்கிறார்கள்.

* எனக்கு 34 வயது. 12 வயதில் ஒரு மகள் உண்டு. நான் வளள்வத்தை பிரதேசத்தைச் சேர்ந்தவள். கணவன் விவாகரத்துப் பெற்று பிரிந்து சென்று விட்டார். நான் வாழவழியில்லாது தற்கொலைக்கு பல தடவைகள் முயற்சித்தும் பலன் கிட்டவில்லை. இருப்பினும் கத்தோலிக்க தேவாலயத்தின் உதவியுடன் நான் இங்கு தொழில் செய்து கொண்டு மகளையும் படிப்பிக்கின்றேன்.

* நான் இன்னும் விவாகம் செய்யவில்லை. எனக்கு 35வயதாகின்றது. 12 வருடமாக இங்கு சப்பாத்துத் தொழிற்சாலையொன்றில் தொழில்புரிந்து வருகின்றேன். நான் தொழிலுக்குச் சென்ற மூன்றாவது மாதத்தில், தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தொன்றினால் இரண்டு விரல்களையும் இழந்தேன். இதற்காக எனக்கு எந்தவித நஷ்டஈடும் கிடைக்கவில்லை. நான் எனது சொந்த உழைப்பில் வீடொன்றைக் கட்டியுள்ளேன். எனக்கு இனியும் விவாகம் நடக்கும் என்ற நம்பிக்கையில்லை.

சுதந்திர வர்த்தக வலயத்தைச் சேர்ந்த தொழிற்சாலைகள் மற்றும் பல்வேறு இடங்களிலும் பரவியிருக்கும் ஆடைத் தொழிற்சாலைகள் என்பனவற்றில் பெண்கள் அதிகளவில் தொழில் புரிவது தெரிந்ததே. அதேபோல் பெண்களாயிருப்பதனால் இவர்கள் அதிகம் சுரண்டப்படுவதும் தெரிந்ததே. பெரும்பாலும், தன் திருமணத்திற்கு சீதனம் சேர்க்கவும், நகைகள் சேர்க்கவும் தான் இவர்கள் தொழிலுக்கே வருகிறார்கள். நிர்வாக ரீதியாக சுரண்டல்கள் ஒருபுறம், சமூக ரீதியான சுரண்டல்கள், பாதிப்புகள் மறுபுறம். நமது சமூகத்தில் ஆடைத் தொழிற்சாலைகளிலோ, சுதந்திர வர்த்தக வலயங்களிலோ வேலை செய்யும் பெண்களுக்கு மதிப்பில்லை. பத்திரிகைகளில் மணமகள் தேவை பகுதியில் ஆடைத் தொழிற்சாலைகளில் வேலை செய்யாத பெண்கள்' தேவை என பகிரங்கமாக விளம்பரம் கொடுப்பதை எவரும் அறியாமலில்லை. ஆனால், தொழிற்சாலையில் வேலை முடியும் நேரங்களில், அத்தொழிற்சாலை வாசல்களில் நிற்கும் ரோமியோக்கள் மூலம் இதனை நிரூபிக்க முடியாது. இவ்வாறானதொரு அழுத்தமான சூழ்நிலை பெண்களை உளவியல் ரீதியாக பெரிதும் பாதிக்கின்றது என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

# தொழிற்சாலைப் பெண்களின் உளவியற் பிரச்சினைகள்:
## ஒரு கள ஆய்வு காட்டும் சில உண்மைகள்

இப்பெண்கள் மூவரும் இரத்மலானை பிரதேசத்தைச் சேர்ந்த வெவ்வேறுபட்ட தொழிற்சாலைகளைச் சேர்ந்த பெண் தொழிலாளர்கள். மே 27ம் திகதியன்று பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தில் இடம்பெற்ற 'தொழிற்சாலை பெண் ஊழியர்கள் பற்றிய உளவியல் கற்கை' என்ற தலைப்பிலான கருத்தரங்கின்போது, கள ஆய்வாளர்களினால் முன்வைக்கப்பட்ட கள ஆய்வுகளில் வெளியிடப்பட்ட மூன்று பெண் பாத்திரங்கள் தாம் இவர்கள். பல்லாயிரக்கணக்கான தொழிற்சாலைப் பெண் ஊழியர்களில் உதாரணங்கள் இவர்கள் என்றும் கூறிக்கொள்ளலாம்.

இந்தக் கருத்தரங்கின்போது, சுதந்திர வர்த்தக வலயப் பெண்கள் பற்றிய உளவியல் கற்கையும், இரத்மலானைத் தொழிற்சாலை பெண் ஊழியர்கள் பற்றிய கற்கையும் என இரண்டு ஆய்வுகள் முன்வைக்கப்பட்டன. இவை எதிர்வரும் ஜூலை மாத அளவில் அறிக்கையாக வெளியிடப்படும் என அறியக் கிடைத்தது.

இந்த ஆய்வின்போது, இப்பெண்களுக்கு வேலையில் இருக்கும் சுதந்திரத்தன்மை, மற்றும் வேலையில் அவர்களது ஈடுபாடு தொடர்பாகவும், அவர்களது உளவியல் பாதிப்பு, உளவியல் இயல்புகள் தொடர்பாகவும், நடத்தைகள் (தற்கொலை, போதைப்பொருள் பாவனை) தொடர்பாகவும், வினாக்கள் தொடுக்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டுள்ளன.

இப்பிரதேசங்களில் தொழில் செய்யும் பெண்களில் 92சதவீதமானவர்கள், தமது சொந்தப் பிரதேசங்களிலிருந்து விலகி வேறிடத்தில் தொழில் செய்வோர்கள். இதனால் அதிக மன அழுத்தத்திற்குள்ளாகின்றனர். முற்றுமுழுதான புதுச் சூழல். மாற்றமான சமூக பழக்க வழக்கங்கள், நடத்தைகள் என்பவற்றுக்கு சார்பாக தம்மை தயார்படுத்தல் போன்ற விடயங்கள் இதற்கு பெரும் காரணமாக உள்ளன. அத்தோடு இப்பெண்களில் வேலை அழுத்தத்தினால் பாதிக்கப்படுவோர் தொகை 52.7வீதமாக உள்ளது. "பிற பிரதேசங்களிலிருந்து இவ்வாறான இடங்களுக்கு வந்து தொழில்புரிவது அவர்களை உளவியல் ரீதியாகப் பாதிக்கின்றது" என்றார் இந்த ஆய்வுகளுக்கு உதவிய உளவியலாளர் சந்திரிகா இஸ்மாயில்.

ஆய்வுகளில் ஈடுபடுத்தப்பட்ட பெண்களில் பொழுதுபோக்கு அற்றவர்கள் அதிகம். இரத்மலானையில் இருக்கும் பெண்கள் அருகாமையிலிருக்கும் மொரட்டுவை நகரத்தைக் கூட அறியாதவர்களாக உள்ளனர். அத்துடன் இப்பெண்கள் சோம்பல், மாரடைப்பு, நித்திரையின்மை, மன அழுத்தம், பரபரப்பு, கோபம், பயம், வேலைக்கு நேரந்தாழ்த்திச் செல்லல், தாம் வாழ்வதில் பயனில்லை என்ற எண்ணம், சமூக நடவடிக்கைகளைப் புறக்கணித்தல், பிறருடன் பழகுவதில் தயக்கம் போன்ற உளவியல் தாக்கங்களை வெளிக்காட்டியுள்ளனர். குறிப்பாக 3.7வீதமான பெண்கள் இவர்களில் போதைப் பொருள் பாவனையுடையோராகவுள்ளனர்.

உண்மையில் இந்த ஆய்வு பயனுள்ளது என்றே கூற வேண்டும். இப்பெண்கள் பற்றிப்பேச எவரும் முன்வருவதில்லை. சொந்த சுயநலன்களுக்காக ஒரு சிலர் ஒருசில கருத்துக்களை இவர்கள் பற்றிக் கூறித் தப்பி விடுகின்றனர். அந்த வகையில் இவர்களது உளவியல் தொடர்பான ஆய்வு பாராட்டத்தக்கதே.

இலங்கையில் பெண்கள் உளவியல் ரீதியாக எந்தவிதத்திலும் பாதிக்கப் படுவதில்லை, அவர்களுக்கு உளவியல் ரீதியான பிரச்சினைகள், அழுத்தங்கள் எவையும் இல்லையென்றவாறே அரசும், ஏனைய தாபனங்களும் நடந்துகொள்கின்றன. திறமையான ஆலோசனை, உதவி-சேவைகள் எதுவும் இடம் பெறுவதாகவும் தெரியவில்லை.

பொதுவாக, கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள் சில தீர்வுகளை முன்வைத்தனர். இப்பிரச்சினைக்கு முகம் கொடுப்பதெப்படியென்பது தொடர்பான அறிவூட்டல், தமக்கான பிரச்சினையை விளங்கிக் கொள்ளல், நம்பிக்கையானவருடன் பகிரல், தற்கொலை நோக்கமுடையவர்களுக்கான பிரத்தியேக சேவை என்பன தீர்வாக முன்வைக்கப்பட்டன.

எவ்வாறாயினும், தொழிற்சங்கம் தொடர்பான அக்கறையோ, பொது விடயங்கள் தொடர்பான ஆர்வமோ அற்றிருக்கும் இப் பெண்கள், அதிகாரச் சக்திகளுக்கு வெறும் பொருளாதாரப் பண்டங்கள் மட்டுமே. இவ்வாறான நிலையில் இப்பிரச்சினைக்கு சாதகமான சூழ்நிலை தொழிற்சாலை வலயங்களில் ஏற்படும் என்பது வெறும் போலி என்றே தோன்றுகின்றது.

-ரத்னா

# சீன - அமெரிக்க உறவு:
# அமெரிக்க ரவுடித்தனமும் கொக்ஸ் அறிக்கையின் பின்னணியும்!

THE COX REPORT

கொசோவா பிரச்சினையில் ரஷ்ய சீன நிலைப்பாடுகள் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ தாக்குதல்களில் பெரிய மாற்றங்கள் எதனையும் உண்டுபண்ணாதது தெரிந்ததே. அதேவேளை யூகோஸ்லேவியா-பெல்கிரேட்டில் அமைந்திருந்த சீன தூதரகம் கடந்த மே மாதம் 7ஆம் திகதி நான்கு ஏவுகணைகளால் தாக்கப்பட்டு அங்கு கடமையாற்றிய 20 சீன உத்தியோகத்தர்கள் காயப்பட்டதுடன் மூவர் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் பல நாடுகளை ஆத்திரம் கொள்ளச் செய்திருந்தன. சீனாவில் வரலாறு காணாத எதிர்ப்புகள் தோன்றின. மாணவர்கள் "ரத்தத்துக்கு ரத்தம்" என ஆவேசங் கொண்டு நேட்டோ நாடுகள் மற்றும் அமெரிக்க தூதரகங்களை சுற்றி வளைத்தனர். நேட்டே நாடுகளின் கொடிகளை வீதியெங்கும் எரித்தனர். அரசு இதற்கு காண்பித்த எதிர்ப்புகளை விட கடுமையானதாக இருந்தது மக்களின் எதிர்ப்பு. சீன மக்கள் தன்னெழுச்சியாக திரண்டு இதற்கு ஆத்திரங் கொண்டு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்தனர். சீன அரசு அமெரிக்காவுடன் ராஜதந்திர முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இந்தச் சம்பவம் நடந்ததால் சீன அரசாங்கம் ஒரு வகையில் அடக்கித் தான் அதன் எதிர்ப்பைக் காட்ட முயன்றது. ஆனால் மக்களின் தன்னெழுச்சியானது சீன அரசாங்கத்தை அமெரிக்காவுக்கு எதிராக -அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் வருத்தம் தெரிவித்தும் - மேலும் காரசாரமாக நடந்து கொள்ளச் செய்தது. இது தெரிந்தே மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் என சீனா குற்றஞ்சாட்டியது. சீன-அமெரிக்க உறவுகள் இதனால் மட்டுமல்ல சீனா சில வருடங்களுக்கு முன்னர் அமெரிக்க இரகசியங்களைத் திருடியது எனும் குற்றச்சாட்டினை அமெரிக்கா முன்வைத்ததும் இந்த உறவுகள்ளில் மேலும் முறுகல் தொடங்கியது. 1995-1996களில் அமெரிக்க கணிப்பொறி மென்பொருள் திருட்டு மற்றும் கேளிக்கை காப்புரிமை மீறல் ஆகிய குற்றங்கள் சீனா மீது சுமத்தப்பட்டது. இந் நிலை சீனா மீது கடுமையான பொருளதாரத் தடையை விதிக்கும் நிலை வரை சென்று மீண்டது.

ஆதிக்க சக்திகள் எப்போதுமே தமது ஆதிக்க இருப்பைத் தொடர்ந்தும் தற்காத்துக்கொள்ளவே முயலும். தமக்குப் போட்டியாக இன்னுமொரு சக்தி மேலெழாமலிருக்க என்ன விலையையும் கொடுக்கத் தயாராக இருக்கும். அவ்வாறான போக்குகள்ள கண்காணித்தல், முன்னெச்சரிக்கையாக தமது பலத்தை கண்காட்சிப்படுத்தி நிருபித்துக் கொண்டிருத்தல், எதிர் சக்திகளின் மீது நெருக்கடிகளை செயற்கையாக உண்டு பண்ணுதல், அந்த நெருக்கடிகளை தூண்டிக் கொண்டேயிருத்தல் என்பனவற்றைச் செய்து கொண்டே இருக்கும். இத்தனையையும் மீறி வெளிக்கிளறுகிற சாத்தியங்களை இனங்கண்டால் முளையிலேயே கிள்ளியெறிய அதிக விலையைக் கொடுக்கவும் தயாராக இருக்கும்.

இது தான் இன்றைய சர்வதேச பயங்கரவாதத்தின் உண்மை முகம். சர்வதேச பயங்கரவாதத்துக்கு தலைமை தாங்கும் சக்தியாக இன்று அமெரிக்கா உள்ளது. இந்த சர்வதேச சண்டித்தனத்துக்கு உலகின் குட்டிச் சண்டியர்களை அது தற்காலிகமாக கைக்குள் போட்டுக் கொண்டுள்ளது.

கெடுபிடி யுத்தம் முடிவுக்கு வந்து சோவியத் யூனியன் வீழ்ச்சியடைந்ததும் இன்றும் எஞ்சியிருக்கும் சோஷலிச நாடுகளை குறிபார்த்துக்கொண்டேயிருக்கிறது அமெரிக்கா. அந்நாடுகளின் பொருளாதார பலத்தைக் குறைத்து, படிப்படியாக அதனை தன்னில் தங்கியிருக்கச் செய்து அரசியல் ரீதியில் ஆதிக்கம் செலுத்தி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதே அதன் பொறிமுறையாக இருக்கிறது. அந்தப் பணியை தற்போதும் செவ்வனே செய்து வருகிறது அமெரிக்கா.

இப்பணிக்கான அமெரிக்காவின் கண்காணிப்பையும் எதிர்கண்காணிப்பு செய்யும் பலம் சில நாடுகளுக்கு மட்டுமே உள்ளது. அப்படிப்பட்ட நாடுகளில் ஒன்று சீனா.

சீனா அமெரிக்காவை அவ்வாறான எதிர்கண்காணிப்பு செய்து அதன் தகவல்களைப் பெற்றுள்ளமை பற்றி தற்போது பிரச்சினை கிளம்பியிருக்கிறது. முழு உலக நாடுகளையும் வேவு பார்த்து, தகுந்த தருணத்தில் தனது கைவரிசையைக் காட்டும் அமெரிக்காவானது தனது நாட்டின் மீது அவ்வாறான ஒன்று மேற்கொள்ளப்பட்டதை கண்டறிந்தால் உடனடியாக மோசமான எதிர் நடிவடிக்கைகளில் ஈடுபட்டு விடுகிறது. இதில் உள்ள முக்கிய விடயம் என்னவென்றால் அவ்வாறான எதிர்நடவடிக்கைகளில் தனது கைக்குள் இருக்கும் சர்வதேச நிறுவனங்கள் அனைத்தையும், சர்வதேச மன்னிப்புச் சபை, ஐ.நா சபை உள்ளிட்ட அமைப்புகளை ஈடுபடுத்தும்.

இது தான் சீனா விவகாரத்திலும் தற்போது நடந்துள்ளது.

சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளும் சமீப காலமாக ராஜதந்திர உறவுகளை ஏற்படுத்த நடந்த முயற்சிகள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா கடந்த சில வருடங்களாக சீனாவுடனான உறவை புதுப்பித்து பலப்படுத்துவதில் தீவிர அக்கறை காட்டி வந்தது. சீனாவும் சமீப காலமாக அமெரிக்க உறவை வரவேற்று அதற்கு வழியேற்படுத்தும் வகையில் பொருளாதார முதலீடுகள் பலவற்றையும் அனுமதித்தது. மேலும் சில பாதுகாப்புத்துறை தொடர்பான ஒப்பந்தங்களையும் ஏற்படுத்தியது. இரு நாடுகளும் ஒன்றையொன்று பரஸ்பரம் விட்டுக்கொடுத்து செயல்படவும் ஆரம்பித்தன. 1989இல் சீனாவில் தியனன்மென் சதுக்கத்தில் மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தை நசுக்கி பல மாணவர்களை சுட்டுக் கொன்ற போது சீனாவின் மீது அன்றைய ஜோர்ஜ் புஷ் அரசாங்கம் பொருளாதாரத் தடையை விதித்தது. மேலும் சில ஐரோப்பிய நாடுகளும் சீனாவின் மீது பொருளாதாரத் தடையை விதித்திருந்தன. சீனாவின் தன்னிறைவுப் பொருளாதார முறைமையின் காரணமாக இந்தத்தடை எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை.

தற்போதைய ஜனாதிபதி கிளின்டனும் 1992 ஜனாதிபதித் தேர்தலின் போது சீனாவின் சர்வாதிகாரப் போக்குள்ள ஆட்சியாளர்களுடன் அமெரிக்க அரசு குலவுவதாகக் குற்றம் சாட்டியிருந்ததுடன் அவர் ஆட்சிக்கு வந்தால் சீனாவுடனான உறவு கடுமையாக்கப்படும் என்றும் தேர்தல் பிரச்சாரத்தில் தெரிவித்திருந்தார். ஆனால் கிளின்ரன் பதவிக்கு வந்ததும் முன்னை அரசாங்கங்களை விட சீனாவுடன் உறவுகளை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார் என்ற போதும் ஈரானுக்கும், பாகிஸ்தானுக்கும் அணு ஆயுதங்களை விற்பதாக குற்றஞ்சாட்டியதுடன் பொருளாதாரத் தடை எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. அந்தச் சந்தர்ப்பங்களில் சீனாவும் தனது இறைமையைப் பாதுகாக்கும் நோக்குடன் தமது நாட்டில் அமெரிக்க பொருட்களின் விற்பனையை தடை செய்து பதிலடி தந்தது. அத்துடன் நில்லாது இரு பொருளாதார ஒப்பந்தங்களில் அமெரிக்காவுக்குப் பதிலாக ஐரோப்பிய நாடுகள் தேர்வு செய்யப்பட்டன. அதில் ஒன்று மெர்சிடிஸ் ஒப்பந்தம்'. மற்றொன்று போயிங் விமான ஒப்பந்தம். சீனா தமது நாட்டில் கட்ட முற்பட்ட உலகின் மிகப் பெரிய பல நோக்கு நீர்த்தேக்க திட்டத்திற்கு குத்தகை அடிப்படையில் உதவ முற்படும் அமெரிக்க நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப உதவி தரப்படக்கூடாது என்றும், அவற்றிற்கு காப்பீடு ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் கடன் வசதிகள் அளிக்கப்படக்கூடாது என்றும் கிளின்ரன் அரசாங்கத்தை அமெரிக்க பசுமைப் பாதுகாப்பு இயக்கங்கள் வற்புறுத்தின. நான்காவது சர்வதேச பெண்கள் மாநாடு பெய்ஜிங்கில் நடைபெற்ற போது அதில் அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரனின் மனைவி ஹிலாரி கலந்து கொண்டு சீனாவை கடுமையாக தாக்கிப் பேசியதும் சீனாவை சவாலுக்கு இழுப்பதாகவே அமைந்தது. இது தவிர தைவான் பிரச்சினையில் அமெரிக்கா அவ்வப்போது சீனாவை சீண்டிப் பார்த்து வந்திருக்கிறது. தைவானில் தேர்தல் சூடு பிடித்த ஒரு சந்தர்ப்பத்தில் சீனா நடத்திய ஏவுகணைச் சோதனைகளை, தைவானை மிரட்டும் நடவடிக்கைகளாகவே அமெரிக்கா எடுத்துக் கொண்டது. அமெரிக்காவும் அந்தச் சந்தர்ப்பத்தில் இரு ஆயுதக்கப்பல்களை தைவானின் உதவிக்கு எனும் பேரில் அனுப்பி வைத்து சீனாவை மிரட்ட முயற்சித்தது.

கிளின்டன் இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட போது சீனாவில் முதலீடு செய்திருந்த அமெரிக்க நிறுவனங்கள் பல சீன விடயத்தில் நட்புடன் அணுகுமாறு கிளின்ரன் அரசாங்கத்தை வலியுறுத்தி வந்தன. 1992 இலிருந்து சீனாவில் டெங் சியாவோ பிங் புதிய பொருளாதார சீர்திருத்தங்கள் எனும் பெயரில் அந்நிய முதலீடுகளை படிப்படியாக உள் நுழைய விட்டார். இது தான் அமெரிக்காவை அதிகளவில் சீனாவுக்குள் நுழைய வழி செய்தது எனலாம். சீனாவும் அமெரிக்காவுடனான ராஜதந்திர உறவை பலப்படுத்தும் நோக்குடன் 1997இல் அதிபர் ஜியாங் ஜெமின் அமெரிக்க விஜயம் செய்திருந்தார். 1998 ஜுலையில் தனது சமிக்ஞையை காட்டும் நோக்குடன் அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரனும் சீனாவுக்கு விஜயம் செய்தார்.

தனது பொருளாதார நலன்களை உறுதிப்படுத்துவதற்காகவும், வடகொரியாவை சீனாவைக் கொண்டு எச்சரிக்கவும், அரசியல் ரீதியில் தம்மில் படிப்படியாக சரணடையச் செய்யும் முயற்சியிலும் அமெரிக்கா இறங்கியது. அணு ஆயுத ஒப்பந்தங்களில் ஆரம்பத்தில் ஒத்துழைக்காத சீனா அது விடயத்திலும் ஒத்துழைப்பு வழங்க ஆரம்பித்தது. பல ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திட்டது. இவ்வாறு பல பரஸ்பர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவந்த நிலையில் தான் இந்தத் திருட்டுக் குற்றச்சாட்டு சீனாவின் மீது தற்போது சுமத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் அதி உயர் இராணுவ தொழில்நுட்ப இரகசியங்களை சீனா திருடியிருப்பதாக இது குறித்து இது வரை நடத்தப்பட்ட விசாரணைக் கமிட்டியின் முடிவுகள் அடங்கியுள்ள "கொக்ஸ் அறிக்கை" (The Cox Report) தெரிவித்துள்ளது. இந்த "கொக்ஸ் அறிக்கை" அமெரிக்கப் பாராளுமன்றமான கொங்கிரசின் மூலமாகவே தற்போது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது குறிப்பிடத்தக்கது. இந்த கொக்ஸ அறிக்கை தெரிவிக்கின்ற விபரங்களின்படி அமெரிக்காவின் இராணுவ ரகசியங்களைத் திருடும் பணியின் ஆரம்பம் 1955இலிருந்தே ஆரம்பித்து விட்டதாம்.

ஷங்கய் பிரதேசத்தில் பிறந்த கியென் சூசென் அமெரிக்காவிலிருந்து தனது நாட்டுக்கு இந்த வருடம் தான் வந்து சேர்ந்தார். அமெரிக்காவில் கால்டெக் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டப்படிப்பை முடித்துக்கொண்ட கியென் அதன் பின்னர் ஏவுகணை தயாரிப்பு குறித்த நுணுக்கங்களில் தேர்ச்சி பெற்றிருந்தார். அது மட்டுமன்றி அந்தப் பல்கலைக்கழத்தில் விமான ஆராய்ச்சிக் கூடத்தில் கனதியான எரிபொருளின் மூலம் இயங்கக்கூடிய ஏவுகணையொன்றையும் முதற் தடவையாக பரீட்சித்துப் பார்த்தார். இதன் பின்னர் கர்னல் பதவியை அடைந்து இராணுவத்தின் துணை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சூசென் டைடன் ரகத்திலான ImBm எனும் ஏவுகணை தயாரிப்பு வரை தனது ஆற்றலை வழங்கினார்.

1955ஆம் ஆண்டு திடீரென அமெரிக்காவை விட்டு தனது நாட்டுக்கு வந்து சேர்ந்தார். அவர், தனது ஏவுகணை ஆற்றலுடன் மட்டுமன்றி இராணுவ ரகசியங்கள் பலவற்றையும் சேர்த்துத் தான் சீனாவுக்குக் கொண்டு சென்றிருந்தார் என்பதை அமெரிக்க அதிகாரிகள் காலம் தாழ்த்தித் தான் கண்டுபிடிக்க முடிந்தது. இன்று சீனா அந்தத் தொழில்நுட்பத்துடன் ஏற்கெனவே தனது தொழில்நுட்பத்தையும் சேர்த்து நீண்ட தூர "பெலஸ்டிக் மிசைல்" ஒன்றைத் தயாரித்து விட்டுள்ளது.

சீன அரசாங்கத்தின் அதி உயர் விஞ்ஞானிகளுக்கு வழங்கப்படும் கௌரவமும், விருதும் சூசெனுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே சூசென் ஒரு உளவாளியா அல்லது அமெரிக்காவின் பாதுகாப்பு பலவீனத்தைப் பயன்படுத்தி தற்செயலாக தனது கைக்கு அகப்பட்ட இரகசியங்களை கடத்திச் சென்றவரா என்பதைக் கண்டறிவதில் அமெரிக்கா முனைப்பு செலுத்தியிருந்தது.

"கொக்ஸ் அறிக்கை" அறிக்கையின் 909ஆவது பக்கத்தில் இந்த இரண்டையும் காரணங்களாக இனங்கண்டுள்ளது. இந்த இரகசியங்கள் மட்டுமன்றி தூர இலக்குகளைத் தாக்கக்கூடிய ஏவுகணை தொடக்கம், நியூட்ரன் குண்டுகள் தயாரிப்பு இரகசியம் வரை சீனா திருடியிருப்பதாக அமெரிக்காவின் அவ்வறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்த "அறிவுத்திருட்டை" அமெரிக்காவுக்கு உயர் கல்விக்கென வரும் சீன மாணவர்கள் பலர் திருடிக் கொண்டு தமது தாய்நாட்டுக்கு போவதாக அவ்வறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அமெரிக்கா சீனாவிடம் இருந்து இராணுவ தொழில்நுட்பங்களைப் பெறுவதற்காக இரு நாடுகளுக்கிடையிலான ஒரு தொழில்நுட்ப உடன்பாடு செய்து கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் அந்த உடன்பாடுகளை சீனா மீறியிருப்பதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியிருக்கிறது.

சீன விண்வெளி ஓடங்களை அண்மித்து அமெரிக்காவின் வின்வெளி ஓடங்களும் பயணம் செய்து வருகிறது. என்றாலும் இன்று அமெரிக்காவின் விண்வெளி தொழில்நுட்பங்களை விட அதிகளவில் வளர்ச்சியடைந்த தொழில்நுட்பத்தை சீனா கொண்டுள்ளமை சந்தேகத்துக்கு இடமில்லை.

அமெரிக்கா சீனாவுடன் உறவைப் பேண சமீப வருடங்களாக முயற்சி செய்து வந்ததை அவதானிக்கலாம். இதன் விளைவாக சென்ற வருடம் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் சீனாவுக்கு விஜயம் செய்ததையும் குறிப்பிடலாம். அது போல சீனத் தலைவர்களும் உடனடியாக அமெரிக்க விஜயங்களை மேற்கொண்டு பரஸ்பர சமிக்ஞைகளைக் காட்டிக் கொண்டனர். கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் சீன பிரதமர் அமெரிக்கா சென்றிருந்தது நினைவிருக்கலாம். என்றாலும் சீனர் அமெரிக்காவுடன் மேற்கொள்ள திட்டமிட்டிருந்த பொருளாதார ஒப்பந்தங்கள் சாத்தியப்படவில்லை.

பெல்கிரேட் தூதரக தாக்குதல் மற்றும் இராணுவ ரகசிய திருட்டு ஆகியவை அமெரிக்க சீன உறவுகளை பரஸ்பரம் பாதித்திருப்பதைக் காணமுடியும். பிரபலமான டைம்ஸ் சஞ்சிகை மற்றும் சீ.என்.என். ஆகியவை நடத்திய கருத்துக்கணிப்பொன்றின்படி 46 வீதமானோர் அமெரிக்காவுக்கு இன்று பெரியளவு சவாலாக ஆகியிருப்பது சீனா என தெரிவித்திருக்கின்றனர்.

எவ்வாறிருந்த போதும் உலகின் ஏக போக சண்டியராக உள்ள அமெரிக்காவுக்கு இப்படிப்பட்ட ஒரு சவாலை எதிர்கொள்வதானது கெடுபிடி யுத்தத்தின் இன்னுமொரு வடிவமே என ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

அமெரிக்காவின் பயங்கரவாதத்தை முறியடிக்க ஏனைய நாடுகள் கைகோர்த்து இவ்வாறான கண்ணாணிப்பு உளவு வேலைகளை செய்வது அவசியமானதும், எச்சரிக்கையானதும் கூட.

—ஜென்னி

### கொக்ஸ் அறிக்கையில் சீனா களவாடியதாகக் கூறப்படும் விடயங்கள் —

- W-88 எனும் ஏவுகணைத் தொழில்நுட்பம்
- W-70 நியூட்ரன் குண்டு தயாரிப்பு
- ஏவுகணைகள் குறிதவறாமல் இலக்கைத் தாக்கும் தொழில்நுட்பம்.
- சப் மெரின்களை ஆராய்ந்தமை
- ரொக்கட் தயாரிப்பு மற்றும் அதற்கு வழிகாட்டல்
- அணு ஆயுதங்களை இயக்கக்கூடிய அதி ஆற்றல்படைத்த கணிணி தொழில்நுட்பம்

### கொக்ஸ் அறிக்கையிலிருந்து சில முக்கிய குறிப்புகள்

| | |
|---|---|
| 1970 - | லோரன்ஸ் லிவமோ ஆராய்ச்சிக் கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட நியுட்ரன் குண்டு பரிசோதனை அறிக்கை மற்றும் அதன் தயாரிப்பு பற்றிய தகவல்கள் சீனாவினால் களவாடப்பட்டுள்ளது. |
| 1984-1988 - | அமெரிக்காவினால் உருவாக்கப்பட்ட று-88 ட்ரய்டன்ட் ஏவுகணை நகல் சீனாவின் கைக்குச் சேர்ந்தது. |
| 1988 - | சீனாவினால் நியூட்ரன் குண்டு பரிசோதிக்கப்பட்டது. இது அமெரிக்காவிடமிருந்து திருடப்பட்ட தொழில்நுட்பமென ஆய்வாளர்கள் சந்தேகப்பட்டனர். |
| 1988 | செப்டம்பர் - அமெரிக்க விண்வெளி ஓடம் சீன ரொக்கட்டுடன் சேர்ந்து செல்ல றேகன் அரசாங்கம் அனுமதித்தது. |
| 1990 - | சீன விஞ்ஞானியொருவரின் மீது உளவுக் குற்றச்சாட்டை சுமத்தி FBI விசாரணை செய்தது |
| 1995 - | சென் ஹோ லீ எனும் இன்னுமொரு விஞானியொருவர் அணுஆயுத தொழில்நுட்ப பரிசோதனை குறித்த தொழில்நுட்பத்தை கணிணியைப் பாவித்துப் பெற்றுள்ளார். |
| 1995 - | சீனாவினால் களவாடப்பட்டதாகக் கூறப்படும் ரகசிய தொழில்நுட்பம் பற்றிய விபரங்கள் சீ.ஐ.ஏ. உளவாளிகளால் கண்டு பிடிக்கப்பட்டது. |
| 1992-1996 - | சிறிய ரக ஏவுகணையொன்று சீனாவினால் பரிசோதிக்கப்பட்டது. 88 தொழில்நுட்ப திருட்டு குறித்து FBI விசாரணையை ஆரம்பித்தது. |
| 1997 - | சாட்சிகள் பெறுவதில் தாமதத்தால் FBI விசாரணைகள் முடக்கம். |
| 1998 - | பிட்டர் லீ எனும் சீன விஞ்ஞானியொருவர் உளவு பார்த்த குற்றச்சாட்டினை ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து சிறைத்தண்டனை அளிக்கப்பட்டது. |
| 1998-ஜுன் - | கொக்ஸ் விசாரணைக் கமிட்டி தோற்றுவிக்கப்பட்டது. |
| 1998-டிசம்பர் - | சீன அமெரிக்க தொழில்நுட்ப ஒத்துழைப்பு முயற்சிகளுக்கூடாக இராணுவ இகசியங்கள் சில வெளியானது தெரிய வந்தது. 1995இல் ஏற்பட்ட ரொக்கட் விபத்து பற்றிய விசாரணையையும் கமிட்டி செய்யத் தொடங்கியது. |
| 1999 ஜனவரி - | கொக்ஸ் அறிக்கை கிரமமாகத் தொகுக்கப்பட்டது. |
| 1999-பெப்ரவரி - | வர்த்தக ரீதியாக விண்வெளியை சீனாவுக்கு வழங்குவதை அமெரிக்கா ரத்துச் செய்தது. இதற்கிடையில் உளவறிந்த குற்றச்சாட்டினை சீனா மறுத்தது. |
| 1999-மார்ச் - | அமெரிக்காவிலிருக்கும் சீன விஞ்ஞானிகளின் கணிணிகளை பரிசோதிப்பதற்கு FBI க்கு அனுமதி வழங்கப்பட்டது. |
| 1999-ஏப்ரல் - | சீன பிரதமர் சு ரெங்ஜியின் அமெரிக்க விஜயம், அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தத்தை செய்யும் முயற்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கிடையிலான உறவுகள் மேலும் சீர்குலைந்தது. இதற்கிடையில் அமெரிக்காவின் இரகசியங்கள் வெளியாகாமல் இருப்பதற்கு அமெரிக்க தொழில்நுட்பங்கள் அடங்கியுள்ள பல கணிணிகளை செயலிழக்கச் செய்யப்பட்டது. |
| 1999 -மே - | பூரணமாக தயாரிக்கப்பட்ட கொக்ஸ் அறிக்கை வெளியிடப்பட்டது. |

# உலக கணிணி வலைப்பின்னல்

வே.மகிந்தன்-பேராதனைப் பல்கலைக்கழகம்

'இன்ரநெற்' என்ற பதம் இன்று எல்லோராலும் பேசப்படும் அளவிற்கு தகவற் தொடர்பு தொழிநுட்ப வளர்ச்சியில் பாரியளவில் தனது பங்களிப்பைச் செய்து கொண்டிருக்கின்றது. இந்நிலையில் 'இன்ரநெற்' என்றால் என்ன? அது எவ்வாறு தொழிற்படுகின்றது? தமிழில் 'இன்ரநெற்'றின் பங்கு என்ன? என்ற பொதுவான கேள்விகட்கு இக்கட்டுரை விடைகாண முயல்கின்றது.

'இன்ரநெற்' என்பது மக்கள், தகவல்கள், கணிணிகள் என்பவற்றைக் கொண்டிருக்கும் உலகளாவிய வலைப்பின்னல் என்பதன் மூலம் வரையறுக்கப்படலாம். அமெரிக்காவின் உயர் பாதுகாப்பு ஆராய்ச்சித் திணைக்களத்தினால் (ARPA) இராணுவ புலனாய்வுத் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்காக 1968ம் ஆண்டு உருவாக்கப்பட்ட "ARPANET" இன்று 'இன்ரநெற்' ஆக வளர்ச்சியடைந்துள்ளது.

### தகவற் பரிமாற்றம்

'இன்ரநெற்' வெவ்வேறு வகையான கணிணிகளையும் வேறுபட்ட இயங்குமுறைகள் (Operating System) கொண்ட கணிணிகளையும் இணைக்கின்றது. அவ்வாறு இணைக்கப்படும்போது ஒரு பொதுவான ஊடகம் தேவைப் படுகின்றது. அதுவே TCP/IP (Transfer Control Protocol and Internet Protocol) என அழைக்கப்படுகின்றது. 'புறோட்டோகோல்' (Protocol) என்பது ஒரு தொகுதி இயங்கு படிமுறைகளின் தொகுப்பு ஆகும். அவை தொழிநுட்ப பதங்கள், அவற்றின் செயல்பாட்டு முறைகள் என்பன பற்றி விளக்கி அவற்றைச் செயற்படுத்துகின்றன. உதாரணமாக, ஒரு இலத்திரனியல் தபாலில் (E- Mail) தகவல் அனுப்புதல், பெறுதல் எவ்வாறு செயற்படுத்தப்பட வேண்டும் என்பதனை நிர்ணயிக்கின்றது. இவ்வாறான நூற்றுக்கும் மேற்பட்ட 'புறோட்டோகோல்'களை TCP/IP ஆனது தொகுத்து கணிணிகளை இணைக்கின்றது. IP ஆனது ஒரு முனையில் இருந்து மறுமுனைக்கு தகவல் அனுப்பும் பாதையை நிர்ணயிக்கின்றது. தகவல்கள் செல்லும் ஒரு பாதையில் தடங்கல் ஏற்படும் போது அதற்கு மாற்றீடான பாதையில் தகவல்கள் அனுப்பும் பணியையும் இது செய்கின்றது.

### பெயரீட்டு முறை

'இன்ரநெற்'றில் ஒவ்வொரு தகவல் தளங்களும் தங்களுக்கே உரித்தான முகவரியைக் (URL) கொண்டுள்ளன. இப்பெயரீட்டு முறையானது Domain Name System அல்லது DNS என்று அழைக்கப்படும். உதாரணமாக http://www.pn.ac.lk என்பது பேராதனைப் பல்கலைக்கழகத்தினது இன்ரநெற் முகவரியாகும். இதில் http என்பது Hyper text Markup Language என்பதனையும், www என்பது World Wide Web என்பதனையும், pdn என்பது பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கான பெயரையும், ac என்பது உப நிலை இராச்சியத்தையும் lk என்பது உயர் நிலை இராச்சியத்தையும் குறிக்கின்றன.


உயர்நிலை இராச்சியம் (Domain) என்பது இருவகைப்படுத்தப்படலாம். ஸ்தாபனங்களின் இராச்சியங்கள், புவியியல் நிலை இராச்சியங்கள் என்பன அவையாகும். ஸ்தாபன இராச்சியங்கள் இன்ரநெற்றின் ஆரம்பகாலத்தில் அமெரிக்காவில் பாவிக்கப்பட்டு பின் உலகளாவிய ரீதியில் விரிவுபடுத்தப்பட்டவை. ஸ்தாபன இராச்சியத்தின் கீழ் com - வர்த்தக ஸ்தாபனங்கள், edu- கல்வி நிறுவனங்கள், gov - அரசாங்க நிறுவனங்கள் (அமெரிக்கா), int - சர்வதேச நிறுவனங்கள், mil - இராணுவ நிறுவனங்கள், net - வலைப்பின்னல் நிறுவனங்கள், org இலாப நோக்கற்ற நிறுவனங்கள் அடக்கப்படுகின்றன. புவியியல் நிலை இராச்சியங்களின் கீழ் ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு இராச்சியப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக lk இலங்கை, jp யப்பான், uk ஐக்கிய இராச்சியம், ca கனடா போன்றவற்றைக் குறிப்பிடலாம். உபநிலை இராச்சியம் என்பது ஒரு குறிப்பிட்ட நிறுவனம் தனக்கென ஒரு இணைப்பைப் பெற்ற பின்னர் அதிலிருந்து இணைப்புக்களை வழங்குதல் ஆகும். உதாரணமாக மேலே குறிப்பிடப்பட்ட ac என்பது LEARN எனப்படும் ஒரு கல்விசார் நிறுவனத்தின் சுருக்கப்பெயராக உயர்நிலை இராச்சியத்தினால் வழங்கப்பட்டதாகும். LEARN ஆனது இலங்கையில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் பல கல்வி நிறுவனங்களை இணைத்து அவற்றை உயர் நிலை இராச்சியமான lk உடன் இணைத்துள்ளது. இதன் மூலம் மொறட்டுவப் பல்கலைக்கழக 'இன்ரநெற்' முகவரி www.mrt.ac.lk என்றவாறாக அமையும்.

இராச்சியப் பெயரீட்டு முறைமை (DNS) இன் கீழ் வழங்கப்படும் பெயர்களுக்கு இலக்க முறைப் பெயரீடு ஒன்றும் கொடுக்கப்படும். இவ்விலக்க முறைப் பெயர் IP முகவரி என்றழைக்கப்படும். இதன் மூலமே Ip இனால் சரியான முனைக்குத் தகவல்கள் அனுப்பப்படுகின்றன. உதாரணமாக pdn.ac.lk என்பது இலக்கப் பெயரீட்டில் 192.248.40 என்றவாறாக அமையும்.

### 'இன்ரநெற்'றின் பிரிவுகள்

'இன்ரநெற்'றை அதன் தொழிற்பாட்டின் அடிப்படையில் பல்வேறு வகைகளாக வகுத்து நோக்கலாம். E-mail, http (web), ftp, usenet, Gopher, Archie, telnet என்பன அவையாகும்.

இலத்திரனியற் தபால் (E -Mail) இது தனிப்பட்ட தகவற் பரிமாற்றத்திற்கு பாவிக்கப்படுகின்றது. இதுவே 'இன்ரநெற்'றில் கூடுதலான மக்களால் பயன்படுத்தப்படுகின்றது. உதாரணமாக Name @pdn.ac.lk என்பதனை எடுத்துக் கொண்டால் பேராதனைப் பல்கலைக்கழக 'சேர்வர்'இல் குறிப்பிட்ட பெயருக்குரியவருக்கு அனுப்பப்படும் தகவல்கள் சேமிக்கப்படுகின்றன. தகவல்களை உலகெங்கிலும் இருந்து அனுப்ப முடியும். 'சேர்வர்' வசதி இல்லாதவர்கள் இலவச மாகவோ, பணம் செலுத்தியோ இவ் வசதியினைப் பெற்றுக் கொள்ள முடியும். இலவச இலத்திரனியல் தபால் வசதிகளை வழங்குவதில் www.yahoo.com,- www.hotmail.com போன்ற பல நிறுவனங்கள் பிரசித்திபெற்ற நிறுவனங்களாகும். இவர்களது 'வெப்' தளத்தில் நுழைந்து எமக்கென இலத்திரனியல் தபால் முகவரியைப் பெற்றுக் கொள்ள முடியும்.



இலத்திரனியற் தபாலிற்கு அடுத்தாக 'இன்ரநெற்'றில் பயன்படுத்தப்படும் பகுதி http, (web அல்லது www) ஆகும். இதுவே இன்ரநெற்றின் தகவற் பரிமாற்றத்தின் தாய்த்துறை ஆகும். சங்கிலி (link) இணைப்புகள் கொண்ட இத்தகவற் பெட்டகமானது தகவல்களை சொற்கள், பட உருக்கள், புகைப்படங்கள், அசைத்கு சொற்கள், பட்டிகள் (Banners), ஒலிகள், வரைபடங்கள், வீடியோ படங்கள் போன்ற ஏராளமான வடிவங்களில் கொண்டுள்ளது. ஒரு மனிதன் தனக்குத் தேவையான அன்றாட அலுவல்களை வீட்டில் இருந்து கொண்டே செய்து முடிக்கும் அளவிற்கு இது வளர்ச்சியடைந்துள்ளது. உதாரணமாக ஒரு 'வெப்'மூலம் தேவையான பொருட்களின் தரம், விலை என்பன பற்றி அறிந்து கொள்வதுடன், credit card மூலம் பணத்தைச் செலுத்தி அவற்றைப் பெற்றுக் கொள்ளவும் முடியும். 'இன்ரநெற்'றிலோ, 'வெப்'பிலோ எல்லா தளங்களின் முகவரிகளையும் தெரிந்து வைத்திருத்தல் முடியாத காரியம் ஆகும். ஆனால், எமக்கு தேவையான பகுதியுடன் சம்பந்தப்பட்ட 'வெப்'தளங்களைத் தேடுதல் செய்து அறிவதற்காக பல 'வெப்' தளங்களை இன்ரநெற்றில் உருவாக்கியுள்ளார்கள். அவற்றில் உலகில் உள்ள வெப் தளங்கள் பற்றிய தகவல்களை சேமித்து இணைத்துள்ளனர். அதன் மூலம் தேவையான தகவல்களையோ, அல்லது நேரடியாக தேவையான வெப் தளத்திற்கோ செல்ல முடியும். இவ்வகை தேடுதல் தளங்களை "Search Engine" என அழைப்பர். உதாரணமாக www.yahoo.com,- www.webcrawler.com போன்றவை உலகப்பிரசித்திப் பெற்ற தேடுதற் தளங்கள் ஆகும்.

ftp (file transfer protocol) ஆனது கோப்புக்களை (file) ஒரு முனையில் இருந்து மறு முனைக்கு மாற்றீடு செய்கின்றன. எவ்வகையான கோப்பு அடிக்குறிப்பு (file extension) கொண்ட கோப்புக்களையும் மாற்றீடு செய்ய முடியும். 'இன்ரநெற்'றில் மென்பொருட்கள் (Software) சாவிப்பலகை எழுத்துருக்கள் (fonts) போன்றன, இவ்வகை 'புறோட்டோகோல்' மூலமே இறக்கு, ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

usenet என்பது விவாதக் குழுக்களின் சேர்மானம் ஆகும். உலகெங்கும் இருந்து பல மில்லியன் மக்கள் ஒரு விவாதத்தலைப்பின் கீழ் ஒன்றுபட்டிருப்பர். இவர்கள் அக்குறிப்பிட்ட விடயத்தைப் பற்றி ஆய்வுகள், விவாதங்கள் நடத்துவர். உதாரணமாக கணிணி, விஞ்ஞானக் கதைகள், நகைச்சுவை, பொறியியல், மருத்துவம், இலக்கியம் போன்ற துறைகளில் கூடுதல் விவாதங்கள் நடைபெறுகின்றன.

Gopher என்பதில் 'மெனு' அடிப்படையில் தகவல்கள் அடுக்கப்பட்டுள்ளன. இது இன்ரநெற் வசதிகளை இலகுவாகவும், விரைவாகவும் பெற்றுக்கொள்ள உதவுகின்றது. telnet என்பது இன்ரநெற்றில் இணைக்கப்பட்டுள்ள கணிணி ஒன்றின் ஊடாக வேறொரு கணிணியை இன்ரநெற்றில் இணைத்தல் ஆகும். இது ஆரம்ப காலங்களில் "main frame" கணிணிகளில் கூடுதலாகப் பயன்படுத்தப்பட்டது. இதன் மூலம் துார இடங்களில் இருந்தும் ஒரு முனைக் கணிணியைக் கட்டுப்படுத்த முடியும்.

### இன்ரநெற் இணைப்பு

இன்ரநெற் சேவை வழங்குநர்கள் இருமுறையில் இணைப்புகளை வழங்குகின்றனர். நேரடி இணைப்புச் சேவை இலக்கச் சுழல் இணைப்புச் சேவை என்பன அவையாகும். ஒரு இன்ரநெற் இணைப்பு சேவையைப் பெறுவதற்கு ஒருவர் அல்லது ஒரு நிறுவனம் கணிணி, மொடம் (Modem), தொலைபேசி இணைப்பு, சிலவகை மென்பொருட்கள் என்பவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும். சில சமயங்களில் நேரடி இணைப்புச் சேவை விசேட வகை 'கேபிள்'கள் மூலம் வழங்கப்படுகின்றன.

நேரடி இணைப்புச் சேவையைப் பெறுபவர் ஒரு 'இன்ரநெற்' முகவரியைக் கொண்டிருப்பர். இது URL (Uniform Resource Locator) என்றழைக்கப்படும். உதாரணமாக பேராதனைப் பல்கலைக்கழகம் நேரடி இணைப்புச் சேவையைக் கொண்டுள்ளது. (www.pdn.ac.lk) இவ்வகை இணைப்பைப் பெறுபவர்கள் ஒரு சேமிப்பகத்தினை (Server) பராமரித்து அதில் அவர்கள் வெளியிட விரும்பும் தகவல்களைச் சேமித்து வைப்பர். அத்துடன் இவர்களால் இலத்திரனியல் தபால் சேமிப்பகத்தினையும் வைத்திருக்க முடியும். இதன் மூலம் தங்கள் நிறுவனத்தில் உள்ளவர்களுக்கு இலத்திரனியல் தபால் வசதிகளை வழங்க முடியும். இவ்வகை நேரடி இணைப்புக்கள் 24 மணிநேரமும் தொழிற்பட்டுக் கொண்டிருக்கும். உலகெங்கும் இருந்து இம் முகவரியில் உள்ள தகவல்களைப் பெறவும், அனுப்பவும் முடியும்.

இலக்கச் சுழல் முறை இணைப்புச் சேவையைப் பெறுபவர் தமது கணிணி மூலம் சில இலக்கங்களைச் சுழற்றி சேவை வழங்குனர் உடன் தொடர்பு கொண்டு இணைப்புச் சேவையைப் பெறுவர். தங்கள் தேவை முடிந்தவுடன் இணைப்பைத் துண்டிப்புச் செய்ய வேண்டும். இவ்வகை இணைப்பைக் கொண்டிருப்பவர்கள் தமக்கென எதுவித 'இன்ரநெற்' முகவரியையும் கொண்டிருக்க மாட்டார்கள். ஆனால், 'இன்ரநெற்'றில் உள்ள தகவல் தளங்களை பார்வையிடவும், அவற்றில் இருந்து இறக்குமதி செய்யவும் முடியும். இது செலவு குறைந்த இணைப்பு முறை என்பதால் தனிநபர்கள் இவ்வகைச் சேவையையே அதிகமாகப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். இப்படியான சேவை வழங்குநர் சிலவேளைகளில் தங்களது வாடிக்கையாளர்களுக்கு இலத்திரனியல் தபால் வசதியைச் செய்து கொடுக்கிறார்கள். இவ்வகை இணைப்புக் கொண்டவர்கள் தங்களது தகவல் தளங்களை அல்லது Home Page இனை நிறுவ விரும்பின், பல நிறுவனங்கள் இலவசமாக வழங்கும் சேமிப்பக வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அந்தளவில் www.Tripod.com.,www.- geocities.com. என்பன கூடுதலான சேமிப்பக வசதிகளையும், கூடுதலான வாடிக்கையாளர் அல்லது உறுப்பினர்களையும் கொண்ட வெப் தளங்கள் ஆகும். இவற்றின் வெப் தளத்தில் நுழைந்து எமக்கென இலவச சேமிப்பக வசதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

### 'இன்ரநெற்'றில் தமிழ்

'இன்ரநெற்'றில் தமிழின், தமிழர்களின் செயற்பாடானது மற்றைய திராவிட மொழிகளைக் காட்டிலும் மேலோங்கியே காணப்படுகின்றது. இதற்கான கூடுதல் பங்களிப்பை இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் உள்ளவர்களைவிட புலம்பெயர்ந்து மேற்கத்தைய நாடுகளில் வாழ்பவர்களே அளிக்கிறார்கள் என்று கூறின் மிகையாகாது. தமிழ் சம்பந்தமாக பத்திரிகைகள், சஞ்சிகைகள், செய்தித்தளங்கள், சினிமா, இலக்கிய ஆய்வுகள், ஆவணப்படுத்தல்கள், மென்பொருட்கள் என்பன காணப்படுகின்றன.

பத்திரிகைகளில் வீரகேசரி (www.-ccom.lk/.virakesari), நண்பன் -மலேசியா, (www.murasu.com/nanban), தினக்குரல் - இந்தியா, www.thinakural.com) போன்றவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம். சஞ்சிகைகளில் ஆனந்த விகடன் (www.vikatan.com), குமுதம் (www.kumudam.com), கல்கி (kalki.weekely.com) என்பவற்றையும் 'வெப்' சஞ்சிகை குயிலையும், சிந்தனைத் தடாகத்தையும் (www.tamilweb.com) குறிப்பிட்டுக் கூற முடியும். இன்னும் ஏராளமான சஞ்சிகைகள், பத்திரிகைகள் 'இன்ரநெற்'றில் வெளிவருகின்றன.

செய்தித்தளங்கள் என்ற முறையில் ஈழம் (www.eelam.com), தமிழ் 'நெற்' (www.tamilnet.com) என்பன முன்னணி வகிக்கும் தமிழ், தமிழர் சம்பந்தமான செய்தித் தளங்கள் ஆகும். இதில் ஈழத்தில் தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் தமிழ் நெற்றில் ஆங்கிலத்திலும் செய்திகள் உள்ளன. இவற்றிற்கான செய்திகள் ஒவ்வொரு நாளும் புதுப்பிக்கப்படுகின்றன.

தமிழ் சினிமா பற்றி நோக்குகின்றபோது ஏராளமான தளங்களை, பக்கங்களைக் காண முடியும். இவற்றை மூன்று அடிப்படை வகைகளில் நோக்க முடியும். முதலாவதாக தமிழ் சினிமாவை ஆவணப்படுத்தும் முயற்சியில் உள்ள வெப்தளங்கள், நடிகர், நடிகைகள் மற்றும் சினிமாவுடன் சம்பந்தப்பட்டவர்களால் தங்களுக்கென உருவாக்கப்பட்ட வெப்தளங்கள், ரசிகர்களால் தங்களது நடிக நடிகையர், இசையமைப்பாளர்களுக்காக உருவாக்கப்பட்ட தளங்கள், பக்கங்கள் என்பன ஆகும். உதாரணமாக www.tamilcinema.com என்பது ஆவணப்படுத்தும் முயற்சியில் உள்ள தளம் ஆகும். இதில் இதுவரை வெளிவந்த தமிழ்ப்படங்கள், ஆண்டுகள் அடிப்படையில் பிரிக்கப்பட்டு சேமிக்கப்பட்டுள்ளன.

இலக்கிய ஆய்வு முயற்சிகள், ஆவணப்படுத்தல்கள் ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளபோதும் சிலவற்றை குறிப்பிட்டுச் சொல்ல முடியும். கலாநிதி. கே. கல்யாணசுந்தரம் (www.geocities.com/a/thens/5180) என்பவரின் தமிழ் இலத்திரனியல் நூலகத்தைக் குறிப்பிட முடியும். இதில் மற்றைய இலக்கிய சம்பந்தமான தளங்களுக்கான இணைப்புகள் (link) உள்ளன. மற்றும் பலர் பாரதியார் கவிதைகள், திருக்குறள் (ஆங்கிலம் - தமிழ்), கவிதைகள், சினிமாப் பாடல்கள், தங்களது இலக்கியங்கள் என்பனவற்றை ஆவணப்படுத்தியுள்ளனர். ஒருவர் தமிழ் நாட்டில் இற்றைவரை வெளியான தமிழ் நாவல்களை ஆவணப்படுத்தியுள்ளார். அதில் வெளியான ஆண்டு, நாவலின் பெயர், வெளியீட்டகத்தின் பெயர், எழுத்தாளர் போன்ற விடயங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மென்பொருட்கள் (Software), எழுத்துக்கள் (fonts) என்பவற்றை எடுத்துக் கொண்டால் பதமி (Word Processor) முரசு அஞ்சல், (www.murasu.com) குப்புசாமியின் 'கல்வி', கலாநிதி வி. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் தமிழ் விளையாட்டுக்கள் (Tamil Games) மற்றும் மயிலை, மயிலை சிறி, இன்னும் பலப்பல தளங்களில் பரவிக் கிடக்கும் எழுத்துக்களையும் குறிப்பிட முடியும். தற்போதும் பல மென் பொருட்கள் தயாரிப்பிலும், விற்பனையிலும் இருப்பதாக அறிய முடிகிறது.

தமிழைக் கணிணி முறைப்படுத்தலில் பல சிக்கல்கள் உள்ளன. என்னவெனில், ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான சாவிப்பலகை (சாவிப்பலகை முறைகள் பற்றிசென்ற இளங்கதிரில் கணிணியில் தமிழ்' என்ற தலைப்பில் நோக்கப்பட்டுள்ளது.) முறைமையை பயன்படுத்துவதால் அதை வாசிப்பவரிடமும் அவ்வகையான சாவிப்பலகை முறை இருக்க வேண்டியது அவசியமாகின்றது. தமிழில் ஆறுக்கும் மேற்பட்ட சாவிப்பலகை முறைகள் புழக்கத்தில் உள்ளன. வீரகேசரி, 'jaffna' எழுத்துருவிலும், நண்பன் 'முரசு அஞ்சல்' என்ற எழுத்துருவிலும், தினக்குரல் 'இணைமதி' என்ற எழுத்துருவிலும் வெளிவருவதை உதாரணமாகக் குறிப்பிட முடியும். இம்மூன்று வகை எழுத்துக்களும் வெவ்வேறு வகையான சாவிப்பலகை முறைமையைக் கொண்டவை. இதனால் முரசு அஞ்சலில் உள்ளதை 'இணைமதி'யிலோ, "jaffna" இலோ வாசிக்க முடியாத நிலையே உள்ளது. இதனால் தமிழில் தகவல்களை வெளியிடுபவர்கள் தாங்கள் உபயோகிக்கும் எழுத்துருவை இலவசமாக "ftp மூலம் இறக்குமதி செய்யக்கூடிய நிலையில் அவற்றை தங்களது தளங்களில் சேமித்து வைக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. உதாரணமாக வீரகேசரியை வாசிக்க வேண்டுமாயின் 'jaffna" என்ற எழுத்துரு எங்களின் கணிணியில் இருக்க வேண்டும்.

# காஷ்மீர் விடுதலைப் போராட்டமும் 'இந்திய பக்தியும்'

"இந்திய மாயை"க்குள் சிக்காத இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் குறைவென்றே கூறலாம். இந்தியாவை எதற்கும் விட்டுக்கொடுக்காத அளவுக்கு பழக்கப்பட்டுள்ளோம். இந்தியா எமது நாடு என்றோ அல்லது இந்தியா எங்களுக்காக குரல் கொடுக்கின்ற/குரல் கொடுக்கக்கூடிய நாடாக எம்மில் பலர் நம்ப பழக்கப்பட்டுள்ளனர்.

கிரிக்கெட் போட்டி ஆரம்பித்து விட்டால் இந்தியா வெல்லவேண்டுமென பிரார்த்தனை செய்வது தொடக்கம், தமது இருக்கின்ற சொத்துக்களை பந்தயம் கட்டுவது, இதனால் சண்டைகள் தோன்றுமிடத்து அதற்கு முகம்கொடுப்பது, இந்தியா வெற்றியீட்டினால் வெடி கொழுத்தி, தண்ணி பார்ட்டி வைத்து சந்தோஷத்தைக் கொண்டாடுவது வரை நமது இந்திய ஆகர்ஷிப்பைக் காண முடியும்.

இது வெறுமனே விளையாட்டு மட்டுல்ல இந்திய அரசியல் பற்றிய புரிதலும் இப்படிக் தான் இருக்கிறது. இந்தியாவை எதிர்த்து நிற்கும் எந்த ஒரு நாடும் எமக்கும் எதிரி நாடு, இந்தியா அணுச் சோதனை நடத்தினால் அதனை இந்திய மக்கள் ஏற்றுக் கொள்கிறார்களோ இல்லையோ இங்கு வாழும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டு வெற்றிப்பெருமிதம் கொள்வர். பாகிஸ்தானோ, சீனாவோ, அமெரிக்காவோ இதனைக் கண்டிக்க முயன்றால் அந்நாடுகள் எமது ஆத்திரத்துக்குப் பலியாகும். பி.ஜே.பி. கவிழாமல் காக்க வேண்டும் எனத் தோன்றும். (பி.ஜே.பி. தமிழ் மக்களின் போராட்டத்துக்கு ஆதரவான கட்சி என்கிற நம்பிக்கை வேறு)


இந்தியாவை இந்தியா நியாயப்படுத்தாத பக்கத்திலிருந்து கூட நாங்கள் நியாயப்படுத்துவோம்.

இந்திய பார்ப்பனிய, இந்துத்துவ, சுரண்டும் வர்க்க, ஆணாதிக்க நலன்களிலிருந்து பிறக்கும் அனைத்து விளைவுகளுக்கும் எம்மிடம் சமாளிப்புகள் இருக்கும்.

ஆனால் இந்தியா ஒரு போதும் தமிழ் மக்களுக்கு சார்பாக, ஏன் இந்திய வம்சாவழித் தமிழர்களுக்காகக் கூட இருந்ததில்லை என்பது தான் வரலாறு கற்றுத் தந்த பாடம். இலங்கையின் அல்லது தமிழ் மக்களின் பிரச்சினைகளில் இந்தியா தலையிட்ட அனைத்து சந்தர்ப்பங்களிலும் இந்தியாவின் நலனை கருத்திற்கொண்டு-தான் தலையிட்டு வந்துள்ளது. அது மட்டுமன்றி இங்குள்ள அனைத்து பிரச்சினைகளையும் இந்திய நலனுக்கு காவு கொடுக்கும் வகையில் தான் நடந்து-கொண்டு வந்துள்ளது. இவை குறித்து ஏற்கெனவே சரிநிகரிலும் பல கட்டுரைகள் பிரசுரமாகியிருக்கின்றன.

இந்தியா ஒரு போதும் ஒரு நாடாக இருந்ததில்லை. எப்படி இலங்கை என்பது செயற்கையாக உருவாக்கப்பட்ட ஒரு நாடோ, இலங்கை என்பது எப்படி ஒரே நாடு என்று கற்பிதம் செய்யப்பட்டிருக்கிறதோ அது போலத் தான் இந்தியாவும் "பாரத தேசம்", "இந்திய தேசம்" எனும் கருத்தாக்கமும் போலியானதும், கற்பிதமானதுமாகும். இந்தியா தேசிய இனங்களின் சிறைக்கூடமாகத் தான். இது வரை இருந்து வருகிறது. காலனித்துவ சக்திகளின் நிர்வாக வசதிக்காக எப்படி இலங்கை என்ற "ஒரு" நாடு உருவாக்கப்பட்டதோ அது போல தான் இந்தியாவும் காலனித்துவ சக்திகளால் ஒரு நாடாக்கப்பட்டதும்.

இந்தப் புனைவுகளுக்கு ஆரம்பத்தில் இந்தியாவிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த வெளியீடுகள், (சஞ்சிகைகள், பத்திரிகைகள்) காரணமாக இருந்தன. இன்று சக்தி டிவிக்குடாக, சண் டி.வியும், சுவர்ணவாஹினிக்கூடாக ராஜ் டிவியும், எ.என்.எல். உக்கூடாக எம்.டி.வி.யும் அந்தப் பங்களிப்பை ஆற்றுகின்றன. இந்திய அரசியல் பிரச்சாரம், நுகர்பொருள் பிரச்சாரம், மற்றும் மோசமான ஆதிக்க கலாசாரக் கூறுகளைக் கொண்ட சினிமா, தொலைக்காட்சி நாடகங்கள், பொப் பாடல்கள் என இதனூடாக வந்து சேர்ந்து கொண்டேயிருக்கின்றன.



இன்று தென்னிலங்கையில் எப்படி ஒரே இனம், ஒரே மதம், ஐக்கிய இலங்கை, நாடு துண்டாடப்பட விட முடியாது எனும் கருத்தாக்கம் எல்லோர் மத்தியிலும் மரபான கருத்தியலாக புனையப்பட்டுள்ளதோ அது போலத்தான் இந்தியத் தேசியம் பற்றி புனையப்பட்டுள்ள கற்பிதங்களும்.

இந்தியா வலுக்கட்டாயமாக இணைத்து வைத்திருக்கின்ற பல தேசங்களும் சுயாட்சி கோரி போராடி வருகின்றன. அப்போராட்டங்கள் வெளியுலகுக்கு தெரியாதவாறு ஒளித்து வைக்கப்பட்டு வருகின்றன. அப்போராட்டங்களை "பிரிவினைவாதம்" என்றும் அப்போராளிகளை "பயங்கரவாதிகள்", "நாசகார சக்திகள்", "ஊடுருவல்காரர்கள்" என்றும் பிரச்சாரப்படுத்தப்பட்டு வருகிறது. இது மக்கள் மத்தியிலும் ஆழமாக புனையப்பட்டிருக்கிறது.

நாம் பலியாகியிருக்கும் பல்வேறு புனைவுகளைப் போலவே இந்தப் புனைவுகளாலும் நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பிரிவினர் பற்றி எதுவும் தெரியாதவர்களாக ஆக்கப்பட்டுள்ளோம்.

இன்றைய காஷ்மீர் விவகாரத்திலும் இப்படித்தான். திரும்ப திரும்ப பேசப்படும் விடயம்

"...முதலில் போரைத் தொடங்கியது பாகிஸ்தானா, இந்தியாவா, முதலில் அணு ஆயுதத்தைப் பயன்படுத்தப்போவது யார், கிளின்டன் பாகிஸ்தானை எச்சரிப்பு, இரு நாடுகளுக்கிடையிலான ராஜதந்திர உறவுகள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. எந்த நேரத்திலும் இரு நாடுகளுக்கிடையிலும் போர் மூளும் சாத்தியம்..." இப்படிப்பட்ட பரபரப்பான செய்திகளுக்குள் உருமறைக்கப்பட்ட விடயம் தான் காஷ்மீர் மக்களின் பிரச்சினை.


இன்று காஷ்மீர் மக்களின் விடுதலைக்காகப் போராடுபவர்கள் "ஊடுருவல்காரர்கள்", "அத்துமீறல்காரர்கள்", "ஆக்கிரமிப்பாளர்கள்", "பயங்கரவாதிகள்", நாசகாரசக்திகள், இதனை திருப்பித் திருப்பி எமது தொடர்பு சாதனங்கள் கூறவே, நாங்களும் அப்படியே அதனை விழுங்கி விடுகிறோம். அதனை அப்படியே நம்பிவிடுகிறோம். அம்மக்களின் உரிமைகளையும், அம்மக்கள் மீதான கொடுமைகளையும் மறந்து விடுகிறோம், அல்லது திட்டமிட்டு மறக்கடிக்கப்படுகிறோம்.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளிருந்து கொண்டு தான் தற்போதைய "இந்திய-பாகிஸ்தான்" பிரச்சினையை அடக்கப்படும் காஷ்மீர் மக்களின் நலனில் இருந்து பார்க்க வேண்டியிருக்கிறது. உண்மையில் காஷ்மீர் மக்கள் இந்த இரு நாடுகளையும் ஆக்கிரமிப்பாளர்களாகக் கூறிக்கொண்டிருக்க மறுபுறம் இரு நாடுகளும் மாறிமாறி பரஸ்பரம் ஆக்கிரமிப்பாளர்கள் என குற்றஞ்சாட்டிக்கொண்டிருக்கும் விநோதத்தைக் காண்கிறோம்.

ஜம்மு காஷ்மீர் பிரதேசம் 217,000 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட பிரதேசம். (இதனை விடச் சிறிய நாடுகள் 93 உலகில் உள்ளன)இதில் இந்தியா ஆக்கிரமித்துள்ள பகுதி 135,000 சதுர கிலோமீற்றர் பகுதியாகும். (இதில் 1962இலிருந்து சீனாவால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் 35,000 சதுர கிலோமீற்றர் பகுதியும் உள்ளடங்கும்.) அஸாத் காஷ்மீர் எனும் 11,000 கிலோ மீற்றர் பகுதி பாகிஸ்தானின் மறைமுக ஆக்கிரமிப்புக்குள்ளாக்கப்பட்டிருக்கும் பகுதியாகும். கில்கித்-பல்திஸ்தான் எனும் 71,000 கிலோமீற்றர் பகுதி பாகிஸ்தானின் நேரடி ஆக்கிரமிப்புக்குள்ளாக்கப்பட்டிருக்கும் பகுதி.


இவ் அத்தனை பகுதியிலுமாக காஷ்மீரின் மொத்த சனத்தொகை 13.5 மில்லியன்களாகும். (இது உலகில் உள்ள 127 நாடுகளின் சனத்தொகையையும் விட அதிகமானதாகும்.) இந்திய ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் 8.5 மில்லியன் மக்களும், பாகிஸ்தானின் ஆக்கிரமிப்புக்குள்ளாக்கப்பட்ட பிரதேசங்களான அஸாத் காஷ்மீர் மற்றும் கில்கித்-பல்திஸ்தான் பகுதிகளில் முறையே 2.5 மில்லியன் மற்றும் ஒரு மில்லியன் மக்களும் அடங்குகின்றனர்.

## காஷ்மீர் மீதான ஆக்கிரமிப்பு




இது தவிர 77 வீத முஸ்லிம்களும், 20 வீத இந்துக்களும் ஏனைய 3 வீதம் சீக்கியர்கள், பௌத்தர்கள், கிறிஸ்தவர்களும் அடங்குகின்றனர்.

உலகின் மிகவுயர்ந்த மலைத்தொடர்களால் சூழப்பட்ட ஒரு பள்ளத்தாக்குப் பிரதேசம் தான் ஜம்மு காஷ்மீர். 14ஆம் நூற்றாண்டு வரை (இந்திய) இந்து மன்னர்களினாலும் பின்னர் (1579) மொகலாய ஆட்சியின் கீழும் வந்த இப்பிரதேசம் 18ஆம் நூற்றாண்டில் ஆப்கானிஸ்தான் ஆட்சியினரின் கட்டுப்பாட்டிலிருந்தது. 1819இலிருந்து சீக்கியப் பேரரசு இங்கு உருவாக்கப்பட்டதுடன் 1846இல் இது பிரித்தானியரிடம் ஒப்படைக்கப்படும் வரை ரஞ்சித்சிங் என்பவரால் ஆளப்பட்டதாக அறியப்படுகிறது. தற்போதைய ஜம்மு காஷ்மீர் மாநிலம் என்பது இரண்டாவது ஆங்கில சீக்கிய யுத்தத்தின் பின்பு பிரித்தானியர் காஷ்மீர் மீதான கட்டுப்பாட்டினை ஜம்முவிலிருந்த பட்டத்து மகாராசாவிடம் ஒப்படைத்ததன் மூலம் 1847இல் உருவாக்கப்பட்டது. இப்படி ஒரு மாநிலம் உருவாக்கப்பட்டமைக்கு உள்நோக்கமும் உண்டு. இந்தியாவுக்கும் ஆப்கானிஸ்தான், சீனா என்பவற்றிற்கும் இடையில் ஒரு தாங்கு அரசை (buffer State) உருவாக்குவதே இதன் உள்நோக்கமாகும். அப்போதைய கவர்னர் ஜெனரல் மவுண்ட்பேட்டன் பிரபுவின் நிர்ப்பந்தத்தினால் ஏராளமான சமஸ்தானங்கள் இந்தியாவுடன் இணைவதென்ற தீர்மானத்தையே எடுத்தன. இதன்படி காஷ்மீரும் இணைய வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. இங்கே பெரும்பான்மையானோர் முஸ்லீம் மக்கள். ஆனால் ஆட்சியாளர் இந்துக்கள். மகாராஜா ஹரிசிங் ஆட்சியிலிருந்தார்.




இந்தியாவின் முதல் பிரதமரான நேருவும் கூட காஷ்மீரிய பிராமணர் தான் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவிலுள்ள முஸ்லிம்களின் சனத்தொகையில் 12 வீத முஸ்லிம்கள் ஜம்மு காஷ்மீரில் தான் வாழ்கின்றனர். காஷ்மீர் தொடர்ந்தும் சுதந்திரமாக இருக்கும் என இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்னர் கூட மகாராஜா ஹரிசிங்குக்கு நம்பிக்கை ஊட்டப்பட்டிருந்தது. ஆனால் முதலில் பாகிஸ்தானிலும் ஆப்கானிஸ்தானிலுமிருந்த பதான்ஸ் என்ற இனக்குழுவினர் படையெடுப்பு நடத்தத் தொடங்கியபோது (1947 செப்டம்பர்) இந்த நம்பிக்கை தளர்ந்தது. இதனால் மகாராஜா இந்தியாவின் உதவியை நாடினார்.

இந்தியா இந்தக் கோரிக்கையை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தியது. இந்த பிரதேசம் இந்தியாவுடன் மாநிலமாக இணைந்த பின்னரே படைகளை அனுப்பி ஆக்கிரமிப்பை முறியடிப்பதாகக் கூறினார். இதன் விளைவாக 1947 ஒக்டோபர் 27 அன்று ஹரிசிங் காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்கும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார். இதனைத் தொடர்ந்து இந்தியப் படைகள் காஷ்மீரில் விமானத்தின் மூலம் இறங்கி ஆக்கிரமிப்பை பின்வாங்கச் செய்தன. இதன் போது பாகிஸ்தானால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசமே அசாத் காஷ்மீர் என அழைக்கப்படுகிறது.



மகாராஜா ஹரிசிங் ஒப்பமிட்ட இணைப்பு ஆவணத்தில் ஏழாவது வாசகத்தின் பிரகாரம் "இந்த ஆவணத்திலுள்ள எதுவேனும் ஏற்பாடு இந்தியாவின் எதிர்கால அரசியல் அமைப்பு எதனையும் ஏற்குமாறு என்னை வற்றுபுறுத்துவதாகாது. அல்லது அத்தகைய அரசியலமைப்பு எதனதும் கீழ் இந்திய அரசாங்கத்துடன் உடன்படிக்கைகள் செய்யும் எனது சுதந்திரத்தை மட்டுப்படுத்துவதுமாகாது" என்கிறது. இந்த இணைப்பின் காரணமாகத் தான் இந்திய அரசியலமைப்பின் 370வது உறுப்புரை சேர்க்கப்பட்டது. இதன்படி இந்திய அரசியலமைப்பு திருத்தங்களின் போது ஜம்மு காஷ்மீர் விடயத்தில் அந்த மாநிலத்தின் சம்மதமின்றி மேற்கொள்ள முடியாது. அது மட்டுமன்றி காஷ்மீருக்கு மட்டும் இந்தியாவின் எந்த மாநிலத்துக்கும் இல்லாத வகையில் தனியான மாநில அரசியலமைப்பைக் கொண்டிருக்கிறது.

ஆரம்பத்தில் கண்ட உடன்பாட்டின் படி " மாநிலத்தில் இணைப்பு விவகாரம் பிணக்கிற்கு உட்படுமானால் இணைப்பானது அந்த மாநில மக்களது விருப்பத்தின்படி தீர்மானிக்கப்படும். காஷ்மீரைப் பொறுத்தளவில் அங்கு சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட்டு படையெடுப்பாளர் அகற்றப்பட்டதும் இணைப்பு தொடர்பாக அங்கு சர்வசன வாக்கெடுப்பு நடாத்தப்படும்" என இந்திய தரப்பில் உத்தரவாதம் அளித்திருந்தனர். ஆனால் இன்று வரை அப்படியொரு சர்வசன வாக்கெடுப்பு நடாத்தப்படாமல் ஏமாற்றி வந்திருக்கிறது இந்தியா. இந்தியாவைப் பொறுத்தளவில் மேற்படி உத்தரவாதத்தில் ""படையெடுப்பாளர்கள் அகற்றப்பட்டதும்" எனும் வாசகத்தை சாதகமாக்கிக்கொண்டு (காஷ்மீரின் ஒரு பகுதியான அசாத் காஷ்மீர் இன்னும் ஆக்கிரமிக்கப்பட்டபடி இருப்பதைக் .காட்டி வருகிறது. இந்த "அகற்றுதல்" லுக்காகவே முன்னர் இரண்டு யுத்தங்கள் புரியப்பட்டிருந்தன. அப்படியொரு தேர்தல் வைத்தால் அதன் முடிவுகள் எப்படி இருக்கும் என்பதை விளங்கிக்கொண்டே இந்தியா இன்னமும் நொண்டிச் சாட்டுகளை கூறி இழுத்தடித்து வருகிறது.

காஷ்மீர் மக்கள் ஏமாற்றப்பட்டதும், காஷ்மீரை ஆக்கிரமித்து அங்கு அடக்குமுறைகளை கட்டவிழ்த்து, ஜனநாயகக் கோரிக்கைகளை நசுக்கியதுமே காஷ்மீரின் முதலாவது விடுதலை இயக்கமான ஜம்மு காஷ்மீர் விடுதலை இயக்கம் (JKLF-Jammu Kashmir Liberation Front) 1964இல் தோற்றுவிக்க காரணமானது. பூரண தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து போராடத் தொடங்கியது. அதன் பின்னர் பல இயக்கங்கள் தோன்றின. அவற்றில் சிலவற்றை பாகிஸ்தானுக்கு எதிராக பயன்படுத்த இந்தியாவும், இந்தியாவுக்கு எதிராக பயன்படுத்த பாகிஸ்தானும் இயக்கங்களைக் கையாண்டு வருகின்றன. வேறும் சில இயக்கங்கள் இரு நாடுகளையும் எதிர்த்து போரிட்டு வருகின்றன. இன்று மொத்தம் 43 இயக்கங்களுக்கும் மேற்பட்ட இயக்கங்கள் இருப்பதாக அறியப்படுகிறது.

சில இயக்கங்கள் பாகிஸ்தானோடு இணைவதையும் சில இயக்கங்கள் இந்தியாவோடு இணைவதையும், சில இயக்கங்கள் தனி நாடாகவே இருப்பதையும் தங்களின் கொள்கையாகக் கொண்டுள்ளன. எது எவ்வாறிருப்பினும் மக்களை இது குறித்து தீர்மானிக்க சந்தர்ப்பமளிக்க கோரப்பட்டு வருகிறது.

எப்படியிருந்தபோதும் காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை நசுக்கும் இரு நாடுகளுமே காஷ்மீர் மக்களைப் பொறுத்தவரை எதிரிகள் தான். இது வரை இரு நாடுகளும் போராட்டத்தை நசுக்க தமது நாட்டு படைகளைக் கொண்டு பண்ணி வரும் அட்டுழியங்களும், பாலியல் வல்லுறவுச் சம்பவங்களும், படுகொலைகளும் பெரும்போக்கிற்கூடாக (main-stream) வெளித்தெரியாமல் போய்விட்டுள்ளது. விடுதலை இயக்கங்களின் ஆவணங்கள், பிரசுரங்கள் தான் இவற்றை அம்பலப்படுத்துவனவாக இருக்கின்றன. உலகின் பெரிய ஜனநாயக நாடு என்கின்ற போலி முகத்தை வெளியுலகுக்குக் காட்டிக்கொண்டு அஸாமிலும், பஞ்சாப்பிலும், மிசோராமிலும், நாகாலாந்திலும், காஷ்மீரிலுமாக தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைகளை திட்டமிட்டு நசுக்கும் பயங்கரவாதத்தை நாம் நுணுக்கமாக அறிந்து கொண்டிருத்தல் அவசியமாகும். ஏனெனில் இந்த பின்னணிகளை வைத்துத் தான் இந்தியா ஈழ விடுதலைப் போராட்டத்தில் வகிக்கும் பாத்திரத்தைக் கணிக்கலாம்.

-கோமதி

XIX
ARTICLE 19
INTERNATIONAL CENTRE AGAINST CENSORSHIP

# தணிக்கை ஜூன் 5 1998-1999

## ஒரு வருட நினைவு

# "இலங்கையில் நிலவிவரும் தணிக்கை, இனப்பிரச்சினை மற்றும் தொடர்புசாதன சீர்திருத்தம்"

## தொடர்பான 'ஆட்டிக்கிள் 19' இன் அறிக்கையிலிருந்து:

1988 ஜூன் 5ம் திகதி, அவசரகாலச் சட்டத்தின் கீழ் சில குறிப்பிட்ட பாதுகாப்பு விடயங்கள் தொடர்பான செய்திகளை வெளியிடுதல் மீதான தணிக்கை ஜனாதிபதியால் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட போது (1995 செப்டம்பர் 21 முதல் டிசம்பர் 20 வரையும் பிறகு 1996 ல் ஏப்பிரல் 19இலிருந்து ஒக்டோபர் 8வரையும்) அதனைக் கண்காணிக்கும் பொறுப்பு சிவில் அதிகாரியிடம் இருந்தது. ஆனால் இம்முறை இதனைக் கண்காணிக்கும் பொறுப்பதிகாரியாக இராணுவத்தின் உயரதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார். இலங்கையின் வரலாற்றிலேயே முதல்தடவையாக தணிக்கைச் சட்டத்தின் கீழ் ஒரு இராணுவ அதிகாரி தணிக்கை அதிகாரிப் பொறுப்புக்கு நியமிக்கப்பட்டது குறித்து தொடர்பு சாதன அமைப்புக்கள் பலவும் தமது எதிர்ப்பைத் தெரிவித்தன. சுதந்திர ஊடக இயக்கம் ஊடக சுதந்திரம் தொடர்பாக இந்த அரசாங்கம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அளித்த அனைத்து வாக்குறுதிகளையும் முற்றாகத் தூக்கி வீசுகின்ற ஒரு நடவடிக்கையாகும் என்று கண்டித்தது.

இந்தச் செய்தித் தணிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட போது, வடக்கில் புதிய ஒரு தாக்குதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மாங்குளம் நகரைக் கைப்பற்றுவதற்காக துருப்புகள் தீவிரமாக செயற்பட்டுக் கொண்டிருந்தன. யாழ்ப்பாணத்துக்கான தரைப்பாதை ஒற்றைத் திறப்பதற்கான முயற்சி நடந்து கொண்டிருக்கும் போதே இந்தப் புதிய தாக்குதல் ஆரம்பமாகியிருந்தது. இந்தத் தாக்குதல்கள் தொடர்பாக ஏற்கெனவே இராணுவம் ஒரு உத்தியோகபூர்வமற்ற செய்தி இருட்டடிப்பை அமுலுக்குக் கொண்டு வந்திருந்தது. மே 31ம் திகதி 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைச் செய்தியொன்று இது தொடர்பாக இவ்வாறு எழுதியது.

"மாங்குளத்தைச் சுற்றிவளைக்கும் ஒரு நடவடிக்கையாக படையினர் இரண்டு முனைகளில் முன்னேறிக் கொண்டிருந்தனர். இந் நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் இராணுவத்தலைமையகத்திற்கோ வன்னிப் பின்புல தலைமையகத்திற்கோ கிடைக்காத விதத்தில் உயர் மட்ட இரகசியம் பேணப்படுகிறது குறிப்பிடத்தக்க வெற்றி கிடைக்கும் வரை செய்தி இருட்டடிப்பு ஒன்றைப் பேணுவதென அதிகார உயர் மட்டம் முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது. இதனால் அங்கிருந்து எந்த அறிவிப்போ, தொடர்ச்சியான செய்தி அறிக்கைகளோ வெளிவருவதில்லை.

இதற்குச் சில நாட்களுக்குப் பிறகு இராணுவ செய்தித் தணிக்கை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

1995இலோ 1996இலோ கொண்டு வரப்பட்டிருந்த செய்தித்தணிக்கை விதிகளிலிருந்து 1998 இல் கொண்டு வரப்பட்ட செய்தித் தணிக்கை விதிகள் சில விடயங்களில் வேறுபட்டிருந்தன. இராணுவ ஆயுதக் கொள்வனவு தொடர்பான விடயங்கள் முன்னைய தணிக்கைகளின் போது உள்ளடக்கப்பட்டிருந்தன. இம்முறை இவை தொடர்பான செய்திகளுக்கு தணிக்கை விதிக்கப்படாதது ஒரு வரவேற்புக்குரிய விடயம் தான். ஆயினும், தேசிய பாதுகாப்புக் காரணமாக விதிக்கப்படக் கூடியதென சர்வதேசச் சட்டத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்ட பூர்வ கட்டுப்பாடுகளை விட பல்வேறு விதத்திலும் பெருமளவுக்கு கட்டுப்பாடுகளை விதிக்கக்கூடிய விதத்தில் இந்தத் தணிக்கை விதிகள் எழுதப்பட்டிருந்தன. இவை உள்நாட்டு ஊடகங்களை மட்டுமல்லாமல் வெளிநாட்டு ஊடகங்களையும் கட்டுப்படுத்தும் விதத்தில் அமைந்திருந்தன. முன்னைய தணிக்கைகளின் போது வெளிநாட்டு ஊடகங்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கவில்லை. ஜூன் மாதம் வெளிநாட்டு செய்தியாளர்கள் மீதான தணிக்கை நீக்கப்படும் என அறிவிக்கப்பட்ட போதும் அது குறித்த நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

இந்தச் சட்ட விதிகள், ஆசிரியர்கள், வெளியீட்டாளர்கள், ஒலிப்பரப்பாளர்கள்... அவர்கள் உள்நாட்டைச் சேர்ந்தவர்களாயினும் சரி, வெளிநாட்டைச் சேர்ந்தவர்களாயினும் சரி..... கீழுள்ள விடயங்கள் தொடர்பான செய்திகளை அச்சிடுதல், வெளியிடுதல் விநியோகித்தல் ஒலிப்பரப்பல் ஆகியவற்றிலிருந்து தடை செய்கின்றன.

"ஆயுதப் படையினராலோ அல்லது (விஷேட அதிரடிப் படை உள்ளிட்ட) பொலிஸ் படையினாலோ நடாத்தப்படுகின்ற அல்ல நடாத்தப்பட உத்தேசித்துள்ள எந்த நடவடிக்கைகள் படைகள் அல்லது ஆளணிகளின் குவிப்புக்கள் அல்லது விமானங்கள் அல்லது படகுகள் உள்ளிட்ட ஆயுத தளபாடங்கள் குவிக்கப்படுவது மற்றும் எந்த ஒரு ஆயுதப்படை அல்லது பொலிஸ்படை உறுப்பினரது உத்தியோக பூர்வமான நடவடிக்கைகள் .



ஒகஸ்ட் 17ம் திகதி, பாதுகாப்பு அமைச்சு படை உயர் அதிகாரிகளது இடமாற்றங்கள் தொடர்பான செய்திகள் புலிகளுக்கு உதவியாக அமையும் என்று கருதியதால் அவை தொடர்பான செய்திகளும் தடை செய்யப்பட்டன.

இந்த விதிகள் வரையப்பட்டுள்ள விதமானது, ஆயுதப் படைகள் பொலிஸ்படையின் நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட எந்த விடயமும் அல்லது படைக் குவிப்புக்கள் மட்டுமல்லாது பாராளுமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிக்கைகளோ அல்லது அரச பிரதிநிதிகளது அறிக்கைகளோ வெளியிடப்படுவதையும் கூட தடைசெய்தது. இவ்விதிகள், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விடயங்கள் மற்றும் சாதாரணமாக மக்கள் முன் வைக்கப்படக்கூடிய சட்டபூர்வமான விடயங்களுக்கிடையில் எந்த வேறுபாட்டையும் காட்டவில்லை. இவை வீதி ஒழுங்கு தொடர்பான பொலிஸ் அதிகாரிகளது நடவடிக்கைகள், யுத்தப் பிரதேசத்துக்குப் பல மைல் தூரங்களுக்கு அப்பால் உள்ள, குற்றத்தடுப்பு செயலில் ஈடுபடும் பொலிசாரது நடவடிக்கைகள் தொடர்பாகவோ கூட செய்தி வெளியிடப்படுவதை தடை செய்யும் விதத்தில் அமைந்திருந்தன. மேலும், இராணுவ ஆயுதக் கொள்வனவு தொடர்பான செய்திகளுக்கு தணிக்கையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தாலும், அவை கூட ஆயுதப்படைகள் மற்றும் பொலிஸ் படையைச் சேர்ந்த எந்த ஒரு உறுப்பினரதும் உத்தியோக பூர்வ நடவடிக்கைகள் தொடர்பாக அறிக்கையிடல் தணிக்கைக்குள்ளாக்கப்பட்டிருப்பதன் மூலம் கட்டுப்படுத்தப்பட்டன.

இந்தச் சட்ட விதிகள் மீறப்படும் பட்சத்தில், தணிக்கை அதிகாரி, 'தான் அவசியம் என்று கருதும் உத்தரவுகளை' வழங்கவும், அத்தகைய மீறலுக்கு பயன்படுத்திய அச்சகம் அல்லது உபகரணங்கள் பயன்படுத்தப்படுவதை குறிப்பிட்ட காலத்துக்கு தடை செய்யும் உத்தரவை வழங்கவும் அதிகாரம் கொண்டவராவார். இதே உத்தரவில் இந்த அதிகாரி தடை செய்யப்பட்ட விடயம் தொடர்ந்து பிரசுரிக்கப்படுவதற்கோ அல்லது ஒலி/ஒளி பரப்பப்படுவதற்கோ இயலாத வகையில் நடவடிக்கைகளை எடுக்கவும் உத்தரவிட முடியும்..

இந்தச் சட்ட விதிகள் சொல்லப்பட்ட விடயங்கள் தொடர்பான செய்தி வெளியிடல் அல்லது ஒலிபரப்பல் மீது ஒரு முற்றுமுழுதான தடையையே உண்மையில் கொண்டு வந்திருந்தன. இவை தணிக்கை அதிகாரியினால் முன்கூட்டியே தணிக்கைக்குட்படுத்தும் ஒழுங்கை வழங்கவில்லை என்ற போதும், அவ்வாறு தான் அவை அமுல் செய்யப்பட்டன. ஒரு குறிப்பிட்ட அளவுக்கு செய்தியறிக்கைகள் வந்து கொண்டிருந்தன, அமைச்சுகளின் செய்தி அறிக்கைகள் அவற்றால் இன்னமும் வெளியிடப்பட்டுக் கொண்டிருந்தன. யுத்தம் தொடர்பான செய்தியறிக்கைகள் தணிக்கை அதிகாரியிடம் அனுமதிக்காக அல்லது -முன் கூட்டிய தணிக்கைக்காக- சமர்ப்பிக்கப்பட்டன. தணிக்கைச் சட்ட விதிகள் தடைசெய்த விடயங்கள் தொடர்பான செய்திகளை தணிக்கை அதிகாரியின் அனுமதியின் பின் பிரசுரிக்க அனுமதிக்கப்பட்டன. பொ.ஐ.மு அரசாங்கத்தால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட முன்னைய இரு தணிக்கைகளின் போதும் இந்த விதமான நடைமுறையே அமுலில் இருந்தது.

கடந்த காலங்களைப் போலவே செய்தி ஆசிரியர்களும், தொடர்புசாதனவியலாளர்களும் இந்தத் தணிக்கை முறையானது மிகவும் மனம்போன போக்கில் எழுந்தமானமாகச் செய்யப்படுகிறது என்று குற்றம் சாட்டினர். செய்திகளை எழுதுவதால் புலிகளுக்கு யுத்தம் தொடர்பான யுத்ததந்திரத் தகவல்கள் போகின்றன என்ற தனது நிலைப்பாட்டை அரசாங்கத்தால் ஆதாரபூர்வமாக நியாயப்படுத்த முடியவில்லை. உண்மையில் செய்தித் தணிக்கை இருந்த போது தான் இலங்கை இராணுவத்தில் மிக மோசமான பின்னடைவுகள் நிகழ்ந்துள்ளன என சில இலங்கைச் செய்திகள் தெரிவித்தன.

இந்தத் தணிக்கை அதிகாரி ஜனாதிபதியின் பகிரங்க அறிக்கைகளைக் கூட அவர் பாதுகாப்பு அமைச்சர் மட்டுமல்லாமல் ஆயுதப் படைகளின் தலைமைக் கொமாண்டராக இருக்கிறார் என்ற போதும் தணிக்கை செய்தார். அரசாங்க வானொலியிலும் பத்திரிகைளிலும் ஏற்கெனவே வெளிவந்த செய்திகளைக் கூட அவர் மற்றைய தொடர்பு சாதனங்கள் வெளியிடுவதிலிருந்து தணிக்கை செய்தார். கடந்த காலங்களைப் போல யுத்தத்தால் காயமடைந்தவர்களது தொகைகள் அழிக்கப்பட்டது மட்டுமல்லாமல், அவரால் சில சமயங்களில் மாற்றவும் பட்டன - அதாவது அவர் தனது சொந்த எண்ணிக்கைகளைப் புகுத்தினார்.

கடந்த காலங்களைப் போலவே செய்தி ஆசிரியர்களும், தொடர்புசாதனவியலாளர்களும் இந்தத் தணிக்கை முறையானது மிகவும் மனம்போன போக்கில் எழந்தமானமாகச் செய்யப்படுகிறது என்று குற்றம் சாட்டினர். செய்திகளை எழுதுவதால் புலிகளுக்கு யுத்தம் தொடர்பான யுத்ததந்திரத் தகவல்கள் போகின்றன என்ற தனது நிலைப்பாட்டை அரசாங்கத்தால் ஆதாரபூர்வமாக நியாயப்படுத்த முடியவில்லை. உண்மையில் செய்தித் தணிக்கை இருந்த போது தான் இலங்கை இராணுவத்தில் மிக மோசமான பின்னடைவுகள் நிகழ்ந்துள்ளன என சில இலங்கைச் செய்திகள் தெரிவித்தன.

செய்தித் தணிக்கை அமுலுக்கு வந்து ஒரு சில நாட்களில், ஞாயிறு இதழொன்றின் ஆசிரியர் தணிக்கை விதிகளை மீறும் விதத்தில் யூன் 7ம் திகதி பிரசுரமான கட்டுரை ஒன்றில் செய்திகளைப் பிரசுரித்ததாக குற்றம் சாட்டப்பட்டார். இது சட்டம் அமுலுக்கு வந்து இரண்டே இரண்டு நாட்களுக்குள் வந்த ஒரு செய்தி தொடர்பானது. இக்கட்டுரை தணிக்கை அதிகாரிக்கு காட்டப்படாமல் பிரசுரிக்கப்பட்டது என்பதே அக்குற்றச் சாட்டாகும். இந்தக் கட்டுரை தணிக்கை அமுலுக்கு வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பே அச்சடிக்கப்பட்டு விட்டது என்றும், அத்துடன் அக்கட்டுரை, தணிக்கை அமுலுக்கு வருவதற்கு ஒரு வாரத்திற்கு முந்திய அதாவது மே 28ம் திகதிய நடவடிக்கை ஒன்று பற்றியது என்றும் அப்பத்திரிகை ஆசிரியர் விளக்கமளித்தார். அந்த ஆசிரியர் மீது பிறகு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை - தணிக்கை அதிகாரியிடமிருந்து வந்த "நீர் தணிக்கை விதிகளை மீறியுள்ளது அவதானிக்கப்பட்டுள்ளது" என்று அறிவிக்கப்பட்டதற்கு மேல் !

'ஆட்டிக்கிள் 19 ' இற்கு தணிக்கைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பல கட்டுரைகளினதும் அவற்றின் தணிக்கை அதிகாரிகளால் தணிக்கை செய்யப்பட்டு திருப்பி அனுப்பப்பட்ட பிரதிகளினதும் பல்வேறு உதாரணங்கள் கிடைத்துள்ளன. சிலவற்றில் விபரங்களும் அழிக்கப்பட்டிருந்தன. இன்னும் பல வற்றில் முற்றுமுழுதான கட்டுரையே தணிக்கைக்குள்ளாகியிருந்தது - பொலிஸ் . அல்லது ஆயுதப்படை சம்பந்தப்படாத, புலிகளின் நடவடிக்கை பற்றிய - தணிக்கை சட்ட விதிகளுள் உள்ளடங்காத விடயங்கள் ! உட்பட வெட்டப்பட்டிருந்தன.

உதாரணமாக ஒரு கட்டுரையில் பின்வரும் வரிகள் வெட்டப்பட்டிருந்தன. :

'இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான ரஷ்ஷிய தயாரிப்பான MI24 ஹெலிகப்ரர் வெள்ளியன்று விழுந்து நொருங்கியதில் விமானப் பணியாட்கள் அனைவரும் கொல்லப் பட்டனர் (வெட்டப்பட்டது: ஆனால் உறுதிப்படுத்தப்படாத செய்திகள் இந்த ஹெலிகப்ரர் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக தெரிவிக்கின்றன.)

இந்தக் கட்டுரை விமானம் வீழ்ந்து நொருங்கியது தொடர்பான விடயங்களை, நடவடிக்கை தலமையகத்தின் அறிக்கையை மேற்கோள்காட்டி விபரிக்கிறது. இக் கட்டுரையின் 'இறுதிப்பகுதி இராணுவ தளபாட கொள்வனவு தொடர்பாக விபரிக்கிறது. இது தணிக்கை விதிகளுக்குள் வராவிட்டாலும் அப்பகுதி முற்றாக வெட்டப்பட்டிருந்தது.

(வெட்டப்பட்டது: விமானப்படையிடம் தற்போதுள்ள MI24 ஹெலிகப்ரர்கள் பாதுகாப்பு அமைச்சினால், பல கருத்து மாறுபாடுகளுக்கு மத்தியில் வாங்கப்பட்டவை. இவை நாட்டுக்கு வந்து சேர்ந்த போது பாவனைக்கு உகந்தவை அல்ல எனக் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த விழுந்து நொருங்கிய சம்பவம் 'விமானத்தில் அதிவிஷேட வேவு பார்த்தலில் ' ஈடுபட்ட ஆளற்ற தானியங்கி விமானம் புலிகளது கட்டுப்பாட்டுப் பகுதியில் விழுந்து நொருங்கி இரண்டே இரண்டு வாரங்களில் நடந்திருக்கிறது. ஆனால் இந்தச் சம்பவம் 'தொடர்பான தகவல் மூடி மறைக்கப்பட்டு விட்டது!)

ஆட்டிக்கிள் 19க்கு, பத்திரிகையாளரால் எழுதப்பட்ட யுத்தத்தில் காயப்பட்டவர்கள் தொடர்பான எண்ணிக்கைகளை மாற்றி தணிக்கை அதிகாரி தனது எண்ணிக்கைகளைப் புகுத்திய பல உதாரணத்தில் பத்திரிகையாளர் தணிக்கையாளருக்கு அளித்த கட்டுரையில் இருந்த தகவல்கள் இவை :

"செய்தி இருட்டடிப்பு, அதைத் தொடர்ந்து வந்த தணிக்கை என்பவற்றின் கீழ் புதுப்பிக்கப்பட்ட தாக்குதலின் போது மொத்தமாக இதுவரை ஆகக் குறைந்தது 437 படையினர் இறந்துள்ளனர், 100பேருக்கு மேல் காணாமல் போயுள்ளனர், 2800 பேர் காயமுற்றுள்ளனர்.

செய்தித் தணிக்கை அதிகாரி இந்த எண்ணிக்கைகளை வெட்டி பின்வரும் விபரங்களை அதில் எழுதியிருந்தார்.

சரியான தகவல்கள்:

கொல்லப்பட்டோர்: 247

காயமுற்றோர்: 1415

காணாமல் போனோர்: 65

### தணிக்கையும் வானொலி ஒலிபரப்பும்

யுத்தம் தொடர்பான தகவல்கள் செல்வதை முற்றாகக் கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சியின் செயலற்ற தன்மையை வானொலி ஒலிபரப்பு விவகாரம் தெளிவாக வெளிப்படுத்தியது. இலங்கை மக்களுக்கு சர்வதேச ஒலிபரப்புகளூடாகவும் உள்நாட்டு தனியார் மற்றும் அரச ஒலிபரப்பு கூட்டுத்தாபன

ஒலிபரப்பினூடாகவும் இச் செய்திகளுக்கான தொடர்புகள் கிடைத்தன. இலங்கை ஒலிபரப்பு கூட்டுத் தாபனம், பிரித்தானிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்துடன் (BBC) ஒரு ஒப்பந்தம் செய்திருந்தது. இதன்படி பி.பி.சியின் சிங்கள செய்தி ஒலிபரப்பு நேரடியாக எந்த தணிக்கைக்கோ தாமதத்திற்கோ இடமின்றி ஒலிபரப்பு செய்யப்பட முடியும். இது செய்தித் தணிக்கைக்குப் பிறகும் தொடர்ந்து கொண்டே இருந்தது. ஒப்பந்தத்தை உடைக்க விரும்பாததால் இது தொடர்ந்தது. சில வேளைகளில் இது, இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன செய்திகள் அரசாங்கத்தின் சார்பு செய்திகளை ஒலிபரப்பிய மறுகணம், தொடரும் பி.பி.சியின் செய்திகள் அவற்றுக்கு முற்றும் மாறுபட்டதாக தணிக்கையாளரின் அங்கீகாரத்துக்குப் போகாமலே ஒலிபரப்பும் நிலையைக் கொண்டு வந்தது. 1998 செப்ரெம்பரில் கிளிநொச்சியில் யுத்தம் மும்முரமாக நடந்து கொண்டிருந்த ஒரு சூழலில், இராணுவ காயம்பட்டோர் தொகை மிகவும் அதிகமாக இருந்த நிலையில், இந்தத் தகவல்கள் தீவிர கட்டுப்பாட்டுக்கு உள்ளாகியிருக்கும் போது பி.பி.சி செய்திகள் மிகவும் முரண்பாடான பிரச்சினைக்குரியவையாக இருந்தன. உண்மையில், தகவல் தொடர்புத்துறை இயக்குனர் இது தொடர்பாக தொடர்பு சாதனத்துறை அமைச்சுக்கும் தணிக்கை அதிகாரிக்கும் ஒக்டோபரில் அறிவித்து, இந்த சமமற்ற நிலை தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறும் கோரியிருந்தார். ஆயினும் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன இயக்குனர் நாயகம், சிங்கள பி.பி.சி நிகழ்ச்சியை நிறுத்தப்போவதில்லை என்று உறுதியளித்தார். இதற்கு அவர் சொன்ன காரணம் "இதைச் செய்வதன் மூலம் அரசாங்கம் எதையும் சாதிக்கப் போவதில்லை. மக்கள் நேரடியாகவே பி.பி.சியை சிற்றலைகளில் கேட்கத் தொடங்குவார்கள். அவ்வளவு தான்"

### நேரடித் தணிக்கை

அவசர கால சட்ட விதிகளின் கீழ் கொண்டுவரப்பட்ட செய்தித்தணிக்கைகட்கு மேலாக, சமீபகாலமாக நேரடித் தணிக்கைகள் செய்யப்படும் சம்பவங்களும் நடந்துள்ளன. சில உடல் மற்றும் உள நலன் காரணமாகவும் வேறும் சில அரசியல் அழுத்தங்கள் அரசாங்கத்தின் மீது கொடுக்கப்பட்டதாலும், இன்னும் சில பாதுகாப்பு காரணங்களுக்காகவும் செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

சிவில் மற்றும் அரசியல் உரிமைக்கான சர்வதேசப் பிரகடனத்தின் (ICCPR) கீழ் - இதில் இலங்கையும் கைச்சாத்திட்டுள்ளது- சில குறிப்பிட்ட நிபந்தனைகளின் கீழ் சில சொற்ப விடயங்களில் மாத்திரம் வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடு அனுமதிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக இப்பிரகடனத்தின் 19ம் அத்தியாயத்தின் 3வது பிரிவு, வெளிப்பாட்டு சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடு சட்டபூர்வமானதாக அமைய வேண்டும் எனக் கோருகிறது. சில குறிக்கோள்களை அடைவதற்கு இத்தகைய கட்டுப்பாடுகள் அவசியமானவையாக இருக்க வேண்டும் என்று அது குறிப்பிடுகிறது. அதாவது மற்றவர்களின் நற்பெயர் மீதான கௌரவம், தேசிய பாதுகாப்பு அல்லது பொது ஒழுங்கைப் பேணல், பொதுசன நலன் அல்லது விழுமியங்களைப் பாதுகாத்தல் என்பவை குறித்ததாகும். சட்ட ரீதியாக கொண்டுவரப்படாத கட்டுப்பாடுகள், அதாவது வேறு காரணங்களுக்காகக் கொண்டுவரப்படும் கட்டுப்பாடுகள் அல்லது எதற்கு அவசியமானது என்று காரணம் காட்டப்பட முடியாத கட்டுப்பாடுகள் இப்பிரகடனத்தின்படி ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை.

### 'பொதுசன நலன்' அடிப்படையிலான தணிக்கை

பொதுசன நலனின் அடிப்படையிலான மூன்று தணிக்கைச் சட்டங்கள் பொ.ஐ.மு அரசால் கொண்டுவரப்பட்டுள்ளதாக ஆட்டிக்கிள் 19 அறிகிறது. கடந்த நவம்பர் 1996ல், ஜனாதிபதி அரச செய்தித் தாள்களையும் அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தையும், தற்கொலை, தற்கொலை முயற்சி என்பன தொடர்பான தகவல்களை பிரசுரிப்பதை தவிர்க்குமாறு கேட்டுக் கொண்டார். இக் கோரிக்கை ஒரு குறிப்பாக அனுப்பிவைக்கப்பட்டது. அது வருமாறு:

மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கள் அசோசியேட்டட் நியூஸ்பேப்பர் நிறுவனம் தற்கொலை, தற்கொலை முயற்சிகள் தொடர்பான செய்திகளை வெளிப்படுவதைத் தவிர்க்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார். இந்த விடயம் தொடர்பாக விபரக் கட்டுரைகளில் விவாதிப்பது தடுக்கப்படவில்லை. இதை உங்கள் உத்தியோகத்தர்கட்கு அறிவிக்கவும்.

இத்தகைய கட்டுப்பாட்டுக்கு எந்தக் காரணமும் குறிப்பிடப்படவில்லை. இலங்கையின் தற்கொலை வீதம் உலகளாவிய ரீதியில் மிகவும் அதிகம் என்பது தெரிந்ததே.

இன்னொரு தடை ஏப்பிரல் 1997இல் வந்தது. தொலைக் காட்சியில் புகைத்தலும் மதுவருந்துதலும் காட்டப் படக் கூடாது என்பது அதுவாகும். இது எல்லா நிகழ்ச்சிகட்கும், ஏற்கெனவே தயாரிக்கப் பட்டவைக்கும் கூடப் பொருந்தும்.

மிக அண்மையில், 1998 பெப்ரவரியில் ஜனாதிபதி இன்னொரு அவசரகால சட்டவிதியை அறிவித்தார். அது தணிக்கை அதிகாரியின் அனுமதியின்றி சில படங்களை வெளியிடக் கூடாது என்று



Satanic Verses, S.J. தம்பையாவின் Budhism Betrayed? தஸ்லிமா நஸ்ரீனின் லஜ்ஜா என்ற நூல்களும் சில பௌத்த முஸ்லிம் குழுக்களின் நலன்களை முறையே பாதிக்கும் எனக் கருதி தடை செய்யப்பட்டவையாகும்.

தெரிவித்தது. தகவல் தொடர்பு துறை இயக்குனர் இதற்கான தணிக்கை அதிகாரியாக அறிவிக்கப்பட்டார். இந்த விதி 'குண்டு வெடிப்பாலோ, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழான ஏதாவது ஒரு நடவடிக்கையினாலோ கொல்லப்பட்டவர்களதோ, கொல்லப்பட்டவரது உடலின் பகுதியினதோ படங்களைப் பிரசுரிப்பதைத் தடை செய்கிறது. இந்த விதியைக் கொண்டு வந்தது தொடர்பாக விளக்கமளித்த தொடர்பு சாதனத்துறை அமைச்சர், இதைக் கொண்டு வந்தது சிறுவர்களின் மன நலனை அடிப்படையாகக் கொண்டு என்று தெரிவித்தார். உளவியல் ரீதியாக இவை ஏற்படுத்தக்கூடிய மிக மோசமான தாக்கத்தை இப்படங்கள் ஏற்படுத்தக் கூடும் என்று அவர் கூறினார். இந்தத் தடை கொண்டு வரப்பட்டது தொடர்பு சாதனவியலாளர்கள் மத்தியில் பல கருத்து மாறுபாடுகளை ஏற்படுத்தியது. சிலர் இந்த விடயம் தொடர்பாக ஒரு சுய கட்டுப்பாட்டை தாம் செய்வதையே விரும்புகிறோம் என்றும் இச் சட்ட விதியானது செய்தி அறிக்கை தொடர்பான தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்துகிறது என்றனர். எம்.ரி.வி செய்தி இயக்குனர் இவ்வாறு தெரிவித்தார்:

"யுத்தம் நடந்தால் அங்கு இறப்பும் நிகழும். ஆனால் இந்தச் சட்டவிதி இறப்பில்லாத ஒரு யுத்தம் பற்றி பேசுகிறது. நாங்கள் ஒரு குண்டு வெடிப்பு தொடர்பான செய்தியை ஒரு வைத்தியசாலையிலிருந்து கூட செய்தியாக்க முடியாத நிலையை இது உருவாக்கும். இது எமக்கு உண்மையான நிலையை தெரியப்படுத்த முடியாத ஒரு நிலையை உருவாக்கும்..."

அதேவேளை, இந்தச் சட்டம் அமுல்படுத்தப்படுவது கூட அவ்வளவு தொடர்ச்சியாக செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. குழந்தைகள் பாதிக்கப்படுவதுதான் இந்தத் தடைக்கு காரணம் என்றால், அப்படிப்பட்ட அனைத்துப் படங்களுக்கும் இந்த தடை அமுல் செய்யப்பட வேண்டும். ஆனால், சட்டவிதி சொல்வதன்படி, வேறுவிதமான கொலைகள் சம்பந்தபட்ட படங்கள் வெளியிடப்படுவதில் எந்தத் தவறும்

—— 20

# தொடர்பூடகச் சுதந்திரம் :

# இலங்கை 110வது இடத்தில்

## Freedom House அறிக்கை



இலங்கையில் நடத்தப்பட்டு வரும் இன அழிப்பு யுத்தம், மற்றும் அதன் காரணமாக ஏற்படும் அழிவுகள், இழப்புகள் என்பனவற்றை மூடிமறைப்பதற்கு அரசு செய்தித் தணிக்கையை அமுல்படுத்தி வருகிறது. அரசின் தரப்பில் இதற்கு கூறப்பட்டுவரும் சாட்டு, எதிரிக்கு அரசின் இரகசிய தகவல்கள் கிட்டாமல் செய்வது என்பதே. ஆனால் அரசுடன் போரிட்டு வரும் புலிகளைப் பொறுத்தளவில் தகவல்களுக்கு இந்த தொடர்பு சாதனங்களை நம்பி இல்லை என்பதை எவரும் அறிவர்.

எனவே இந்த செய்தித் தணிக்கை மக்களுக்குத் தான். இந்தப் போருக்கு முழுக்க முழுக்க மக்களிடம் இருந்து பலாத்காரமாக வரி அறவிடப்பட்டு வருகிறது. மக்களிடம் இருந்து பலாத்காரமாக வரியைப் பிடுங்கி அப்பணத்தில் யுத்தம் செய்து கொண்டு மக்களுக்கே அது பற்றிய உண்மையை மறைத்து வருகிறது.

சுருக்கமாகச் சொல்லப்போனால் போரை விலை கொடுத்து வாங்கும் மக்களுக்கு போர் பற்றி அறியத் தடை!

இந்த செய்தித் தணிக்கையானது அவசரகாலச் சட்டத்தின் கீழேயே அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த செய்தித் தணிக்கையின் மூலமாகவே இன அழிப்புப் போரை மூடி மறைத்து வருகிறது அரசு. அப்படியென்றால் இந்த அவசரகாலச் சட்டத்தை ஆதரிக்கும் தமிழ் கட்சிகளும் மக்களது எதிரிகளா இல்லையா? அவசரகால சட்டத்துக்கு ஆதரவளிப்பவர்கள் தணிக்கைக்குப் பொறுப்பானவர்களா இல்லையா? தணிக்கைக்கு பொறுப்பானவர்கள் இனஅழிப்பு மூடிமறைப்புகளுக்கும் பொறுப்பானவர்களா இல்லையா?

சமீபத்தில் அமெரிக்காவில் அமெரிக்கன் ப்ரீடம் ஹவுஸ் (Freedom House) எனப்படும் நிறுவனம் உலகின் பல நாடுகளின் தொடர்பூடகக் கொள்கை பற்றி நடத்திய ஒரு ஆய்வொன்றின் இறுதி அறிக்கையில் இப்படிப்பட்ட போக்குகளை "தொடர்பூடக மாபியா கொள்கை" (media mafia) என்றே குறிப்பிடுகிறது.

ஆனால் இலங்கையின் தொடர்புசாதன அமைச்சர் மங்கள சமவீரவோ "உலகிலேயே சிறந்த தொடர்பூடக சுதந்திரத்தை அனுபவிப்பவர்கள் இலங்கையில் தான் உள்ளனர்" என்கிறார்.

மேற்படி ஆய்வறிக்கையின்படி உலகிலேயே தொடர்பூடக சுதந்திரத்தை பேணுவதில் இலங்கை 110 இடத்தைத் தான் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.


ப்ரீடம் ஹவுஸ் நிறுவனம் அமெரிக்க அரசின் அனுசரணையுடன் இயங்கும் ஒரு நிறுவனம் ஆகும். எனவே இந்த அறிக்கை ஒரு வகையில் அமெரிக்க அரசுக்கு சாதகமான அறிக்கையென்றோ அல்லது பக்கசார்பான அறிக்கையென்றோ கருதவும் இடமுண்டு. அதேவேளை அந்த ஒரே காரணத்துக்காக இதனை நிராகரித்துவிடவும் முடியாது. குறிப்பாக இலங்கையின் நடைமுறை பற்றிய அனுபவம் இங்குள்ள அனைவருக்கும் தெரிந்ததே.

ப்ரீடம் ஹவுஸ் இப்படியான அறிக்கைகளை சமர்ப்பித்து அமெரிக்க அரசுக்கு சில விதந்துரைப்புகளையும் செய்வது வழக்கம். உலகின் ஜனநாயக சுதந்திரத்தை விரிவாக்குவதே இவ்வமைப்பின் நோக்கமெனக் குறிப்பிடப்படுகிறது. அவ்வறிக்கையிலேயே இலங்கைக்கு 110வது இடம் வழங்கப்பட்டிருக்கிறது.

இதன்படி அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் என்பவற்றுக்கு வேறுவேறாக புள்ளிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. நான்கு விடயங்கள் குறித்து இந்த இரு வகை ஊடகங்களுக்கும் புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன.

A = தொடர்பூடகங்களைப் பாதிக்கும் சட்டங்கள்.

B = தொடர்பூடக சுதந்திரத்தின் மீதான அரசியல் தலையீடுகள்.



இலங்கையில் நடத்தப்பட்டு வரும் இன அழிப்பு யுத்தம், மற்றும் அதன் காரணமாக ஏற்படும் அழிவுகள், இழப்புகள் என்பனவற்றை மூடிமறைப்பதற்கு அரசு செய்தி தணிக்கையை அமுல் படுத்தி வருகிறது. அரசின் தரப்பில் இதற்கு கூறப்பட்டுவரும் சாட்டு, எதிரிக்கு அரசின் இகசிய தகவல்கள் கிட்டாமல் செய்வது என்பதே. ஆனால் அரசுடன் போரிட்டு வரும் புலிகளைப் பொறுத்தளவில் தகவல்களுக்கு இந்த தொடர்பு சாதனங்களை நம்பி இல்லை என்பதே உண்மை.

C= தொடர்பூடகங்களின் மீதான பொருளாதார அழுத்தங்கள்.

D = வன்முறை நடவடிக்கைகள். (தொடர்பூடகவியலாளர்கள் கொலை செய்யப்படுதல், தணிக்கைச் சட்டங்கள், கைதுகள் போன்றவை)

இதில் 0-15 வரை புள்ளிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. சுதந்திரம் வழங்கப்பட்டுள்ள நாடுகளுக்கு 0 புள்ளியும், அதிகளவில் வன்முறையான நாடுகளுக்கு 15 புள்ளிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி உலகில் அதிகளவில் மோசமான கருத்துச் சுதந்திரம் நசுக்கப்பட்ட நிலை ஆப்கானிஸ்தானில் இருப்பதாக இவ்வறிக்கையில் கூறப்படுகிறது. மொத்தம் கருத்துச் சுதந்திர நசுக்குதலில் 100 புள்ளிகளையும் அந்நாடு பெற்றிருப்பதாகக் கூறுகிறது. அந் நாட்டின் சகல தொலைகாட்சி மற்றும் வீடியோ இயந்திரங்களை அழிக்க தலிபான் இயக்கம் கட்டளை இட்டுள்ளதுடன், 1996இல் தலிபான்கள் ஆப்கானிஸ்தானின் தொலைக்காட்சிச் சேவையை மூடிவிட்டனர். அந் நாடு கீழ்வரும் வகையில் புள்ளிகளைப் பெற்றுள்ளது.

| | A | B | C | D | Tot. |
|---|---|---|---|---|---|
| இலத்திரனியல் | 15 | 15 | 15 | 5 | |
| அச்சு | 15 | 15 | 15 | 5 | 100 |

இப்புள்ளியிடலின்படி இலங்கை பெற்றிருக்கும் புள்ளிகளின் எண்ணிக்கை 58 ஆகும். அது கீழ்வரும் வகையில் அமைகிறது.

| | A | B | C | D | Tot. |
|---|---|---|---|---|---|
| இலத்திரனியல் | 9 | 12 | 5 | 0 | |
| அச்சு | 9 | 11 | 7 | 5 | 58 |

இதன்படி இலங்கை குறை சுதந்திரமுள்ள நாடாக இனங்காணப்பட்டுள்ளது.

1998இல் அறிமுகப்படுத்தப்பட்ட யுத்த செய்தித் தணிக்கை இலங்கையின் தொடர்பூடக சுதந்திரத்தை மட்டுப்படுத்தியிருப்பதாகவும், அது போல இராணுவ நடவடிக்கைகளாலும், அவற்றுடன் தொடர்புடைய காரணங்களாலும் அறிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்றும் இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. அது போல பத்திரிகைக் காரியாலயங்களுக்கு புலனாய்வுப் பொலிஸார் நுழைவது போன்ற பல்வேறு விடயங்கள் இந்த் அறிக்கையில் அவதானம் கொள்ளப்பட்டிருக்கிறது.

இதன்படி இலங்கையில் சட்டங்களைப் பாவித்தும், அரசியல் தலையீடுகள் புரிந்தும், பொருளாதார நெருக்கடிகளை கொடுத்தும், ஏனைய வன்முறைகளை கட்டவிழ்த்தும் தொடர்பூடக சுதந்திரங்களின் மீது அரசு தலையீடு செய்திருப்பதாக குறிப்பிடப்படுகிறது. 1-15 வரையான புள்ளிகளைப் பெற்றுள்ள நாடுகள் 19 அடையாளம் காணப்பட்டுள்ளன. 16-30 வரையான புள்ளிகளைப் பெற்றுள்ள நாடுகள் 49 அடையாளம் காணப்பட்டுள்ளன. 30 வரையான புள்ளிகளைக் கொண்ட நாடுகள் <u>சுதந்திரமுடைய</u> நாடுகள் (தொடர்பூடக விடயத்தில்) எனக் கொள்ளப்படுகின்றன. அடுத்தது 31-45 வரையான புள்ளிகளைப் பெற்றுள்ள நாடுகளின் எண்ணிக்கை 22, மேலும் 46-60 வரையான புள்ளிகளைப் பெற்றுள்ள நாடுகளின் எண்ணிக்கை 30 அடையாளம் காணப்பட்டுள்ளன. 31-60 வரையான இந்த வரையறைக்குள் அடங்கும் நாடுகள் <u>குறை சுதந்திரமுடைய</u> நாடுகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதற்குள் தான் இலங்கையும் (58) அடங்குகிறது.

61-75 வரையான புள்ளிகள் பெற்றுள்ள நாடுகளை <u>சுதந்திரமில்லாத</u> முதலாவது அணி நாடுகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட நாடுகள் 42 அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன்படி இலங்கை இந்த அணிக்குள் சிக்க இன்னும் 3 புள்ளிகள் தான் பாக்கி என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. 76-100 வரையான புள்ளிகள் பெற்றுள்ள நாடுகள் <u>சுதந்திரமில்லாத</u> இரண்டாவது அணி நாடுகளாக (மோசமாக கருத்துச் சுதந்திரத்தை நசுக்குகிற நாடுகளாக) அடையாளம் காணப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட 24 நாடுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இதற்குள் தான் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

எமது நாட்டில் வரையறையற்ற தொடர்பூடக சுதந்திரம் இருப்பதாக பிதற்றித் திரியும் அரசியல் தலைவர்களுக்கு இவ்வறிக்கையும், "ஆர்டிகிள் 19" (Article 19) அறிக்கையும் தான் சமர்ப்பணம்.

— ஆனந்தன்

# பேர்ன் நாடக விழா:

# இரு நாடகங்களும் இரண்டும் கெட்டான்களும்..!

இவ்வாண்டு மார்ச் 6ம் திகதி சனிக்கிழமை சுவிஸ் தமிழ் மாணவர் மன்றத்தினர் நாடகவிழா ஒன்றை பேர்ண் நகரில் ஏற்பாடு செய்திருந்தனர். இந்த இரு நாடகங்களும் அங்கு மேடையேற்றப்பட்டன. லண்டன் தமிழ் அவைக்காற்றுக் கழகத்தைச் சேர்ந்த நாடகக் கலைஞர்களான ஆனந்தராணி, பாலேந்திரா ஆகியோருடன் டென்மார்க்கில் இருந்து நாடகக் கலைஞர் ஆதவனும், சுவிஸ் கலை பண்பாட்டுக் கழக நாடகக் கலைஞர் அன்ரன் பொன்ராஜ் மற்றும் கண்ணன், விவேகானந்தன் ஆகிய கலை இலக்கிய ஆர்வலர்களும் இந்த விழாவை அடுத்து இடம் பெற்ற விமர்சன அரங்கில் கலந்து கொண்டு விமர்சனம் செய்தனர். விமர்சன அரங்கு அழகு குணசீலன் தலைமையில் இடம் பெற்றது.

**சூரியன் உதிப்பதில்லை**

மூன்று காட்சிகளைக் கொண்ட இந்த நாடகத்தில் முதல் காட்சி தாயகப் போராட்டச் சூழலால் ஏற்படும் இடம்பெயர்/புலம்பெயர் சூழலையும் இரண்டாம் காட்சி ஒருபுறம் தாயகத்தையும் மறுபுறம் புலம்பெயர் சூழலையும் காட்டியது. மீண்டும் தாயகச் சூழலைக் காட்டுவதாக மூன்றாவது காட்சி அமைக்கப்பட்டிருந்தது. சூரியன் உதிப்பதில்லை என்ற இந்த நாடகத்தில் பல இயங்குவிதிகள் சொல்லப்படுகின்றன. முட்டைக்குள் இருந்து குஞ்சு வெளியேறுவது முதல் சர்வதேச பாட்டாளிவர்க்கப் புரட்சிவரை வார்த்தைகளால் மிகவும் அழகாகச் சொல்லப்படுகின்றது. இறுதியில் எமது தேசிய விடுதலைப் போராட்டமும் ஒரு இயங்கு விதிக்குட்பட்டது என்று கூறுகின்றது நாடகம்.

காட்டாற்று வெள்ளம் போல் பெருக்கெடுத்த பேரினவாத அலையை ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடாமல் தாயகத்தை விட்டு வெளியேறி இருப்பவர்களைப் பார்த்து குற்றவாளிகள் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது. விடுதலைப் புலிப் போராளிகளை மாவீரர்கள் என்றும் அவர்களில் ஒருவர் மரணிக்கும் போது இன்னும் பலர் அந்த ஆயுதத்தை ஏந்தத் தயாராய் எழுவதையும் அது சித்திரித்துள்ளது. புலம்பெயர்ந்த தமிழர்களிடம் இருக்கும் குற்ற உணர்வின் மீது இந்த நாடக ஆசிரியரிராலும் தொடுக்கப்படும் தாக்குதல் குறித்து ரவி அங்கு சுட்டிக் காட்டியிருந்தார். தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கு புலம்பெயர்ந்த மக்கள் பெரும் உந்துசக்தியாக இருந்திருக்கின்றனர்/இருக்கின்றனர். இது வரலாறு. இது இப்படி இருக்கையில் யோகராஜாவுக்கு இந்த உண்மை புரியாமல் போனது ஏன்?

இந்த நாடகத்தின் கலைஞர்களுக்காக அண்மையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனால் புலம்பெயர்ந்த மக்களுக்கு விடுக்கப்பட்ட விசேட செய்தியில் ஒரு பகுதியைத் தருகின்றேன். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களின் பங்கை பிரபாகரன் எவ்வளவுக்கு மதிக்கிறார் என்ற உண்மை இனியாவது உறைக்கட்டும்.

"எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய அனைத்துலக தமிழீழ மக்களே!

தமிழீழ தாயகத்தில் இருந்து புலம்பெயர்ந்து உலகின் பல்வேறு நாடுகளில் நீங்கள் வாழ்ந்து வந்த போதும், உங்களது சொந்த மண்ணின் விடுதலைக்காக, உங்களின் சொந்த மக்களின் விடிவுக்காக காலங்காலமாக நீங்கள் செய்துவரும் பங்களிப்பிற்கும் உதவிகளுக்கும் தமிழீழ மக்களின் சார்பில் முதலில் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

தமிழீழ மக்களுக்கு அநீதி இழைக்கப்படும் போதெல்லாம், அவலங்கள் ஏற்படும் போதெல்லாம் நீங்கள் உணர்வோடு கிளர்ந்தெழுந்து, ஒன்று சேர்ந்து குரல் கொடுத்து மானிடத்தின் மனச்சாட்சியைத் தட்டிக் கேட்டு வருகிறீர்கள்.

உலகின் தலைநகரங்கள் எங்கும் ஊர்வலங்கள் நடாத்தி, ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடாத்தி உலகளாவிய ரீதியில் நீங்கள் நடத்தி வரும் எழுச்சிப் போராட்டங்கள் எமது தேசவிடுதலைப் போராட்டத்திற்கு சர்வதேச முக்கியத்துவத்தைப் பெற்றுத் தருகிறது.

...துன்பமும், துயரமும் நிறைந்து சோகமாய் நிற்கும் எமது மக்களிடம் இருந்து நாம் பொருள் உதவியை எதிர் பார்க்க முடியாது. அது அவர்களின் சக்திக்கு அப்பாற்பட்டது. இப்படியானதொரு சோதனையான கால கட்டத்தில் எமது தேசத்தின் விடுதலைச்சுடர் அணைந்து போகாது பாதுகாப்பது உங்களது கையில் தான் தங்கியிருக்கின்றது. புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களாகிய நீங்களே எமது போராட்டத்திற்குக் கைகொடுத்து உதவ வேண்டும். இன்றைய காலமும் சூழலும் உங்களது பங்களிப்பைத் தான் வேண்டி நிற்கின்றது. காலம் காலமாக எமது போராட்டத்திற்கு நீங்கள் உதவி வருகிறீர்கள். பல்வேறு வழிகளில் பங்களிப்புச் செய்து வருகிறீர்கள். அந்தப் பங்களிப்புகள் எமது விடுதலைப் போராட்டத்தின் வளர்சசிக்கும் எழுச்சிக்கும் பெரும் உதவியாக இருந்திருக்கின்றது. ஈழத் தமிழரின் போராட்ட வரலாறு இந்தப் பங்களிப்பை என்றும் பதிவு செய்து வைக்கும்.

...உலக விடுதலைப் போராட்ட வரலாறுகள் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். இந்தப் போராட்டங்களில் புலம்பெயர்ந்த மக்கள் ஆற்றிய பங்கு அளப்பரியது. மகத்தானது. புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்ந்த போதும தமது இனத்தின் விடிவிற்காய் தமது தேச விடுதலைக்காக இந்த மக்கள் பெரும் அர்ப்பணிப்புக்களைச் செய்திருக்கிறார்கள். புலம்பெயர்ந்தோரின் நிதிப் பலத்தில் தான் எத்தனையோ போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. வெற்றி பெற்றன. வெளியில் இருந்தே தமது வேருக்கு நீர் பாய்ச்சி இருக்கின்றார்கள் இந்த மக்கள்.

இந்த மண்பற்று புலம்பெயர்ந்த மக்களிடம் தீவிரம் பெறுவது இயல்பு. ஏனென்றால் பிறந்த மண்ணில் இருந்து, வளர்ந்த மண்ணில் இருந்து பெயர்ந்து நிறபவர்கள் அவர்கள். அவர்களுக்குத் தான் பிறந்த மண்ணின் பரிவுத் துயரம் தெரியும்.

... கடந்த இருபது ஆண்டு காலத்தில் பல இலட்சம் ஈழத் தமிழர்கள் எமது தாயகத்தில் இருந்து வெளியேறி உலக நாடுகளிலே தஞ்சம் புகுந்துள்ளனர் என்பது உண்மை. இந்தப் புலம்பெயர்வு பொருளியில் ரீதியில் எமது தேசத்திற்குப் பயனாக அமைந்தது. தமிழீழ மக்களாகிய நீங்கள் அந்நிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்த போதும் உங்கள் சொந்த மண்ணையும் சொந்த மக்களையும் மறந்து விடவில்லை. இங்குள்ள உங்களது உறவினர்களுக்கு நீங்கள் கைகொடுத்து உதவி வந்தீர்கள். தமிழீழ மண் மீட்புப் போருக்கும் உதவி வழங்கினீர்கள். உங்களது தேசப்பற்றுணர்வு எமது தேசத்திற்கு உயிரூட்டுவதாகவே அமைந்தது.

புலம்பெயர்ந்த தமிழர் சமூகமானது பலம்வாய்ந்த சக்தியாக நின்று தமிழீழ விடுதலைப் போருக்கு உதவி வருவதாக எங்களது எதிரியே பகிரங்கமாகக் கூறிவருகின்றான்.

அனைத்துலக தமிழீழ மக்களாகிய நீங்கள் எமது போராட்டத்திற்கு தோள் கொடுத்து உதவினால் நாம் இப் போராட்டத்தில் வெற்றி பெறுவது உறுதி. எமது தாயகம் மீட்கப்படுவது உறுதி. நாம் தன்னாட்சி பெறுவதும் உறுதி.



புதுவை இரத்தின துரையால் ஒரு காலத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களை நோக்கி விடுக்கப்பட்ட வன்முறையே இந்தக் கவிதை

"......

*பெற்ற தாயினை எட்டி*
*உதைப்பது போலத்*
*தாயகம் தீயில் எரிகையில்*
*விட்டுப்*
*படகினில் ஏறிப் பறந்திடும்*
*வீரமிலாதவர் நாயிலும்*
*கீழவர்*
*சுற்றி வளைத்தனர் சிங்களப்*
*படையினர்*
*சுட்டுத் தள்ளுவர் என்ற*
*பயத்தினால்*
*விட்டுப் பறந்தவர்*
*கோழைகள் நாளை*
*தம் வீடு திரும்பினால்*
*காறியே துப்புவோம்.*
*கப்பல் ஏறி ஜேர்மன்,*
*பிரான்சுடன்*
*கனடா நாட்டிலும் தஞ்சம்*
*புகுந்தனர்*
*அப்பு, ஆச்சியைக் கவனம்*
*கவனமென்று*
*அங்கிருந்துமே கடிதம்*
*எழுதினர்.*
*தப்பிப் பறந்தவர் தம்பியும் வாவென*
*தம்பிமாரையும் அங்கு அழைத்தனர்*
*தப்புக் கெட்டவர் அகதி லேபலில்*
*தூசி தட்டியே காசு உழைத்தனர்.*
*நன்றி கெட்ட தமிழா!*
*நாம்*
*நின்று போராடும் சென்ரியைத் தாண்டி*
*சென்றாயா நாய்த் தமிழா?*
*ஓடியவர் ஓடட்டும்*
*ஊழைச் சதையர் எல்லாம்*
*பேடியர்கள்*
*ஓடட்டும், போனவர்கள் போகட்டும்*
*பாய்விரித்தால் போதும் படுத்துறங்கும்*
*இவர்கள்*
*எல்லாம் நாய்ச் சாதி*
*ஓடி நக்கிப் பிழைக்கட்டும்*
*தப்பிப் பறந்து*
*தமிழனென்று சொல்ல வெட்கி*
*கப்பலிலே ஏறி கனடாவில் நக்கட்டும்*
*......//*

புதுவை இரத்தினதுரையின் இந்தக் கவிதை வரிகள் புலம்பெயர் தமிழர்களின் மனதைப் புண்படுத்தியதின் விளைவை விடுதலைப் புலிகள் பல்வேறு வழிகளில் உணர்ந்தனர். பல எதிரொலிகள் எழுந்தன. இதனால் இந்தக் கவிதை தொடர்ந்து பயன்பாட்டில் இல்லாதவாறு அப்படியே மறைக்கப்பட்டு விட்டது.

இது தெரிந்திருந்தும், யோகராஜா இந்த நாடகத்தின் மூலம் இன்னும் ஒருமுறை இன்றைய காலகட்டத்தில் இக் குற்றச்சாட்டைச் சுமத்தியிருப்பது ஏற்புடைய ஒன்றல்ல.

அண்மையில் வெரித்தாஸ் வானொலியும், பிரான்ஸ் தமிழ் ஒலி ஒளி நிறுவனமும் இணைந்து வன்னி மக்களின் துயர்துடைப்பு நிதியொன்றை ஆரம்பித்தபோது, இரண்டு நாட்களில் இரண்டரைக் கோடி ரூபாவை புலம்பெயர் தமிழ் மக்கள் வாரி வழங்கியிருந்தார்கள் என்ற உண்மையையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

அடுத்து எழுகின்ற மற்றொரு கேள்வி, தமிழ் மக்களின் புலம்பெயர்வுக்கு பேரினவாத ஆக்கிரமிப்பு மட்டும் தான் காரணமா? என்பது. தமிழ் இயக்கங்களின் ஆயுதக் கலாசாரமும் ஒரு காரணம் என்பது இந்த நாடகத்தில் திட்டமிடப்பட்டு இருட்டடிப்புச் செய்யப்பட்டிருப்பது யாரைத் திருப்திப்படுத்துவதற்கு? எழுத்துச் சுதந்திர, ஜனநாயக மறுப்புக்களும், மரண தண்டனைகளும், சொந்த மண்ணைவிட்டு வெளியேற விதிக்கப்படும் காலக்கெடுக்களும் காரணமாய் அமைகின்றன என்பதை ஆசிரியர் காரணத்தோடு தான் தவிர்த்துள்ளார்.

இயக்க உள்மோதல்கள், சகோதர இயக்கப் படுகொலைகள், மற்றும் இயக்கங்களுக்குள்ளான ஜனநாயக மறுப்புக்கள் போன்றவை பற்றிய விபரங்களை என்னை விடவும் மிகவும் அதிகமாக அறிந்து வைத்திருப்பவர் இந்த நாடக ஆசிரியர். அவற்றை ஒரு குறியீட்டு அளவிலாவது காட்டாமல் தனது 'தப்பித்துக் கொள்ளும்' வழமையான உத்தியை அவர் இங்கு கையாண்டுள்ளார். அப்படியானால் இதற்கு என்ன பெயர்? பிழைப்புக் கலைதானே. இது ஒரு பிழைப்பு. இதைவிட சும்மா இருப்பது சுகம்.

இந்த நாடகத்தின் இரண்டாவது காட்சியில் மேடையில் இரட்டைச் சூழல் காட்டப்படுகின்றது. ஒருபுறம் ஐரோப்பிய ஒன்றியச் சின்னம், மறுபுறம் ஒற்றைப் பனை. இவற்றோடு ஐரோப்பிய இயந்திரமய வாழ்வியலும், தாயகப் போராட்டத்தின் மரணத்துள் வாழ்வியலும் காட்டப்பட்டிருந்தன.

புகலிடத்தில் உள்ள ஒரு சிறுமி தனது பெற்றோரிடம் தனது ஏக்கங்களை வெளியிடுகின்றார். புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்கின்ற தமிழ்க் குடும்பங்களில் நிலவுகின்ற மிகவும் முக்கியமான ஒரு வாழ்வியல் பிரச்சினையை ஆசிரியர் இங்கு 'தொட்டு' இருப்பது பாராட்டத்தக்கது. ஆனால் அந்த சிறுவர் உரிமைப் பிரச்சினை வந்த வேகத்தில் வெறும் வார்த்தையாடல்களால் மறைக்கப்பட்டு விட்டது. இந்த நாடகத்தின் உச்சமே அந்தப் பிரச்சினையாகத் தான் பார்வையாளர்களுக்குத் தெரிந்தது. ஆனால் அது மறைக்கப்பட்டு நாடகம் தனது சுய இலாப நோக்கை அடைய திசை திருப்பப்பட்டுள்ளது.

இதுபோன்ற பல வார்த்தையாடல்கள் இந்த நாடகத்தில் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக பெண்விடுதலை, குடும்ப உறவு, தேசிய விடுதலைப் போராட்டங்களின் அனுபவங்கள் எல்லாம் பேசப்படுகின்றன. ஆனால் இறுதியில் காதிலே பூதான். இவையெல்லாம் முக்கியமற்றவையாக்கப்பட்டு ஈழவிடுதலையொன்றே இதற்குப் பரிகாரம் என்று காட்டப்படுகின்றது. வியட்நாம் விடுதலையில், நிக்கரகுவாப் புரட்சியில் எல்லாம் தேசவிடுதலைக்குப் பின் பெண்விடுதலை மழுங்கடிக்கப்பட்டது என வார்த்தை ஜாலம் காட்டும் ஆசிரியர் ஈழவிடுதலையில் அந்த அனுபவங்களை மறுத்து 'அது எல்லாம் சரிவரும்' என்ற பாணியில் பத்தோடு பதினொன்றாய்ப் பேசுவது ஏனோ?

சூரிச் சைவத் தமிழ்ச் சங்கம் 'அற்றார் அழி பசி தீர்த்தல்' என்ற மகுடத்தில் நடத்திய நாடகப் போட்டிக்கு தயார் செய்யப்பட்டவை தான் இந்த இரண்டு நாடகங்களும். வன்னி மக்களின் கதையை மறந்து, அவை பரிசு பெறும் நோக்கிலேயே புனையப்பட்டுள்ளன. உண்மையில் இப்படியொரு நாடகத்தை விடுதலைப் புலிகளின் கலைப் பண்பாட்டுக் கழகத்தினர் மாவீரர் தினத்திற்குக்கூட தயாரித்து அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அந்தளவுக்கு ஒரு முழுநீள பிரச்சார நாடகமொன்றை சூரியன் உதிப்பதில்லை என்ற பெயரில் யோகராஜாவுடன் இணைந்து வாவி பாஸ்கர் தயாரித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட விடயங்கள் குறிப்பிடப்படாதது குறித்து கண்ணனும் ரவியும் கருத்துக் கூறினர். இந்த நாடகம் தொடர்பாக மேடை, நடிப்பு, உரையாடல், ஒப்பனை என்பன தொடர்பாக விமர்சன அரங்கில் கலந்துகொண்ட ஆனந்தராணி, பாலேந்திரா, ஆதவன், அன்ரன் பொன்ராஜ் ஆகியோர் நல்ல கருத்துக்களை முன்வைத்தனர். அதேவேளையில் பல விடயங்களைச் சொல்லப் போனதினால் குழப்பம் நிறைந்தவையாக உள்ளன என்றும், குருவியின் தலையில் பனங்காய் போன்று அதிக தத்துவங்களை அவை கொண்டிருந்தன என்றும் பாலேந்திராவும் ஆதவனும் குறிப்பிட்டனர். ஆனால் அன்ரன் பொன்ராஜ் தான் இக் கருத்தை ஏற்கவில்லை எனக் குறிப்பிட்டார். இந்த விடயம் தவிர நாடகத்தின் கரு அல்லது Text தொடர்பாக அவர்கள் வாயே திறக்கவில்லை. இதனால் அவர்களின் விமர்சனங்கள் நாடகக் குழுவினருக்கு தேனாக இனித்துள்ளது என்பது பதிலுரையில் பளிச்சென்று தெரிந்தது.

**பனிமுகடுகளில் புதிய சுவடுகள்!**

இந்த நாடகத்தில் புகலிடச் சூழலில் வாழ்கின்ற தமிழ்ச் சிறார்களின் 'வாழ்வியல்' படம்பிடித்துக் காட்டப்படுகிறது. தாம் வாழும் சூழலையும் தமக்குத் தெரியாத தாயகச் சூழலையும் ஒப்பிட்டுப் பேசுகின்ற போக்காய் நாடகம் நகர்கின்றது.

6 மாணவர்கள் தாயக உற்பத்திகளைக் கொண்ட பொருட்காட்சியகம் ஒன்றில் சந்திக்கின்றனர். அவ்ர்கள் தமது இரு சூழலையும் ஒப்பிட்டுப் பேசுகிற போது அப் பேச்சு தமிழும் ஜேர்மன் மொழியும் கலந்த கலப்பு மொழியூடாக இடம்பெறும்போது இரு பனைகள் மேடையில் நிமிர்ந்து நின்று கேட்டுக் கொண்டு நிற்கின்றன.



பின்னர் பனைகளுக்கும் மாணவர்களுக்கும் இடையே பேச்சுக்கள் இடம் பெறுகின்றன. பனைகளும் மாணவர்களும் தர்க்கப்படுவதும், முருகக் கடவுள் தோன்றி இவர்களுக்கிடையே சமரசம் செய்து, பனைகளின் இறுக்கமான போக்கை நிராகரித்து மாணவர்களுக்குச் சார்பாக கருத்துக் கூறுவதையும் ஒரேயொரு காட்சியாக பனிமுகடுகளில் புதிய சுவடுகள் காட்டுகின்றது.

சூரியன் உதிப்பதில்லை என்ற முதல் நாடகத்துடன் ஒப்பிடும்போது புகலிடச் சூழலில் வாழும் மாணவர்களின் இயல்புகளை வெளிக்காட்டும் அல்லது அந்த வாழ்வியல் தொடர்பில் மொழி, கலாசாரம் சார்பாக உள்ள சந்தேகங்களைக் கேள்விக்கு உட்படுத்தி விடைகாண முயலும் முயற்சியாக இது இருந்தது.

மாணவர்களின் இயல்பான நடிப்பும், தமிழ் மொழியுடன் ஜேர்மன் மொழியைக் கலந்து பேசும் பாங்கும் பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்தன. எனினும் மேடையின் ஒரு மூலையில் 'மெல்லத் தமிழ் இனி...' என்ற அறிவிப்புப் பலகை ஒன்றின் கீழ் கீழைத்தேயக் கலாசாரத்தைக் குறித்து நிற்கும் ஒருவரும், மேலைத்தேயக் கலாசாரத்தைக் குறித்து நிற்கும் ஒருவரும் தமக்குள் வாதிடுவது போன்று அமைக்கப்பட்டிருந்த குறியீடு மெல்லத் தமிழ் இனி வாழுமா? சாகுமா? என்பதைக் குறிப்பதாக இருந்தது. ஆனால் இவர்களின் சைகை ரீதியான வாதாட்டம் பார்வையாளர்களை இவ்ர்கள் பக்கம் திருப்பியமையினால் நாடகத்தின் மையத்தை விட்டுப் பார்வையாளர்களின் கவனம் சிதறியிருந்தது.

விமர்சகர்களான ஆனந்தராணி, பாலேந்திரா, ஆதவன், அன்ரன் பொன்ராஜ், கண்ணன் ஆகியோர் இக் குறைபாட்டைச் சுட்டிக்காட்டி விமர்சனம் செய்தனர்.

மேடையின் பின்புறத்தில் தொங்கவிடப்பட்டிருந்த திரையில் தாயக உற்பத்திப் பொருட்கள் -குறிப்பாக பனம் பொருள் உற்பத்திகள்- வரையப்பட்டிருந்தன. இந்த நாடகங்களில் பங்கேற்று நடித்த பாலகுமாரினால் வரையப்பட்ட இந்தத் திரை நன்றாக வடிவமைக்கப்பட்டிருந்தது. புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ச் சிறார்கள் தமது வாழ்வியல் சூழலில் கண்டிராத பல தாயக உற்பத்திகளை அவர்களுக்கு அறிமுகம் செய்வதில் அவர் வெற்றிபெற்றுள்ளார்.

தமது வாழ்வியல் சூழலில் அவற்றைப் புதிதாகப் பார்க்கும் மாணவர்கள் அவை தொடர்பாக விவாதிப்பதுடன், அவற்றைத் தமது வாழ்வியல் சூழலுடன் ஒப்பிடவும் செய்கிறார்கள். புளுக்கொடியலை, இத்தாலிய உணவாகி இன்று மேலைநாடுகளில் பெரிதும் அறியப்பட்டுள்ள SPAGETTI என்ற நூடில்ஸ் உடனும், பாக்கை HASELNUSS எனப்படும் ஒருவகை பருப்புடனும் ஒப்பிடும் அவர்கள், கைவினைக்குட்பட்ட ஒரு பனங்கொட்டையில் வடிவமைக்கப்பட்டிருந்த ஒரு மனிதமுகம் குறித்தும் விவாதிக்கின்றனர். இது மிகவும் இயல்பானதாக இருந்தது. இச் சந்தர்ப்பங்களில் மிகவும் துடிப்புடனும், உயிரோட்டமாகவும் பேசியதுடன், இயல்பாகவும் தனது நடிப்பாற்றலை வெளிக்காட்டிய அந்தச் சின்னஞ் சிறிய சிறுமியைக் குறிப்பாகப் பாராட்ட வேண்டும்.

மாணவர்களின் உரையாடலை, கேலிப் பேச்சுக்களைக் கேட்டு ஆத்திரமடையும் பனைகள் தங்கள் வீராப்பைப் பேசுகின்றன. அந்நிய ஆட்சி முதல் இன்றைய போராட்டம் வரை தமது வாழ்வியல் அனுபவமாக தாம் தரிசித்து வந்துள்ளோம் என்று கூறும் பனைகள் ஒரு சந்தர்ப்பத்தில் 'தமிழீழத்தின் குறியீடாய்' எங்கும் மிளிர்பவன் நான் என்று கூறுகின்றது. இதில் ஒரு அரசியல் தொக்கிநிற்பதாகவே எனக்குப் படுகிறது. முழுத் தமிழீழத்தினதும் குறியீடாய்ப் பனையைக் கொள்ள முடியுமா என்ற கேள்வி இங்கு எழுகிறது. யாழ் குடாநாட்டின் சமூக பொருளாதார அரசியல் வாழ்வியலில் பனை பின்னிப் பிணைந்துள்ளது என்பதில் இரு கருத்துகள் இருக்க முடியாது. ஆனால் அதை முழுத் தமிழீழத்தின் குறியீடாய்க் காட்ட முற்பட்டிருப்பது யாழ் மேலாதிக்கத்தின் ஒருவகை வெளிப்பாடு என்றே கொள்ள வேண்டியுள்ளது.

முருகக் கடவுள் தோன்றுவதும், பனைகளுககும் மாணவர்களுக்குமான விவாதத்தில் இவர் மாணவர்களுக்குச் சார்பாகத் தீர்ப்பளிப்பதும் இடம்பெற்றுள்ளது. ஆனால் முருகன் ஒரு தமிழ்க் கடவுள் என்று காட்டப்பட்டு தமிழ் மொழிக்கான கடவுள் என்றும் கதை புனையப்பட்டுள்ளது. இது மறுபுறத்தில் இந்து மேலாதிக்கக் கருத்தைக் காட்டுவதுடன், தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள மற்றைய மதங்களைச் சார்ந்தவர்களையும் கருத்தில் கொள்ளாது கூறப்பட்டுள்ள இந்த விடயம் ஆசிரியரின் குழப்ப நிலையை எமக்குத் தெளிவாக்குகிறது.

இதுகுறித்தும், புகலிட தமிழ்ச் சிறார்களின் சிந்தனாமொழி அந்நிய மொழிதான் என்று வற்புறுத்தப்பட்டிருப்பது குறித்தும் சுவிஸ் ரவி தனது கருத்தை முன்வைத்திருந்தார். சிந்தனாமொழி எது என்பது குறித்து இன்னும் ஆய்வுகள் செய்யப்பட வேண்டியுள்ளது. எந்த விஞ்ஞானபூர்வ ஆய்வுகளுமின்றி புகலிட மாணவர்களின் சிந்தனாமொழி அந்நிய மொழி மட்டும் தான் என்று எப்படி அடித்துச் சொல்ல முடியும் என்று அவர் கேள்வி எழுப்பினார். ஆனால் பதில் தான் கிடைக்கவில்லை.

அரசர்கள் பற்றி பனைகள் கதை சொல்லும் போது மாணவர்கள் அரசர்கள் என்ற வார்த்தையில் உள்ள வெறுப்புடன் கேள்விகளைக் கேட்கின்றனர். அதை நியாயப்படுத்த பனையார் மனுநீதி கண்ட சோழனின் கதையைச் சொல்லி இவ்வாறு நீதிகாத்த மன்னர்களும் இருந்தனர் எனக் குறிப்பிடுகின்றார். ஆனால் மாணவர்களோ மன்னன் மகனைக் கொன்றது பழிக்குப் பழி வாங்கும் செயல் என்று வாதிடுகின்றனர். இங்கு மனுநீதி தோற்றுப் போனது என்கின்றனர். இது அவர்கள் வாழும் ஜனநாயக, மனிதாபிமானம் மிக்க புகலிடச் சூழலைக் காட்டுகின்றது. இங்கு முக்கியமானது என்னவெனில் ஆசிரியர் வைத்துள்ள குறிதான். அதாவது எல்லா அரசர்களும் அப்படி அல்ல என்று கூறி மனுநீதி கண்ட சோழனை நியாயப்படுத்தி ஒரு அரசியலை நியாயப்படுத்த ஆசிரியர் பிரயத்தனம் செய்துள்ளார்.

அந்நியர் ஆட்சிமுதல் எல்லாம் தெரிந்தவர்கள் என்று சொல்லும் பனைகளுக்கு கதை எழுதிய ஆசிரியர் முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்ட கதை, இயக்க உள்மோதல் கதைகள், சகோதர இயக்கப் படுகொலைகள், ஜனநாயக மறுப்புக்கள், வதைமுகாம்கள் போன்ற தமிழ் இயக்கங்களின் நீதிக்/கதைகளையும் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும் அல்லவா? இவற்றையெல்லாம் எப்படிச் சொல்வது. இதற்குத்தானே சூழல் சரியில்லை. இதனால் பரிசுக்கு ஏற்ற மாதிரி மூடிமறைத்து, இழுத்தடித்து, இருட்டடிப்புச் செய்து சுற்றிவளைத்தால் சரி.

நாடகம் இப்படி முடிகிறது. "தனித் தமிழீழம் கிடைப்பது எப்படி உறுதியானதோ, அப்படியே புகலிடத் தமிழ்ச் சிறார்கள் தமிழ்மொழி கற்பதும் உறுதியானதே". இங்கு தனித் தமிழீழம் என்று ஆசிரியர் குறிப்பிட்டு இருப்பது எதனை? தனியாக தமிழர்கள் மட்டும் வாழ்கின்ற ஈழத்தையா? அப்படியானால் அது மிகவும் ஆபத்தான கருத்தியலாகும். எந்த ஒரு தமிழ் இயக்கமும் கூட தனது பெயரில் தனித் தமிழீழத்தைக் கொண்டிருக்கவில்லை. அப்படியிருக்க யோகராஜா இப்படி எழுதவேண்டிய தேவை அவர் சோரம் போனதால் ஏற்பட்டதா?

உண்மையில் கஜேந்திரசர்மா குறிப்பிட்டது போன்று, எங்கள் எல்லையை எதிரி மாத்திரமல்ல நாங்களும்தான் குறுக்கிக் கொள்கிறோம் என்பதை நான் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

மற்றது, தேசத்தின் விடுதலையையும், தமிழ் மொழி கற்பதையும் சம அளவான பிரச்சினைகளாகக் கொள்வது வெறும் வார்த்தையாடலாக உள்ளது. இரண்டுமே இருவேறு கனதிகளையும், பரிமாணங்களையும் கொண்ட பிரச்சினைகள். இவற்றில் ஒன்றுடன் ஒன்றைச் சமப்படுத்த முடியாது. அந்தளவுக்கு தேசிய விடுதலை என்பது ஒரு சின்ன விடயம் அல்ல. அதுபோன்றே தாய்மொழிக் கல்வியும் தேசிய விடுதலையின் அளவுக்கு உயர்ந்த ஒரு அம்சமுமல்ல.

முன்னர் குறிப்பிட்டது போன்றே இந்த இரண்டு நாடகங்களும் போட்டிக்குத் தயாரிக்கப்பட்டவை. போட்டியை நடாத்துபவர்களின் நோக்கம், நடுவர்களின் நோக்கம், சார்புத் தன்மை என்பவற்றை நாடிபிடித்துப் பார்த்து, 'சூரியன் உதிப்பதில்லை' என்பதில் பரிசு கிடைக்காமல் போனமைக்கான காரணங்களைக் கச்சிதமாகக் கணக்குப் பார்த்து, என்ன கருத்தாய் இருந்தாலும் அதைக் 'குறிப்பிட்ட' பகுதியினரைத் திருப்திப் படுத்தும் வகையில் சொல்லி பரிசுபெறும் நோக்கில் ஆசிரியர் காய்களை கணக்காக நகர்த்தி தனது இலக்கில் வெற்றி கண்டுள்ளார்.

ஆனால் இந்த நாடகத்தின் தயாரிப்பாளர், இசைக் கலைஞர்கள், நாடகக் கலைஞர்கள் அனைவரதும் உழைப்பும், வளங்களும் வீண்விரயம் செய்யப்பட்டுள்ளன. ஒரு நாடகத்தின் கூட்டுப் பொறுப்பாளிகள் இவர்கள் என்ற வகையில் அனுதாபத்திற்குரியவர்கள்.


இறுதியாக ஒன்று. இந்த நாடகத்தின் ஆசிரியர் தனது இரட்டை அரசியல் விளையாட்டைத் தவிர்த்துக் கொள்ளும் வரை 'இரண்டும் கெட்டான்களுள்' அவரும் ஒருவர் தான். இது ஆப்பிழுத்த குரங்கின் கதையாகாமல் இருந்தால் மிக்க மகிழ்ச்சி.

**- அழகு குணசீலன்**
**சுவிஸ்**

இரு நாடகங்கள்
1.சூரியன் உதிப்பதில்லை
2.பனிமுகடுகளில் புதிய சுவடுகள்
நாடகப்பிரதி: அ.ஜெ.யோகராசா
நெறியாள்கை: வரவி பாஸ்கர்
இசை: சுரேஸ்குமார் விநாயகேந்திரன்-ஜித் சகோதரர்கள்
விழா: சுவிஸ் தமிழ் மாணவர் மன்றம்

# நமது கலை இலக்கிய விமர்சனங்கள் — விழலுக்கிறைத்த நீராக...

"சமீபகாலமாக துருத்திக்கொண்டு தெரிகிற ஒரு விஷயம் இதுதான். ஈழத்தில் படைப்பிலக்கியங்களின் வருகையின் வேகத்திற்கு ஈடுகொடுப்பதாக இலக்கிய விமர்சனங்கள் வெளிவருவதில்லை. நூல்வெளியீட்டு விழாப் பேச்சுக்களும், நண்பர்கள் மத்தியிலான கலந்துரையாடல்களும் என்ற அளவுக்கு மேலாக படைப்புக்கள் பற்றிய ஆழமான விமர்சனங்கள் வந்ததில்லை. ஈழத்து இலக்கிய விமர்சனத்தில் புதிய தலைமுறையின் நுழைவும் கூட மிகவும் அரிதாகவே உள்ளது. முருகையன், நுஃமான், மு.பொ., சிவசேகரம் போன்ற முன்னைய தலைமுறையைச் சார்ந்தவர்கள் எப்போதாவது எழுதினால் ஒழிய புதிய தலைமுறைகளின் எழுத்துக்கள் இந்தத் துறையில் அவ்வளவாக வெளிவருவதில்லை."



மாற்று இலக்கிய வட்டத்தில் சில காலங்களுக்கு முன்னர் நடந்த சந்திப்பொன்றின் பின்னர் நடைபெற்ற உரையாடலின் போது இவ்வாறு ஆதங்கப்பட்டார் மாற்று இலக்கிய வட்ட நண்பர் ஒருவர். பௌர்ணமி தோறும் கலை இலக்கியம் அறிவியல் சார்ந்த விடயங்கள் தொடர்பான கருத்தாடல்களுக்கு வழிவகுத்து வந்த இந்த அமைப்பின் இயக்கமும் இப்போது நின்று போய்விட்டது. இலக்கிய நண்பர்கள் மத்தியில் இலக்கியம் சாராத சர்ச்சைகள் மட்டுமே நடக்கின்றன போலும். கோணேஸ்வரிகள் கவிதை தொடர்பாக வந்த விவாதத்துக்குப் பிறகு ஈழத்து இலக்கியப் பரப்பில் இலக்கியம் தொடர்பாக குறிப்பிடத்தக்க சர்ச்சைகள் எதுவுமே நடக்கவில்லை என்று ஆதங்கப்பட்டார் அவர்.

உண்மைதான். இது வெறும் ஆதங்கத்திற்கு உரிய விடயம் மட்டுமல்ல, படைப்பிலக்கியப் போக்கின் செல்நெறி தொடர்பான தெளிவின்மைக்கும் இது இட்டுச் செல்வதால், இலக்கியம் வளர்வதற்குப் பதில் தேக்கத்தை எதிர்நோக்கும் ஆபத்தையும் உருவாக்கி விடக் கூடியது. நண்பர் சொன்னது போல படைப்பிலக்கிய முயற்சிகள் நிறைய நடந்துள்ளன. பல கவிதைத் தெகுதிகள், சிறுகதைத் தொகுதிகள் கடந்த ஒரு சில ஆண்டுகளில் வெளிவந்திருக்கின்றன. ஆனால், அந்த அளவுக்கு இலக்கிய விமர்சனம் அல்லது திறனாய்வு முயற்சிகள் நடைபெறவில்லை. அவை படுத்துத் தூங்கிக் கொண்டிருப்பதால் படைப்பிலக்கியம் தொடர்பான சிந்தனைகளிலும் தேக்கம் ஏற்பட்டு வருவதை அவதானிக்க முடியாது. அண்மையில் விபவியின் சுதந்திர இலக்கிய விழாவின் போது படைப்புக்கள் பரிசுக்காக தெரிவு செய்யப்பட்டவிதம் தொடர்பாக நடந்த சர்ச்சைகள் இந்தத்தேக்கத்தை வெளிப்படுத்துகின்றன. படைப்பு, படைப்பின் ஆக்கப் பண்புகள், அது நுகர்வோர் மீது ஏற்படுத்தும் தாக்கம் என்பன சம்பந்தப்பட்டு ஆராயப்படுவதற்குப் பதில், எழுதியவர் யார்? எழுதப்பட்ட பொருள் என்ன என்பன சம்பந்தப்பட்டதாகவே அலசப்படுகின்றன. கோணேஸ்வரிகள் கவிதையின் இலக்கியத்தரம், அதன் படைப்பாக்கப் பண்புகள் என்பன பற்றிப் பேசியவர்களை விட அதை எழுதியவர் யார்? அவரின் அரசியல் என்ன என்பன போன்ற விடயங்களிலேயே பலரது கவனமும் குவிந்திருந்தது.

படைப்பினதும், படைப்பாளியினதும் அரசியல் சமூகச் சார்புகள் பற்றிய பார்வை இலக்கிய விமர்சனத்திற்கு அப்பாற்பட்டதோ ஒதுக்கப்பட வேண்டியதோ அல்ல. ஆனால், அது மட்டுமே இலக்கியத்தின் தரத்தைத் திறனாய்வுக்குட்படுத்தப் போதுமான அளவுகோலாகிவிட முடியாது.

இலக்கிய விமர்சனத்தின் தேக்கத்திற்கு ஒவ்வொருவரும் பல நூறு காணரங்களைக் கூறக்கூடும். ஆயினும், எனக்குத் தோன்றுகிற காரணம் இது. தமிழ்ச் சூழலில் கடந்த இரண்டு தசாப்தங்களாக நடந்து கொண்டிருக்கும் யுத்தமும், அந்த யுத்தம் மக்களது வாழ்வில் ஏற்படுத்தியுள்ள தாக்கமும் சமூகத்தின் சிந்தனைத்தளத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கமும் முக்கியமானது. புதிய கருத்துக்களையும், புதிய சிந்தனைகளையும் துணிந்து சொல்வது, அதுவும் உரத்துச் சொல்வது என்பது அங்கீகரிக்கப்படாத ஒரு 'ஜனநாயகச் சூழலில்' வாழ்ந்து கொண்டிருப்பதன் காரணமாக, எந்தக் கருத்துக்களையும் அதன் மூலம் எது என்று ஆராயும் நிலைக்கு இட்டுச் சென்றிருக்கிறது. ஒவ்வொரு உரத்த சிந்தனைக்குப் பின்னாலும் ஒரு 'இயக்கம்' இருக்குமோ என்ற எண்ணமே கருத்துக்களை உரத்துச் சொல்கிற, விவாதிக்கிற சூழலை இல்லாமல் செய்துவிட்டிருக்கிறது. பெண்ணியம், கவிதை தொடர்பான விவாதங்கள் பலவற்றில் கலந்து கொள்ள மறுத்த பலர், அந்த மறுப்புக்குக் காரணமாக இந்தக் காரணத்தைச் சொன்னார்கள். இதிலே சுவாரஸ்யமான விடயம் என்னவென்றால், ராதிகா குமாரசுவாமியின் கட்டுரை ஒன்று தொடர்பாக சரிநிகரில் வெளிவந்த விவாதங்களில் பல, திட்டமிட்டு அவரைப் பழிவாங்குவதற்காக ஆசிரியர் குழுவைச் சார்ந்தவர்களாலேயே எழுதப்பட்டது என்ற கருத்துக்களைக் கூட இதே நபர்களும் தெரிவித்திருந்தார்கள் என்பது தான்.

எது எப்படியோ, விவாதம், விமர்சனம், புதிய சிந்தனைகளையும், கருத்துக்களையும் துணிந்து கூறல் என்பனவற்றிற்கு மனோ ரீதியான ஒரு தடை தமிழ்ச் சூழலில் நிலவுகிறது என்பதையே இது காட்டுகிறது. சமூக அரசியல் விமர்சனம், கட்சிகள் பற்றிய விமர்சனம் என்பது கருத்துத் தளத்தில் எதிர்கொள்ளப்படுவதற்குப் பதிலாக ஆயுத முனையில் எதிர்கொள்ளப்பட்ட ஒரு அரசியல் சூழலில் இரண்டு தசாப்தங்களாக வாழ்ந்து வருகிற ஒரு சமூகத்தில் ஆழ்ந்த மௌனம் எதிர்ப்பார்க்கக் கூடியது தான்.

சமூக விமர்சனங்களும், அதிருப்திகளும் படைப்பிலக்கிய முயற்சிகளினூடாக வெளிப்பட்டிருக்கின்றன. வெளிப்பட்டுவருகின்றன. குறிப்பாக இந்த மௌனிக்கப்பட்ட நிலை தொடர்பான அதிருப்தி கவிதைகளில் வெளிப்பட்டு வருகிறது. ஆயினும், அவை இலக்கிய விமர்சனத்துக்கான பேசுபொருளாக அமைவதில் இன்னமும் தாமதமான நிலையே நிலவுகிறது.

இலக்கியப் படைப்பாளிகளைப் போலன்றி இலக்கிய விமர்சகர் வாசகர்களுடன் நேரடியாகப் பேசுகிறார். படைப்பிலக்கியங்கள் வாசகரை தாம் காட்டும் உலகத்தில் சஞ்சரிக்க வைத்து அவரை உணர்வுபூர்வமாகவும், அறிவுபூர்வமாகவும் தன்னை தரிசிக்க உதவுகின்றன என்றால், இலக்கிய விமர்சனம் நேரடியாக வாசகருக்கு படைப்பின் உலகு பற்றிச் சுட்டிக் காட்டுகிறது. அதன் படைப்புப் பண்புகள், அதன் செய்நேர்த்தி, அது காட்டும் உலகின் இயல்புகள் என்பவற்றை அவருக்கு விபரிக்கிறது. இந்தச் செயற்பாட்டின்போது அது ஒரு படைப்பை விட ஸ்தூலமாக வாசகருடன் கருத்துகளைப் பரிமாறுகிறது. இதன் காரணமாக அவருக்கு சமூகத்தின் இயக்கப் போக்குக் குறித்த தன் விமர்சனத்தையும் தெரிவிக்கிறது. இது விமர்சகரை அவர் சார்ந்திருக்கும் சமூக அரசியல் சார்பை தவிர்க்க முடியாமல் அடையாளங் காட்டுகிறது.

'இரவின் நடுச்சாமத்தில்
ஊரின் எல்லைகளில்
நண்பர்களும் நானுமாய்
காவலிருப்பதாய் கண்ட கனவெல்லாம்
இதற்காகத்தானா?'

என்ற ஏக்கத்துடன் முடியும் றஸ்மியின் கவிதையின் அவலம் குறித்த திறனாய்வில் ஈடுபடும் ஒரு விமர்சகர், றஸ்மியின் கவிதை வெளிப்படுத்தும் சூழல் பற்றிய விமர்சனத்துக்கு தவிர்க்க முடியாமல் தள்ளப்படுகிறார். இது அவரை அரசியல் ரீதியாக இனங்காட்டும் ஒன்றாக ஆக்கி விடுகிறது.

அரசியல் ரீதியான இனங்காட்டலும், மாற்று அரசியல் போக்குகள் மீதான விமர்சனங்களும் அச்சந்தரும் விசயமாகிப் போய்விட்ட ஒரு சூழலில், ஒன்றில் விமர்சகர் மௌனமாக இருக்க வேண்டும். அல்லது பொய்யுரை செய்ய வேண்டும். இரண்டையும் செய்ய விரும்பாத ஒரு விமர்சகர் எமது சூழலில் இலக்கியத்தை விட அதிகளவு அக்கறையை சமூக நிகழ்வுகள் மீது குவிப்பதையே காணக் கூடியதாக உள்ளது.

விளைவு, நண்பர் கூறியது போல விமர்சனம் மௌனமாகிவிட்ட ஒரு நிலையில் எமது இலக்கியப் பயணம் நடந்து கொண்டிருக்கிறது.

ஆனால், இது நல்லதல்ல.

நல்ல விமர்சனம் எப்போதும் எந்த ஒரு இயக்கப் போக்குக்கும் அவசியமாகும். அது சமூக அரசியல் இயக்கப்போக்காயினும் சரி, இலக்கிய இயக்கப் போக்காயினும் சரி எல்லாவகை இயக்கப் போக்குக்கும் அவசியமாகும்.

விமர்சனங்கள் எல்லா சந்தர்ப்பங்களிலும் சரியான வழியைக் காட்டி விடுவதில்லை என்பது உண்மை தான். ஆனால், அவை பிழையான விடயங்களை பெரும்பாலும் காட்டி விடுகின்றன. தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியலை விமர்சித்த போக்குகள் சரியான அரசியல் மார்க்கத்தை தெளிவாக முன்வைத்தன என்று சொல்ல முடியாது. ஆனால், அதன் பிழைகளையும், அவற்றின் ஆபத்துக்களையும் அவை தெளிவாகவே முன்வைத்தன. அவ்வாறே தமிழீழ விடுதலை இயக்கங்களது போக்குகள் குறித்து எழுந்த விமர்சனங்களும் அமைந்தன. அவை இயக்கங்களது தவறுகளை அத்துமீறல்களை அவற்றின் மக்கள் விரோதப் போக்குகளை எடுத்துக்கூறின. மிகவும் தீவிரமான வார்த்தைகளில் ஆக்ரோசமாக எதிர்த்தன. ஆனால், அந்த விமர்சனங்கள் அடக்கப்பட்டன. இன்று செம்மணியில் தோண்டப்பட்டுக் கொண்டிருக்கும் புதைகுழிகள் உருவாவதற்கு முன்பு இத்தகைய விமர்சனங்களுக்காக பல புதைகுழிகள் மௌனமாக நடப்பட்டன. அதன் விளைவுகளை இன்று நாமும், அன்று புதைகுழி தோண்டிய ஒவ்வொரு இயக்கங்களுடனும் சேர்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

**- அருணன்**

# திருஷ்டி

கனடாவில் இருந்து பவளமன்ரி தன் கணவரோடு மட்ராஸுக்கு வந்து தன் வீட்டில் தங்கி நிற்பதாக கமலமக்கா போன் பண்ணியிருந்தாள். கீழ் வீட்டுப் போனில் அவளோடு கதைத்து விட்டு மேலே படியேறுகையிலேயே அன்று பின்னேரமே போய் பவளமன்ரியைப் பார்த்து விட வேண்டுமென்ற ஆவல் கிளர்ந்தது.

அப்படி ஒன்றும் பவளமன்ரி இவளுக்கு கிட்டத்து உறவு இல்லைத்தான். ஆனாலும் இவளின் இளையன்ரியின் தமக்கை அவள். இளையய்யாவை முடித்திருந்த இவளின் இளையன்ரி - இவள் காலத்தில் 'சித்தி' என அழைக்கும் தென்னிந்திய நாகரிகம் பரவி இருக்கவில்லை. பள்ளிக்குச் செல்ல எனக் கையைப் பிடித்திருந்த தன் ஒரே மகளுடன் றோட் ஓரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரொன்றைக் கடக்கையில் துண்டு துண்டாகச் சிதறிப் போனாள் யாருக்கோ என வைக்கப்-பட்ட அந்தக் கார்க்குண்டு இளையன்ரி போன்ற அன்பான ஜீவன்களை, பள்ளி செல்லும் பச்சிளம் பிஞ்சுகளைத் தான் குதறிப் போட்டது.

அதன் பின் இளையன்ரியின் ஆசையில் இவள் பவளமன்ரியோடு நெருங்கிப் பழக விரும்பியதுமுண்டு. பவளமன்ரியிடமும் இளையன்ரியின் சாயல் இருந்தது. ஆதரவைச் சிந்தும் அந்த இதம், அப்படியே என்றில்லா-விட்டாலும், பவளமன்ரியின் கண்களிலும் இருப்பதாகப்பட்டது. ஆனால், பவளமன்ரியோடு நெருங்கிப்பழக அதிக வாய்ப்புக் கிடைக்கவில்லை. அதற்குள் இளையன்ரியைச் சேர்ந்த எல்லோருமே குடும்பம் குடும்பமாக கனடாவாசிகளாகி விட்டனர்.

பவளமன்ரியைப் பார்க்க அன்று பின்னேரமே கோடம்பாக்கத்திற்குப் போனாள். மாடிப்படியேறி, கமலக்காவின் பிளாட்டின் அழைப்பு மணியை அழுத்திய பொழுது கமலக்காவே வந்து கதவைத்திறந்தாள்.

அவளின் பின்னால் ஹோலில் இருந்தவர்களின் முகங்கள் தெரிந்தன. பவளமன்ரியோடு வேறும் சிலர்: எல்லோரும் கதவோடு யாரென அறிய இவளையே பார்த்தனர். அவர்களின் கண்கள் அப்பொழுது தான் ரீவி திரையிலிருந்து விலகி இருக்கவேண்டும். வடக்குத் தெரு பாக்கியமும் மகளும்: திரவியமும் அவள் கூட்டாளியும். வேறுமிருவர். எல்லோரும் இப்பொழுது சென்னைவாசிகள் அன்ரியை பார்க்க வந்திருப்பவர்கள்.

அன்ரி எழுந்து கைகளை நீட்டியபடி முன்னே வந்தாள். இருவரும் கட்டிப்பிடித்து ஆரத்தழுவிக் கொண்டனர்.

"ஏழு வருசமிருக்குமன்ரி உங்களைப் பார்த்து இப்பவும் அப்ப பாத்தது மாதிரியே இருக்கிறீங்கள். இப்ப நல்லா வெளுத்து இன்னும் வடிவா" என சந்தோசப்பட்டுக் கொண்டாள் இவள்.

ஹோலில் ஓரமாக மடக்கு நாற்காலியில் சாய்ந்திருந்த அங்கிளருகே போயும் சுகம் விசாரித்தாள். "எப்படி இருக்கிறீங்கள் அங்கிள்? கனடா எல்லாம் பிடிச்சுக்கொண்டுதோ?'

ஸ்ரூலில் நீட்டியிருந்த காலைத் தடவியபடி "அதுதான் பாக்கிறியேம்மா! கால் எல்லாம் வீங்கி... பிரயாணம் ஒத்துக் கொள்ளுதில்லை" என்றார் அவர்.

அவரை இவ்வளவு தூரத்திற்கு அன்ரி இழுத்துக் கொண்டு வந்திருக்கிறாளே என்று தோன்றியது.

அன்ரி, "இரு இரு" என செற்றியில் தன் பக்கத்தில் பிடித்து இருத்திக் கொண்டாள்.

ரீவியில் ஏதோ வீடியோ ரேப் ஓடிக்கொண்டிருந்தது. ஒரு சிறு பெண்ணை தலையில் முக்காடு போட்டு அழைத்து வந்து கொண்டிருந்தார்கள்.

"என்ரை மூத்த பேத்தியின்ரை சாமத்தியச் சடங்கு" என்றாள் அன்ரி. குரலில் சிறிது பெருமிதம் தெரிந்தது.

"ஓ! கமலமக்கா எனக்கும் சொன்னவதான். உடனே தபால் போட நினைச்சனான்: பிறகு நேரம் கிடைக்கேல்லை. பெரிசாகி நாலைஞ்சு மாதமிருக்கும் என்ன அன்ரி?" என சமாளித்துப் பேசினாள் இவள்.

"ஓம்! போன கார்த்திகையிலை பெரிசானவ. ஆனா, போன மாதம் தான் சபை வச்சனாங்கள்" என்ற அன்ரி அதற்கு விளக்கமுமளித்தாள்.

"மார்கழியிலை நல்ல நாள் இல்லை எண்டு விட்டுட்டம். பிறகு தையிலை நாங்க எல்லோரும் லண்டனுக்குப் போயிட்டம் தம்பியின்ரை மகன்ரை கலியாணத்துக்கு. பிறகு வந்து மாசி மாதமும் கூடாதெண்டுண்டு பங்குனி கடைசியிலை தான் வச்சம்."

இவள் கொஞ்ச நேரம் பேசாமலிருந்தாள்.

"காசு இருக்கிறவை விரும்பின மாதிரி. எப்ப எண்டாலும் நடத்தலாம். போட்டா போட்டிக்கும் நடத்தலாம். எல்லாத்துக்கும் காசு இருக்கு செய்வினம்" என தன் சிநேகிதி புனிதம் ஒரு நாள் சொன்னது நினைவுக்கு வந்தது. ஊரில் திருமணத்தைப் பதிந்து விட்டு விட்டு வந்த பெண்ணை கனடாவிற்கழைத்து நாலு வருஷம் அவளோடு வாழ்ந்த பின் ஆடம்பரமாய் திருமணச் சடங்குகளை ஒன்றுவிடாமல் நடாத்திய ஒரு ஆளைப் பற்றி சொன்ன பொழுது தான் புனிதம் இதைச் சொன்னவள்.

இன்னும் பேசாமலிருந்தால் அன்ரி என்னவும் நினைத்துக் கொள்வாளோ என்று தோன்றவே "அப்ப; வடிவா ஆறுதலாச் செய்திருக்கிறீர்கள்!" என்றாள்.

"ஓமோம்! எல்லாம் வடிவா முறைப்படி செய்தது. மூத்த பேத்தி எண்டு நான் விடேல்லை. எல்லோருக்கும் சொல்லி நல்ல சிறப்பா நடத்தினது"

கமரா நீர் நிறைந்த பெரிய பாத்றூம் ரப் ஒன்றைக் காட்டியது: அருகே ஸ்ரூல் போட்டு பெண்ணை இருத்தி விட்டிருந்தார்கள்.

குனிந்திருந்த பெண்ணின் உச்சியில் ஏதேதோ அப்பித் தெரிந்தது. பலர் மருத்து நீர் தப்பியிருக்க வேண்டும்.

முதலில் மாமிக்காரி. முதல் சட்டி நீரை மொண்டு வார்க்க 'தண்ணீர் வார்ப்பு' தொடங்கியது.

தண்ணீரை அள்ளி, பெண்ணின் தலையில் ஊற்றிவிட்டுத் திரும்பும் பெண்கள் திரையில் முழுமையாக விழுந்து மறைந்தனர்.

வீடியோவைப் பார்த்துக் கொண்டிருப்பவர்களிடையே ஆர்வம் மிகுந்திருந்தது.

"இது மார்க்கண்டு பெண்சாதியல்லே. என்ன மாதிரி கொழுத்திட்டா ஊரிலை இருக்கக்கை பஞ்சை மாதிரிச் திரிஞ்சவ" என்று பாக்கியம் வியந்தாள்.

பின்னாலை வாற அவவின்றை மகளைப் பாருங்களேம்மா. என்னோடை படிச்சவ இப்ப என்ன ஸ்ரெயில் எண்டு" இது அவளின் மகள்.

இப்படி ஒவ்வொருவரும் முழுதாகத் திரையில் தெரியும் பொழுது அவர்களைப் பற்றிய, அதிசயிப்புகள் விமர்சனங்கள் நடந்து கொண்டிருந்தன.

உருவங்கள் மட்டுமல்ல. உடுத்தியிருந்த சேலைகள், அணிந்திருந்த நகைகள் இவைகள் கூட வியப்புகளுக்குள்ளாகின.

'குமுதினி உடுத்தியிருக்கிறது 'பிரியங்கா', என்ன?

"ஓம் போலை கிடக்கு. இஞ்சை பாருங்கோ, இந்தியாவிலை இருக்கிற எங்களுக்கே வர்ற புதுபுதுச் சீலைகளைப் பற்றித் தெரியாது. ஆனா, கனடாவிலை இருக்கிறவைக்கு உடனே தெரிஞ்சிடும். உடனையே எடுப்பிச்சு உடுத்தியும் போடுவினம்"

தன் நெருங்கிய உறவினர்களைப் பற்றி விமர்சனம் வராததினால் திருப்தி உற்றவள் போல் தெரிந்த பவளமன்ரி புதியவர்கள் திரையில் தெரியும் பொழுது அவர்களைப் பற்றி, கனடாவில் தான் தேடிய புதிய உறவுகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டு வந்தாள். "இது என்ரை சம்பந்தி. மூத்த மகன்ரை மாமியார். பின்னாலை அவவின்ரை மூத்த மகள். இரண்டாவது மகளைத் தான் என்ர மகன் முடிச்சிருக்கிறார். சங்கானைச் சனம். நல்ல மாதிரியான ஆக்கள்"

ஒருவாறு 'தண்ணீர் வார்ப்பு' முடிந்து, பெண்ணை உள்ளே அழைத்துச் சென்று விட்டார்கள். கமரா வந்திருப்போரை ஒவ்வொருவராகக் காட்டிக் கொண்டிருந்தது.

கையில் குளிர்பான போத்தல்களோடு பேசிச் சிரிக்கும் பெண்கள், உதட்டுச் சாயம் கலையாமல் உதடு ஒற்றும் நாக்கு.

எதிலும் பளபளப்பு தெரிந்தது.

ஏதோ இசைக்கு கைகளை நீட்டி மடித்து உடம்பை குலுக்கிப் போடும் சில சுடிதார்கள்.

"இது ரஞ்சிதத்தின் மகளோ?'

"ஓமோம்! மூத்த மகள். அவவிற்கு மூண்டும் பெட்டையள் தானே"

அலங்காரம் முடிந்து விட்டது போலும். நகப்பூச்சுப் பூசிய கால் விரல்களிலிருந்து கமரா அங்குலம் அங்குலமாக மேலேறியது. சேலையின் சாண் அகல வெள்ளிக் கரைச் சரிகையில் முன்புறமாய் விழுந்த மடிப்புகள் அவை மேலெழும் பொழுது பக்கவாட்டுகளில் சுருக்கங்கள் விழாத நேர்த்தி. ஒட்டியாண முகப்பு. மார்பில் தெரியும் சங்கிலிகள், பதக்கங்கள். கழுத்தை ஒட்டிய அகன்ற அட்டியல், பக்கவாட்டில் தொங்கும் கைகள், கை நிறையக் காப்புகள், விரல் மோதிரங்கள், மோதிரங்களை இணைக்கும் சங்கிலி.

கடைசியாக பெண்ணின் முகம் திரையில் விழுந்தது. சின்னப்பெண்தான். 'விடேன்', ஸ்கிப்பிங்' செய்யப்போக வேண்டும் என்பது போன்ற பார்வை, தர்ம சங்கடமான புன் சிரிப்பு.

பூச்செண்டுடன் அவளைப் பல்வேறு விதமான "போஸ்களில்" காட்டினார்கள். இடப்புறம், வலப்புறம், பின்புறம் என்று திரும்ப திரும்ப கமரா காட்டியது.

பின்புறமாக ஒழுங்காக மடித்துப் 'பின்' பண்ணப்பட்டு, தோளிலிருந்து சரிய விடப்பட்ட முந்தானையைக் கமரா காட்டிக் கொண்டிருந்த பொழுது அன்ரி கேட்டாள். "எப்பிடிக் கூறை?"

"நல்ல வடிவாயிருக்கு அன்ரி. எங்கே கனடாவிலையே எடுத்தனீங்கள்?'

"அதையேன் கேட்கிறாய்? இதை வாங்க என்ரை மூத்த மகன் - அவன் தானை தாய் மாமன் - வாங்கிக் குடுக்க வேணும் எண்டு பட்டபாடு - அவனும் பெண்சாதியும் இந்த வெளிர் மஞ்சள் நிறத்தைத்தேடி, ஏறி இறங்காத கடைகள் இல்லை. கனடாவிலை கடைசியிலை தெரிஞ்ச ஒரு இந்தியாக் கடைக்காறரிட்டை சொல்லி வைச்சுத்தான் இந்தச் சீலையை வாங்கினது. அவன் அப்ப பட்ட கஷ்டத்தைக் கண்டுட்டு நான் 'அப்பவே நினைச்சுப் போட்டன் பாமதியின்றை கலியாணத்துக்கு இந்தியாவுக்குப் போய் தான் பட்டு எடுக்கிறதெண்டு"

"ஓ! அப்ப பாமதிக்கும் கலியாணம் ஒழுங்காப் போச்சு எண்டு சொல்லுங்கோ! இவள் உற்சாகம் காட்டினாள். பாமதி அன்ரியின் கடைசி மகள்.

அன்ரி முகம் நிறையச் சிரித்தாள். "ஓம்! மாப்பிள்ளையும் கனடாவிலைதான் என்ஜினியர். அவை யார் தெரியுமே. பாலத்தடியிலே கடை வைச்சிருந்தார் தம்பிராசா. அவர்ரை பெண்சாதியின்ரை தங்கையின்ரை மகன்.

தாய் தகப்பனும் கனடாவிலதான். ஆவணியிலை செய்யப்போறம். இன்னும் நாளெடுக்கெல்லை".

"அப்ப இப்ப வந்ததோடை எல்லாப் பட்டையும் எடுத்துக் கொண்டு போகலாம்"

பெண்ணை நிறைகுடத்தின் முன் நிறுத்தி, தாய் மாமன் தேங்காயை உடைத்துக் கொண்டிருந்தார்.

பிள்ளையாருக்குத் தீபம் காட்டி பெண்ணை மணவறையில் கொண்டு வந்து இருத்தி விட்டார்கள்.

முதலில் 'கழிப்புக்கள்'.

லண்டன் போன்ற பெரு நகரங்களுக்குப் போய் வந்த பெண்ணுக்கு எத்தனை பேர் நாவூறு, கண்ணூறு போட்டிருப்பார்களோ, வேண்டாமா பின்னே?

"அண்டு காலமை ஐயரைக் கூப்பிட்டு துடக்கு கழிச்சனாங்கள்" என்றாள் அன்ரி. எங்கே 'துடக்கு' கழிக்காமல் இதெல்லாம் செய்கிறார்களோ என இவள் நினைத்துவிடக் கூடாதென அவசரமாகச் சொல்லப்பட்டது போலிருந்தது. 'அதெல்லாம் ரேப்பிலை முன்னுக்கு ஓடிட்டுத்து நீ பார்க்கேல்லை என்ன?"

"அதுக்கென்ன அன்ரி! நாளைக்கு வந்து முழுக்க போட்டுப் பார்க்கிறன்"

ஒரு மூதாட்டி மூடிய சிறு உண்டியல் பெட்டி போன்ற ஒன்றைக் குலுக்கி குலுக்கி பெண்ணைச் சுற்றிக் காட்டிவந்தாள். கையில் ஏதோ இலையுமிருந்தது. வேப்பிலையாக இராது.

சட்டென்று சுப்ர பாரதி மணியன் நினைவுக்கு வந்தார். அவரும் இப்படி ஒரு வீடியோ ரேப்பைப் பார்த்திருப்பாரென்ற எண்ணம் ஓடி வந்த பொழுது வெட்கமாக இருந்தது. '☆ <u>பெண்களின் பூப்பு போன்ற விடயங்களை விலாவாரியாகட் படமெடுத்து பகட்டுச் செய்வது அருவருப்பை தருகிறது</u>' பாவம்! இலங்கைத் தமிழர்களின் பழக்க வழக்கங்களை பண்பாடுகளை அறிய ஆர்வம் காட்டிய ஒருவரை இப்படி ஒரு வீடியோ ரேப்பின் முன் இருத்தியிருக்கிறார்கள் என நினைக்க கொஞ்சம் சிரிப்பும் வந்தது.

"ஆலாத்திகள்' எடுக்கத் தொடங்கி விட்டிருந்தார்கள். முதலில் மாமிமார் நிறைகுடத்தால் "ஆலாத்தி" எடுத்தார்கள். பின் இவ்விரண்டு பெண்களாக முன்னால் வந்தார்கள். பெண்ணின் முன்னால் பரவியிருந்த தின்பண்டங்கள், பழங்கள் நிறைந்த தட்டுக்களை ஒவ்வொன்றாக எடுத்து அவற்றால் ஆலாத்தினார்கள். ஆலாத்தும் முறையும் கொஞ்சம் வேடிக்கையாக இருந்தது. தட்டை ஆளுக்கொரு பக்கம் பிடித்துக் கொண்டு அந்தப் பக்கம் இந்தப் பக்கமென்று வலமிடமாக மூன்று முறை இழுத்துவிட்டு தட்டை மேலே தூக்கி பெண்ணின் தலைக்கு மேலாக பின்னால் நின்றவர்களிடம் கொடுத்தனர்.

பெண்ணை மீள உள்ளே அழைத்துச் செல்ல அன்ரி கூறினாள். "இரண்டாம் கூறை உடுத்தப் போகினம். இது மருமகன்ரை தங்கையும் புருஷனும் வாங்கிக் குடுத்தது. அவை வாங்கிக் குடுத்ததையும் உடுத்திக் காட்டத்தானே வேணும்"

வந்திருப்போரை ஏற்கெனவே காட்டி முடித்துவிட்டதினாலோ, என்னவோ கமரா மேலே தொங்கும் சரவிளக்குகளையும் பலூன்களையும் காட்டத் துவங்கியது.

இரண்டாவது பட்டும் அழகாகத்தானிருந்தது சந்தனக் கலரில் வெள்ளிச் சரிகை போட்ட மணிப்புரி. இந்தப் ப்ட்டை எடுக்க, அந்த தங்கையும் புருஷனும் என்ன பாடு பட்டார்களோ, எத்தனை கடைகள் ஏறி இறங்கினார்களோ தெரியவில்லை. அன்ரி சொல்லவில்லை.

புதுச் சேலையில் மீள பெண்ணை அங்குலம் அங்குலமாகக் காட்டிவிட்டு மணவரையில் மீள அவளை நிறுத்தினார்கள்.

அன்ரியும் அங்கிளும் தான் முதலில் "கைவிசேஷம்" கொடுத்தார்கள். அன்ரி பேத்தியைக் கட்டிப் பிடித்து முத்தமும் கொடுத்தாள்.


"ரெண்டு பேரும் ஒவ்வொரு பவுண் குடுத்தனாங்கள்"

பெற்றவர்கள் மற்றவர்கள் எல்லோரும் 'கைவிசேஷம்' கொடுத்தார்கள். பலர் முத்தமும் கொடுத்தார்கள்.

இடையிடையே கமரா சாப்பாட்டு மேசையில் தட்டுகளில் நிறைந்திருந்த உணவுப் பண்டங்களைக் கலர் கலராகக் காட்டிக் கொண்டிருந்தது.

பெண்ணிடம் காசு குடுத்துவிட்டு வந்தவர்கள் சாப்பாட்டு மேசைக்குப் போனார்கள். தட்டுக்களில் எடுத்து வந்து சாப்பிட்டார்கள்.





மற்றவர்களும் விடைபெற்றுக் கொண்டு போன பின்பு அன்ரி இவளோடு இருந்து கதைத்துக் கொண்டிருந்தாள்.

கனடாவிலிருக்கும் நம்மவர்கள், வேறு வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்து விட்ட உறவினர்கள்.

இவள் அன்ரியின் கண்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். இவை இளையன்ரியின் கண்களைப் போன்றனவா எனச் சந்தேகம் தோன்றியிருந்தது. அவை சற்று வித்தியாசமானவையாகப்பட்டன. வயது ஆகிவிட்டதினாலோ என்னவோ, கண்கள் சற்று ஒடுங்கியும் தெரிந்தன. நிச்சயமாக அவை அன்பையும் ஆதரவையும் சிந்தும் இளையன்ரியின் கண்களைப் போல இல்லை எனப்பட்டது.

"ஏன் நீங்கள் எல்லோரும் இந்தியாவுக்கு வந்திட்டீங்க? அதுவும் சண்டை எல்லாம் முடிச்ச பிறகு?" என்று அன்ரி கேட்பது காதில் விழுகிறது.

'குப்' என ஓடி வரும் நினைவுகளில் எதை அன்ரிக்குச் சொல்வது? அந்த பீதி கனத்த இரவுகளைச் சொல்வதா? நடு இரவில் கண் விழித்து, எதையோ கண்டு விட்டதாய் கிரீச்சிட்டதைச் சொல்வதா? எதைச் சொன்னாலும் நிச்சயம் தான் அழுவதற்கு அன்ரியின் தோள்கள் கிடைக்காதெனப்பட்டது. இன்று அவளின் உலகம் வேறு. சடங்குகள், பட்டுக்கள், கலியாண வீடுகள், குளிர் பனி.

இவள் லேசாகச் சிரித்தாள் "ஒண்டுமில்லை அன்ரி. அவர்ரை உத்தியோகம் அப்பிடி. எல்லாத் தரப்பட்ட கையிலும் துவக்கு இருக்கு. இவருக்கு யாரு சொல்லுறதைக் கேட்கிறதெண்டு தெரியேல்லை. அதுதான் பேசாம பென்ஷனுக்கு எழுதிக்குடுத்துவிட்டு எங்களையும் கூட்டிக் கொண்டு இஞ்சை வந்திட்டார்".

விடைபெற்று எழுந்தபொழுது அன்ரி கேட்டாள். "நாளைக்கு வீட்டிலை சும்மாதானே இருப்பாய் சந்திரா? காலமை வாறியோ? 'ஷொப்பிங்' செய்ய வேணும். கமலத்துக்கும் என்னோடை வர ஏலாது. நாரிப்பிடிப்பாம்.

"அதுக்கென்ன அன்ரி, மகளைப் பள்ளிக்கு அனுப்பிப்போட்டு பத்து மணிபோல் வாறன். வெளிக்கிட்டு நில்லுங்கோ" என அவள் சொல்லி விட்டு வந்தாள்.

அடுத்த ஒரு நாள் மட்டுமல்ல, தொடர்ந்து ஏழெட்டு நாட்களுக்கு அன்ரியோடு 'ஷொப்பிங்' போக அவளின் விருப்பப்படியே குமரன் சில்க்ஸ், நல்லி, லலிதா நகை மாளிகை என அலைந்தார்கள்.

கூறைகளை தெரிந்தெடுக்கவே இரண்டு மூன்று நாட்கள் போய்விட்டன. பின்னர் எடுத்த கூறை சரியில்லை என்று அதைத் திருப்பிக் கொடுத்து விட்டு வேறு எடுக்க அன்று பின்னேரமும் போக நேரிட்டது. பிறகு பின்னேரங்களிலும் ஷொப்பிங் போனார்கள். 'மாப்பிள்ளை வீட்டார் கூறை எடுக்க அறுநூறு டொலர் தந்ததாக அன்ரி அடிக்கடி சொல்லிக் கொண்டாள். இதை பெருமைக்கு சொல்கிறாளா அல்லது அந்தத் தொகை 'பற்றாது' என்ற தொனியில் சொல்கிறாளா என்பது பிடிபடவில்லை.

கூறை எடுத்து முடிந்ததும் மற்றவர்களுக்கு பட்டு எடுக்கும் வேலை தொடங்கியது. யார் யாருக்கு இன்ன இன்ன பட்டு எடுக்க வேண்டுமென அன்ரி தொகுத்து வைத்திருந்த நேர்த்தியே அலாதிதான். பட்டுப் புடவைகளுக்கு முன்னால் போய் நின்றதும், 'ஹாண்ட்' பேக்கைத் திறந்து அதற்குள்ளிருந்த பேர்ஸிலிருந்து ஒரு சிறு மடித்த மட்டைபோன்ற ஒன்றை கவனமாக வெளியிலெடுப்பாள். முதலில் யாருக்கு சேலைகள் வாங்கப்பட வேண்டுமோ அவர்களின் பெயர்கள் ஒன்றின் கீழ் ஒன்றாக இருக்கும். ஒவ்வொரு பெயரின் நேரேயும் அவர்கள் விரும்பும் சேலையின் ரகம். டிசையின் வெள்ளி சரிகை ஒன்றரை சாணுக்கு இருக்க வேண்டுமா, ஒரு இஞ்சி இருக்க வேண்டுமா, உள்ளே மாங்காய் டிசைனா, அன்னம் டிசையினா என்றது போன்ற அறிவுறுத்தல்கள் ஆகியன இருக்கும். அவற்றின் நேரே அவர்கள் விரும்பும் நிறத்தைக் காட்டும் ஒரு மிக சிறிய துண்டுத் துணியும் 'ஸ்ரைப்லர்' பண்ணுப்பட்டு இருக்கும். அன்ரி, அதற்கேற்ப ஒவ்வொரு பட்டாக அலசி அலசி எடுத்தாள். "மகள் மருமகள் எல்லோருக்கும் நான் வாங்கிக் குடுக்கத்தானே வேணும்!"

பிறகு, 'சுடிதார்கள்' வாங்க வேண்டுமென்றாள். அவளின் விருப்பப்படியே மெஜஸ்ரிக் கொம்-ளெக்ஸுக்குப் போனார்கள். பல கடைகள் ஏறி இறங்கியபின் அன்ரிக்கு பிடித்த வகையில் சுடிதார்கள் கிடைத்தன. அவற்றிலும் ஒரே மாதிரியாக, சிறு உயர வேறுபாடுகளுடன் ஆறு இருக்கிறதா எனத் தேடினாள். பொறுமையிழந்து "ஏன் அன்ரி ஆறு?" என இவள் கேட்க "ஒரே மாதிரி உடுப்பு போட்டுக் கொண்டு, ஆறு பிளவர் கேள்ஸ் பொம்பிளையோடை வந்தா, வடிவா இருக்குமல்லே" என பதில் கிடைத்தது.

இவள், தான் பார்த்த சில திருமண வீடியோப் படங்களை நினைத்துக் கொண்டாள். சில படங்களில் 'பிளவர் கேள்ஸ்' மட்டுமல்ல, தகப்பனார் கூட பெண்ணின் முன்னால், அல்லது பெண்ணோடு வருவார். இன்னும் சில நாட்களில் மணப்பெண், தகப்பனாரின் மடித்த முழங்கைக்குள் கை நுழைத்து மணவறைக்கு வரவும் கூடும்!

வெளி நாடுகளில் எம்மவர்களுக்குத் தான் எத்தனை பொறுப்புகள் சுமைகள் என எண்ணத் தோன்றியது. நம் சடங்குகள், எல்லாவற்றையும் அவற்றின் அர்த்தங்கள் பற்றிக் கவலைப்படாமல் ஒன்றையும் விடாமல் செய்து காட்ட வேண்டும். அதோடு புகுந்த நாடுகளில் கண்ட மேலைத்தேய சடங்கு முறைகளையும் ஆங்காங்கே புகுத்தி சடங்குகளை நவீனப்படுத்தி வசீகரமும் சேர்க்க வேண்டும்.

கனடா திரும்புவதற்கு பவளமன்ரி பெட்டிகளை அடுக்கிக்கொண்டு இருந்தாள். சுற்றிலும் நகைப்பெட்டி. சேலைப்பெட்டிகள், சுடிதார்கள் என்று சிதறிக் கிடந்தன.

பக்கத்தில் போயிருந்த இவள் "இவ்வளவு துாரத்திலை இருந்து வந்திட்டும் ஏன் அன்ரி அவசரப்பட்டு போறீங்கள்? ஒரு மாதத்திற் கெண்டாலும் நிண்டு ஆறுதலா கோயில்கள் எல்லாம் பார்த்துக்கொண்டு போகலாம் தானே" என்றாள்.

"எங்களுக்கும் ஆசைதான் மகள்! இப்ப நேரமில்லையடா. வர்ற வழியிலை சிங்கப்பூரிலையும் நிண்டு வந்ததிலை நேரம் பத்தாமைப் போயிட்டுத்து. அடுத்த முறை வந்து பார்ப்பம்".

'அடுத்த முறை எண்டா எப்ப வருவீங்கள்?'

"ஏன் பாமதிக்கும் கலியாணம் முடிச்சா, இனி யோகனுக்குத்தானை. அவனுக்கு பெட்டை ஊரிலை இருக்கு காத்துக்கொண்டு. இஞ்சை கூப்பிட்டுவிச்சு இந்தியாவிலை வைச்சுத்தான் கலியாணம் நடத்தப்போறம். ஆவணியிலை பாமதிக்கு முடிச்சா, இவனுக்கு அடுத்த தையில செய்திடலாம். "அப்ப வந்தா ஆறுதலா நிண்டு எல்லாருமா போய் கோயில்க-ளெல்லாம் பார்ப்பம்" என்றாள்.

அங்கிளையும், அன்ரியையும் மீனம்பாக்கத்தில் விமானமேற்றி அனுப்பி விட்டு கமலமக்காவும் இவளுமாக வாடகைக் கார்களில் திரும்பும் பொழுதும் இதே பேச்சு.

"அவன் யோகன் பாவம். ஊரிலை இருக்கக்கையே காதலிச்ச பெட்டையை இனித்தான் கலியாணம் முடிக்கப் போறான். குடும்பத்துக்கு செய்ய வேண்டிய கடமையளை எல்லாம் செய்து போட்டு" என்று சொல்லிக்கொண்டு வந்தாள் கமலமக்கா.

"அப்ப, அவர் கலியாணம் முடிச்சா இவை பாடு கொஞ்சம் கஷ்டம் தான். அவர் தானே இவைக்கு செலவுக்கெல்லாம் காசு குடுக்கிறார் போலை. நல்லா உழைக்கிறார் போலை".

"ஒரு ரெஸ்ரொறண்றிலை வேலை பார்க்கிறான்" என்ற கமலமக்கா இவளின் முகத்தைப் பார்த்துவிட்டு "அதிலை என்ன அங்கை இதெல்லாம் சரிதான். எங்கையெண்டாலும் கஷ்டப்பட்டு உழைச்சா நல்லாச் சம்பாதிக்கலாம்." என்றவள் சற்றுப் பொறுத்து "ஆனா இவைக்கு ஏன் ஆரும் காசு குடுப்பான்? இவைக்கு அகதிக் காசு வரும் தானே!" என்றாள்.

"அகதிக் காசு?"

'ஓமோம்! கனடா அரசாங்கம் இவைக்கு 'அகதிகள்' எண்டு சொல்லி மாதா மாதம் காசு குடுக்குதுதானே! அதை ஒவ்வொரு மாதமும் முதலாம் தேதி நேரில போய் கையெழுத்துப் போட்டு வாங்கவேணுமாம். பிந்தினா பெயரை வெட்டிப் போடுவாங்களாம். அதுக்குத்தான் இப்ப அவசரப்பட்டுக் கொண்டு போகினம்.

---

* சுப்ரபாரதிமணியன்: மண் புதிது (பயணக் கட்டுரைத் தொகுப்பு) பக்.96

---

பிரயாணங்களின்
போது
கண்டெடுக்கப்பட்ட
மிருகங்கள்...

உங்களால் வழங்கப்பட்ட எங்களது கடவுச்சீட்டுக்களில்
நீங்கள்
வெடிகுண்டுகளைத் தேடுகிறீர்கள்
ஆயுதங்களையும்
ரவைகளையும் கூரிய நகங்களையும்.
வீதிகளெங்கும்
நகரின் எல்லாப் பழந் தெருக்களிலும்
வீடுகளிலும் சந்தைக் கடை களிலும்
அதிகாலைத் தூக்கத்திலும்
உங்கள் கால்கள் எங்களில் முளைக்கின்றன.

'றோஸ்" நிறத்திலும்
மிக மெல்லிய பசிய நிறத்திலும்
எமக்காக வழங்கப்பட்டிருக்கும் - அது உங்களால் வழங்கப்பட்டது
உங்களால் வழங்கப்பட்டது -
அந்தக் கடவுச்சீட்டுகளில்
நீங்கள் எமது வாழ்க்கையை எழுதுகிறீர்கள்
எமது எதிர்காலத்தை எழுதுகிறீர்கள்
புரியாத மொழியில்.. புரியாத மொழியில்.
எமது வாழ்க்கை
எமது எதிர்காலம்
உங்களது முகங்களின் மிக நுண்ணிய மாற்றங்களில்
நிகழ்கிறது.

உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா
எமக்குரிய கடவுச்சீட்டுகளை நாங்கள் பெறுவதற்கான
- நீங்கள் எதிர்பார்த்த -
எல்லாத் தகுதிகளும் எங்களுக்கிருந்தன.
உண்மையில் அதை உறுதி செய்த பின்னரே
எமக்காக அவற்றை வழங்கியுள்ளீர்கள்.
என்றாலும், நீங்கள் தவறிழைத்து விட்டதாக
உங்களை நீங்களே சந்தேகிக்கிறீர்கள்
உங்களால் வழங்கப்பட்ட
எங்களது கடவுச்சீட்டுகளில் நீங்கள்
வெடிகுண்டுகளைத் தேடுகிறீர்கள்.

நூற்றாண்டு காலமாக
சூரியன் பற்றிய கனவோடு
பசியிலும் துயரத்திலும்
கந்தக உஷ்ணத்திலும்
கொதிப்புறும்
மனிதர்களைக் காணுந்தோறும்
உங்களது முகங்கள் கனல்கின்றன.
துப்பாக்கியின் மொழியில்
எங்களுக்குத் தெரியாத கெட்ட வார்த்தைகளில்
எம்மைத் திட்டுகிறீர்கள்
எமது [illegible]கள்
விலா [illegible]களின் இடுக்குகளில் கதறி மடிகின்றன.
எனினும்,
நகைப்பிற்கிடமானதும் துயரமானதுமான
ஒரு விடயத்தை
நீங்கள்
அவசியம் தெரிந்து கொண்டு தானாகவேண்டும்
ஏனெனில்
நீங்கள் இந்த நாட்டின் அரசு
இந்த நாட்டின் இராணுவம்
இந்த நாட்டின் கவசவண்டிகள்
பீரங்கிகள், எல்லாமும்
இதோ
உங்களால் எமக்கு வழங்கப்பட்ட
கடவுச்சீட்டுகளில் எமது கண்ணீர் [illegible]
நூறு எழுத்துக்[illegible]
ஒரு வாளும் குருதியூறிய [illegible]
எமக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றன
பசியோடு.

போஸ்நிஹாலே-19990530



# திராவிட அரசியலின் மறைவு!

-ரவிக்குமார்

"கண்ணீர்த் துளிக்கட்சி தேர்தலுக்குப் பிறகு இந்த நாட்டில் உலவ வேண்டுமானால் பார்ப்பன வெறுப்புச் சாதனத்தைத் தான் கைத்தடியாகப் பிடித்துக் கொள்ள வேண்டியவர்கள் ஆவார்கள்" என 1962ல் பெரியார் கூறினார். அப்போது நடக்கவிருந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெறுமெனவும், 'கண்ணீர்த் துளிக்கட்சி'யென அவரால் வர்ணிக்கப்பட்ட தி.மு.க. தோல்வியடையும் என்றும் கணித்திருந்தார் பெரியார்.

இன்று கண்ணீர்த் துளிக்கட்சிக்கு பார்ப்பன வெறுப்பு என்பது தேவையற்ற சாதனமாகி விட்டது. அது தன்னுடைய தர்க்கபூர்வமான முடிவை மீண்டும் ஒரு முறை நிகழ்த்திக் காட்டியுள்ளது.

பி.ஜே.பி. கூட்டணி ஆதரவாக வாக்களித்ததன் மூலம் திராவிட இயக்கக் கொள்கை வழியிலிருந்து தி.மு.க. விலகி விட்டது என்று இப்போது பல விமர்சனங்கள் எழும்புகின்றன. குறிப்பாக தி.மு.கவை புரட்சிக் கட்சியாக உளப்பூர்வமாகவும், உதட்டளவிலும் எண்ணிப் பேசிவந்த பத்திரிகையாளர்கள் சிலர் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளனர்.

போதிய எண்ணிக்கையில் எம்.பிக்கள் இல்லாத காரணத்தால் மட்டுமே ஆரம்பத்திலேயே தி.மு.க - பி.ஜே.பி. கூட்டணி அரசில் சேர்க்கப்படவில்லை. அ.தி.மு.க போல 18 கூட இருந்திருக்க வேண்டாம். பத்துப்பேர் இருந்திருந்தால் கூட தி.மு.க தான் முதலில் அந்தக் கூட்டணியில் சேர்ந்திருக்கும். இது தேர்தல் முடிந்தபோதே எல்லோரும் அனுமானித்த விஷயம் தான்.

கூட்டணி அரசு ஏற்பட்ட பிற்பாடு தங்களது அரசைக் கலைத்து விடுவார்களோ என்ற அச்சமும் சேர்ந்து கொள்ள உத்திரப்பிரதேசம் உட்பட பி.ஜே.பி ஆளும் மாநிலங்களில் கூட செய்யாத அளவுக்கு இந்துத்துவா திட்டங்களை நிறைவேற்ற ஆரம்பித்தது திமுக அரசு. சிறுபான்மையினருக்கு குறிப்பாக முஸ்லிம்களுக்கு எதிராக இந்த அரசு செய்துள்ள பாதகங்களை ஆர்.எஸ்.எஸ். கூட செய்திருக்க முடியாது. இன்று இஸ்லாமிய சமூகம் குற்றப் பரம்பரை சமூகம்போல பார்க்கப் படுவதற்கு முழுக்காரணமும் தி.மு.க. அரசு தான். இந்த அரசு கொண்டுவந்த பொடா சட்டத்தை பி.ஜே.பி. அரசால் கூட ஏற்க முடியவில்லை. கோவையில் இஸ்லாமியர்கள் படுகொலை செய்யப்பட்டதில் பொலிசுக்கு இருந்த பங்கு பற்றி பத்திரிகைகள் வெளிப்படையாக எழுதியும் கூட ஒருத்தர் மீதும் நடவடிக்கையெடுக்காத தி.மு.க. அரசு இஸ்லாமியர்களை நூற்றுக் கணக்கில் சிறைப்படுத்தியுள்ளது.

இஸ்லாமியர்ரைப் போலவே தலித்துக்களை ஒடுக்குவதிலும் தி.மு.க. அரசு பி.ஜே.பி. அரசுகளை விஞ்சியுள்ளது. தலித் அமைப்புகள் அரசியல் உரிமைகள் முன்வைத்து பேரணியோ, மாநாடோ நடத்த அனுமதியில்லை. அம்பேத்கர் நினைவு நாளுக்கும் பிறந்த நாளுக்கும் மரியாதை செலுத்தக் கூட தலித் மக்கள் செல்ல முடியாதபடி அவர்கள் தடுக்கப்படுகின்றனர். கைது செய்யப்படுகின்றனர்.

காபினெட் அந்தஸ்தில் ஒரேயொரு தலித் கூட அமைச்சராக இல்லாத -தனது எம்.பி.க்களின் பலத்தில் ஐந்தில் ஒரு பங்கினர் - 37 பேர்- தலித்துக்களாக இருந்தும், இவர்களில் ஒருவரைக் கூட அமைச்சராக்காத - பி.ஜே.பிக்கு எல்லாவிதத்திலும் பொருத்தமான துணையாகவே கருணாநிதி அரசு செயல்பட்டு வருகிறது.

உண்மை இப்படியிருக்க பி.ஜே.பி. அரசுக்கு ஆதரவாக பாராளுமன்றத்தில் வாக்களித்ததால் மட்டுமே தி.மு.க. களங்கப்பட்டு விட்டது என்று சொல்வது எப்படிச் சரியானதாயிருக்கும்?

திராவிட அரசியல் என்பது உள்ளூர ஒரு இந்துத்துவா அரசியலாகத்தான் இருந்து வந்துள்ளது. இந்த உலகின் கடைசி கிறிஸ்தவர் இயேகிறிஸ்து தான் என்று சொல்லப்படுவது போலவே இங்கும் பெரியாரை மட்டும் தான் நாம் ஒரேயொரு சுயமரியாதை இயக்கத்துக்காரரென எடுத்துக் கொள்ள முடியும். தேர்தல் அரசியலில் பங்கேற்பதற்கு முன்பேயே அண்ணாதுரை போன்றவர்கள் இன்றைய தி.மு.கவின் சீரழிவுக்கான விதைகளைப் போட்டு விட்டார்கள். அதன் விளைவாக பெரியார் அவரது ஆயுள் காலத்திலேயே பலமுறை கொல்லப்பட்டார். அவரது கொள்கைகளுக்கான கல்லறையை அவருக்கான கல்லறையை உருவாக்குவதற்கு முன்பாகவே எழுப்பி விட்டனர் திராவிட இயக்கத்தினர். "நான் தோல்வியடைய மாட்டேன். நிதானமாகவாவது வெற்றியடைவேன்." என்ற பெரியாரின் நம்பிக்கையை தோற்கடித்தவர்கள் பார்ப்பனர்கள் அல்லர், அவரது வழிவந்தவர்களாகக் கூறிக்கொள்ளும் திராவிட இயக்கத்தினர் தான் அதைச் செய்தார்கள்.

இதற்கான மூலக்கூறு பெரியாரிடம் இருந்திருக்குமோ எனவும் பார்க்க வேண்டியது அவசியமாகி விட்டது. உலகெங்கும் மார்க்சிய இயக்கங்களுக்கு பின்னடைவு ஏற்பட்ட போது இது பற்றிய பரிசீலனை மார்க்சின் சிந்தனைகளையும், விமர்சனத்துக் எடுத்துக் கொண்டது. அதுபோன்றதொரு திறந்த மனப்பான்மையோடு நாம் பெரியாரின் கருத்துக்களை ஆராய வேண்டும். அதற்கான சரியான சந்தர்ப்பம் இதுதானென்றும் தோன்றுகிறது.

அந்த விவாதத்தை துவக்கி வைப்பது போல ஒன்றை மட்டும் இங்கே பார்ப்போம்.

மைனாரிட்டி சமுதாயம் பற்றி பெரியார் குறிப்பிடும் போது பார்ப்பனர்களோடு முஸ்லிம்களையும் சேர்க்கிறார். மெஜாரிட்டி (நாட்டின் இயற்கையான பெருவாரி) மக்கள் மனிதத்தன்மை பெறாமல் போனதற்கும் குறிப்பாகத் தமிழ் நாட்டின் நிலைக்கும் இந்த மைனாரிட்டிகளின் ஆதிக்கத்திற்கு இடம் கொடுத்ததே காரணமென்று 1962ல் எழுதுகிறார். (ஈ.வெ.ரா. சிந்தனைகள் தொகுதி - 1 தொகுப்பாசிரியர்: வே. ஆனைமுத்து பக்கம் 46) "100க்கு 90விகிதம் உள்ள இந்த நாட்டுப் பெருவாரி சமுதாயமாகிய தமிழன்" என்று பெரியார் குறிக்கும் போது அதில் பார்ப்பனரையும், முஸ்லிம்களையும் அவர் உள்ளடக்கவில்லை. அவர் கருத்துக்களை அப்படியே கீழே தருகிறேன்:

"100க்கு 3 விகிதமுள்ள பார்ப்பன மக்களும், அவர்கள் பெண்களும் பொது நலத்துக்கு என்று ஒரு தொழிலும் செய்யாமல் நம்மை 'எட்டிப்போ', 'மேலே படாதே' என்று சொல்லிக் கொண்டு உயர்வாழ்வு வாழ்கிறார்கள். அது போலவே 6 வீதம் உள்ள முஸ்லிம்கள் ஒரு கூலி உடலுழைப்பு வேலையும் செய்யாமல் அவர்கள் பெண்கள் நம் மனிதர்களை "கண்ணுக்கே தென்படக்கூடாது" என்கின்ற நிலையிலும் பிச்சை எடுப்பவன் வீட்டுப் பெண்கள் உள்பட "கோஷா" முறையில் உழைப்பில்லாமல் வாழும் முறையை இந்த நாட்டில் அனுபவிக்கிறார்கள். அதே நேரத்தில் நம் ஆண்களும், பெண்களும் அவர்கள் வீட்டு வேலைக்காரர்கள், வேலைக்காரிகளாக இருக்கிறார்கள்".

"முதலாவது இந்த இரண்டுதர மக்கள் நிலையும் இந்நாட்டுத் தமிழனுக்கு எவ்வளவு இழிவு மானக்கேடு என்பதை எந்தத் தமிழன் உணருகிறான்?'

"... நமது நாட்டில் மைனாரிட்டிகள் உரிமை அவர்களது சமய கலாசாரப் பண்பு என்பதற்காக பல காரியங்களில் நாம் நம் சுயமரியதையை விட்டுக் கொடுத்து வந்த காரணமே இன்று நாட்டுக்கு மைனாரிட்டுகளால் பெருங்கேடும் துரோகமும் அடைய வேண்டியவர் களாகி விட்டோம்."

மைனாரிட்டிகளுக்கு அளிக்கும் சலுகையும், உரிமையும் 'துரோகம் - பச்சைத் துரோகம்' என்கின்ற குழந்தைகளைத் தான் ஈனும், ஈன்றும் வருகிறது. இது இயற்கையான பண்பு (அல்லது விதி)"

"அதனாலேயே நம் நாட்டிலுள்ள யோக்கியப் பொறுப்பற்ற மக்கள் தங்கள் சுயநல சமுதாயக்கேடான காரியங்களுக்கு இப்படிப்பட்ட மைனாரிட்டிகளின் பின்பலத்தை பயன்படுத்திக் கொண்டு எதையும் செய்யத் துணிகிறார்கள்".

"இந்தத் துரோகி மைனாரிட்டிகளும் அப்படிப்பட்ட பொறுப்பற்ற சமூகத் துரோகிகளுக்கு பயன்பட்டு வாழக் காத்துக் கிடக்கிறார்கள்."

"பார்ப்பனுக்குப் பயந்தும், முஸ்லிம்களுக்கு அதிக இடம் கொடுத்து வந்தோம். அதன் பலனை இன்று அனுபவிக்கின்றோம்".

"இது சாணியை மிதிக்க அசிங்கப்பட்டு மலத்தின் மீது காலை வைக்க நேர்ந்த பழமொழியாக முடிந்தது."

"ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால், பார்ப்பன் துரோகம் செய்ய அவனுக்குக் காரணம் உண்டு. என்னவென்றால், அவனது பொய் பித்தலாட்ட உயர்வாழ்வு சரிந்து விழுகிறது. முஸ்லிம் துரோகம் செய்யக் காரணம் என்ன" முஸ்லிம்கள் அதை வெளியிட்டு மக்களைத் திருப்தி செய்ய வேண்டும். அப்போது தான் அவர்கள் துரோகக் கூட்டத்திலிருந்து விலக இச்சைப் பட்டவர்கள் ஆவார்கள்."

"இவ்வளவு எழுதப்பட்டதன் காரணம் மைனாரிட்டிகளை ஆதிக்கத்தில் விட்டு வைப்பதும் அவர்களது தனிச் சலுகைகளுக்கு இடம் கொடுப்பதும் நாட்டுக்கு - நாடு பெருவாரி மக்கள் சமுதாயத்துக்கு கேடு என்பதை விளக்கவேயாகும்."

பெரியாரின் மேற்கண்ட கருத்துக்களுக்கு விளக்கவுரை அவசியமில்லை. இன்றைய தி.மு.க அரசின் நடைமுறைகளுக்கு பெரியாரின் வார்த்தைகளிலேயே அடையாளங்களை எளிதாகக் காணமுடிகிறது. இது பெரியாரைக் கொச்சைப்படுத்துவதற்காக கூறப்படுவதல்ல.

பெரியார் சிந்தனைகள் குறித்து வழிபாட்டுணர்வு தவிர்த்த ஆரோக்கியமான விமர்சனங்கள் தேவை. இதுவரையில் அத்தகைய மனந்திறந்த காழ்ப்புணர்வற்ற விமர்சனம் வரவில்லை. இனியேனும் அது வந்தாக வேண்டும்.

லல்லு யாதாவ் பாணியிலான சமூக நீதி, அரசியல் என்பதன் உள்ளடக்கமென்ன, செயல்பாடு என்ன என்பதை பீஹாரில் நடத்தேறிவரும் படுகொலைகள் காட்டுகின்றன. அதுபோலவே தி.மு.க. பாணியிலான திராவிட அரசியலின் உண்மை சொரூபம் என்ன என்பதை நாம் புரிந்து கொண்டாக வேண்டும்.

எதிர்வரும் தேர்தலில் பி.ஜே.பியோடு தி.மு.க. கூட்டு சேர்ந்தாலும் சேராவிட்டாலும் வேறுபாடு ஒன்றுமில்லை. திராவிட இயக்கப் பாணியிலான பார்ப்பன எதிர்ப்பு அரசியல் எப்போதோ முடிந்துவிட்டது. இன்றைய இந்துத்துவா என்பது கோயிலையும் பார்ப்பனர்களையும் மட்டுமே மையமாகக் கொண்டு செயல்படவில்லை. தினசரி வாழ்வில் ஒரு சாதாரண மனிதன் இந்துவாகத் தன்னை அடையாளம் கண்டு கொள்ள வேதங்களோ, சமஸ்கிருதமோ, சடங்கு சம்பிரதாயங்களோ இன்று தேவைப்படவில்லை. மைனாரிட்டிகள் பற்றிய பெரியாரின் கருத்துக்கள் அவரை இந்துவாகவே நமக்கு அடையாளம் காட்டுகின்றன. பகுத்தறிவுவாதிகளாக, கடவுள் மறுப்பாளராக பார்ப்பன எதிர்ப்பாளராக இருக்கும் ஒருவர் கூட இந்துவாகவும் இருந்து விட முடியும் என்பதற்கான அச்சம் தரும் உதாரணமாகவே பெரியாரின் இந்தக் கருத்துக்கள் உள்ளன.

"ஆலிஸ் இன் வொண்டர்லேண்ட்" என்ற கதையில் ஆலிஸ் ஒரு பூனையை சந்திப்பாள். அந்த பூனை மாயமாய் மறையும் தன்மை கொண்டது. அவளிடம் பேசிவிட்டு அது மறையத் தொடங்கும். வாலின் நுனியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக அது மறைய ஆரம்பிக்கும். பூனை முழுவதும் மறைந்த பின்பும் கொஞ்ச நேரம் அது இளிப்பது (Gin) மட்டும் பார்வைக்கு எஞ்சியிருக்கும். "நான் இளிப்பு இல்லாத பூனையைப் பார்த்திருக்கிறேன். ஆனால், பூனை இல்லாமல் வெறும் இளிப்பை மட்டும் இப்போது தான் பார்க்கிறேன்" என்பாள் ஆலிஸ் . நாம் இன்று பார்க்கும் தி.மு.க. பாணி திராவிட அரசியலும் அப்படித் தான். டெலிவிஷனை நிறுத்திய பிறகும் திரையில் சில நொடிகள் காட்சி எஞ்சியிருப்பது போல் தென்படும் மாயத்தோற்றம் மாத்திரித்தான் அது.

திராவிட அரசியல் எப்போதோ மறைந்து விட்டது. இப்போது மறைந்தது பூனையல்ல... அது விட்டுச் சென்ற இளிப்பு மட்டும் தான்.

**தமிழ்நாட்டின் முக்கிய எழுத்தாளர்களில் ரவிக்குமார் ஒருவர். நிறப்பிரிகை ஆசிரியர் குழுவில் இருந்து வந்த இவர் தற்போது "தலித்" என்ற சஞ்சிகையை வெளிக் கொண்டு வருகிறார். பின் நவீனத்துவ சிந்தனைகளில் கூடிய அக்கறை காட்டி வருபவர்.**

**தலித்திய இயங்கங்களுடன் தீவிர பங்கு கொண்டு ஒரு தலித் போராளியாக, செயற்பாட்டாளராக இயங்கி வருபவர்.**

**தலித்தியக் கருத்தாக்கத்தை தமிழ்ச் சூழலில் அதிகம் பேசச் செய்ததில் இவருக்கு நியாயமான பங்குண்டு.**

**'திராவிட அரசியல் ஏற்கெனவே மறைந்து விட்டது என்று சரிநிகருக்கு அனுப்பி வைத்துள்ள இக்கட்டுரையில் அவர் தெரிவிக்கிறார்.**

**ஆர்.**

## இருளுடன் சங்கமித்தல்..

ஓட்டமாவடி அறபாத்

இருளென்னை விழங்கித் துப்பியது
வாழ்வின் விட்டம் வரை வந்தாயிற்று
எட்டிப்பார்க்கையில்
மறுமுனையே ஆழமாய்,
இருளுக்கு எதுவும் தப்பில.

விரிக்க விரிக்க,
வானம் படர்கிறது
பூமியும் தான்.

என்றும் நரைவிழா மேகங்கள்
ஒளி மங்கா வெண்ணுடுக்கள்
உயிர் சுமந்து,
அந்தரத்தில் அலையுமிந்தக் காற்று,
ஆர்ப்பரிக்கும் கடல்
அடிதொடும் பேரலைகள்
இன்னும் பிறவல்லமைகள்
எதுவும் மாறில.
வாழ்க்கை தான் மாறிற்று.

இருளுடன் இருளாய்
கஷ்ரந்து போனதொரு கும்மிருட்டில்
விடிவெள்ளியும் இறந்துவிட்டதான பிரமை.

தனிமையும், இருளும்
கிணற்றினுள் மூர்ச்சைப் பிடித்து
இருப்பதைப்போல்
எனினும் -
சில துயரங்களை மீறி -
எல்லாமே இங்கு நம்பிக்கை தருகின்றன.
என் தாயகம் திரும்புவதைத் தவிர.

**பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய இயக்கம்' என்ற பெயர் இன்று இலங்கை பூராவும் பிரபல்யமான ஒரு பெயராகிவிட்டது. 'தமிழ்ப் பயங்கரவாதத்தை எதிர்ப்போம்' என்ற முழக்கத்துடன் செயற்படத் தொடங்கியுள்ள இந்த இயக்கம் 350 பேரைக் கொண்ட ஒரு கருக் குழுவையும், 5000 பொது உறுப்பி-னர்களையும் கொண்ட அமைப்பாக வளர்ந்துள்ளது. சிங்கள இனவாத அடிப்படையைக் கொண்ட இந்த அமைப்பு தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கான போராட்டம் குறித்துக் கொண்டிருக்கும் அபிப்பிராயம் எந்தச் சிங்கள இனவாத அமைப்பினது அபிப்பிராயத்திலிருந்தும் வே-றுபட்டதல்ல. ' சிங்கள வீரவிதான இயக்கத்துக்கும்', தமக்கும் இடையில் நிறைய வேறுபாடு உள்ளதாக் கூறும் இந்த இயக்கத்தின் குறிக்கோள் தமிழ்ப் பயங்கரவாதத்தை எதிர்ப்பது தான் என்கின்றார் அதன் தலைவர் சம்பிக்க ரணவக்க. சென்ற வாரம் ' சண்டே ரைம்ஸ் ' இதழில் அவர் அளித்த நேர்காணலிலிருந்து சில பகுதிகளை இங்கு தருகின்றோம்.**

ஆ.ர

# 0-தமிழர்கள் சிங்களவர்களை திட்டமிட்டு தாக்கி வருகிறார்கள்!
# 0-சிங்களவர்கள் இனவாதிகள் அல்ல!
# 0-அரசாங்கம் தமிழினவாதத்திற்கு ஆதரவளிக்கிறது!

-சம்பிக ரணவக்க

**பயங்கரவாதத்துக்கு எதிரான தேசிய இயக்கத்தின் இன்றைய பாத்திரம் என்ன ?**

எங்களது நோக்கம், பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான பொதுமக்கள் பங்களிப்பை வென்றெடுப்பதாகும்.

**உங்களையும், சிங்கள வீரவிதான இயக்கத்தையும் ஒன்றென மயங்கும் ஒரு நிலை உள்ளது. உங்களுக்கும், அவர்களுக்கும் இடையில் தொடர்புகள் அல்லது வேறுபாடுகள் உள்ளதா ?**

பல வேறுபாடுகள் உள்ளன. ஒன்று அவர்கள் சிங்களவர்கள் மத்தியில் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்து-வதற்கான வர்த்தக முயற்சிகளை ஏற்படுத்த அவர்கள் முயல்கின்றார்கள். அவர்கள் மிகவும் பரந்த சமூக பொருளாதார நோக்கங்களைக் கொண்டவர்கள். எமது நோக்கம் தமிழ் இனவாதப் பயங்கர-வாதத்தை ஒழிப்பது தான். அதனால் தான் நாம் பல ஆர்ப்பாட்டங்களைச் செய்து வருகின்றோம்.

**உத்தியோகபூர்வமற்ற முறையில் சிங்கள மக்களைப் பாதுகாக்க ஒரு சிங்கள இராணுவம் கட்டப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறதே ?**

அதில் எந்த உண்மையும் இல்லை. மற்றவர்களைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், எமது இயக்கத்திற்கு அப்படி ஒரு நோக்கம் கிடையாது. அரசாங்கத்தின் இராணுவத்தினூடாகவே பயங்கர-வாதத்தைத் தோற்கடிக்க நாம் விளை-கின்றோம். அத்துடன் இந்த முயற்சிக்காக மக்களின் ஆதரவைத் திரட்ட முயல்-கின்றோம்.

உதாரணமாக, பயங்கரவாதத்துக்கு எதிரான ஒரு தேசியத் திட்டத்தை நாம் முன்வைத்துள்ளோம். அரசாங்கம் முன்னெடுக்கக் கூடிய சில நடவடிக்-கைகளை நாம் முன்மொழிந்துள்ளோம். இலங்கையில் இன்று சிங்கள மக்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது என்பது ஒரு முக்கிய பிரச்சினையாக இருக்கின்றது.

சட்ட அமுலாக்கலை எடுத்துக் கொண்டால், தொண்டமான், குமார் பொன்னம்பலம் போன்ற இனவாதிகளுக்கு இது நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. அவர்கள் சட்டத்தை மீறும் போதெல்லாம் அதிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள். சட்டம் ஈ.பி.டி.பி., ரெலோ, புளொட் போன்ற அமைப்புக்களைத் தொடு-வதில்லை.

ஆனால், சிங்களவர்களைப் பொறுத்தளவில் சட்டம் எப்போதும் அமுல்படுத்தப்படுகின்றது.

கடந்த ஏப்ரல் 30ஆந் திகதி நுவரெலியாவில் நடந்த சம்பவத்தை எடுத்துக் கொண்டால், தொண்டமானின் ஆட்கள் இலக்கத் தகடற்ற வாகனங்களில், ஆயுதங்களுடன் வந்தார்கள். பொலிஸிடம் அவர்களைக்



சம்பிக ரணவக்க

கைது செய்யும்படி நாம் கேட்டோம். ஆனால், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால் எங்கள் குழுவின் அமைப்பாளர் ஒருவருக்கு எதிராக ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்-பட்டுள்ளது. அண்மையில், ஜனாதிபதி, அநேகமாக எங்களை மனதில் வைத்துக் கொண்டு என்று நினைக்கின்றேன் இப்படி-யான அமைப்புக்களைக் கையாளத் தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்-துவேன் என்று கூறியிருந்தார். ஆனால் அவர் தனது நிறைவேற்று அதிகாரத்தைத் தமிழ் இனவாதிகள் மீது பயன்படுத்து-வதில்லை.

உதாரணமாக, தடைசெய்யப்பட்ட புலிகளுடன் பேசும் எவரும் ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனைக்குள்ளாவார் என அவசர காலச் சட்ட விதி கூறுகின்றது. ஆனால் ஜயலத் ஜயவர்தன, விக்ரமபாகு கருணாரத்ன, தொண்டமான் போன்றோ-ருக்கு இந்தச் சட்டம் பொருந்துவதில்லை.

இன்றைய அரசாங்கம், தமிழ் இனவாதிகளுக்குச் சாதகமாக இயங்குகின்றது என்றே நாம் கருதுகிறோம். எனவே சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாடு காணாமல் போய்விட்டது.

மடு அகதிகள் பிரச்சினையை எடுத்துக் கொள்ளுங்கள். தமிழ்க் கத்தோலிக்க அகதிகள் பற்றிப் பேசுபவர்கள் யாரும் " கொக்குளாவ"- இப்போது அது கொக்கிளாய் என அழைக்கப்படுகின்றது - பற்றியோ, சிங்கள அகதிகள் பிரச்சினை பற்றியோ பேசுவதில்லை.

ஒரு தமிழன் அகதியானால், ஒரு தமிழன் கொல்லப்பட்டால், ஒரு தமிழன் கைது செய்யப்பட்டால், அவன் ஒரு தமிழனாக இருப்பதால் மட்டுமே அது ஒரு மனித உரிமை மீறலாகி விடுகின்றது.

நாம் அரசாங்கத்திற்குச் சொல்வது எல்லாம், இந்தப் போக்குத் தொடருமானால் அது பயங்கரமான பின் விளைவுகளைக் கொண்டு வரும் என்பது தான்.

**உங்கள் அமைப்பை மக்களுக்கு அறிமுகம் செய்ய என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளீர்கள் ?**

நாங்கள் மருதானைக் குண்டு வெடிப்பின் பின்னரே ஆரம்பித்தோம். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவும் ஒரு திட்டம் ஒன்றினூடாக நாம் மக்களிடையே சென்றோம்.

மக்களது வாழ்வு சிதைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இது கணக்கிடப்படுவதும் இல்லை. இது பற்றிப் பேசவோ, எதிர்ப்புத் தெரிவிக்கவோ யாரும் இல்லை.

கடந்த ஆண்டு நாங்கள் ஏழு ஊர்வலங்களை நடாத்தினோம். வேறு யாரும் இதைச் செய்யவில்லை. இந்த வருடம் பல நகரங்களுக்குச் செல்வது எமது குறிக்கோளாகும். புலிகளின் செயற்பாடுகள் தொடர்பாக நாம் வீடியோக்கள் எடுத்துப்-பார்க்கிறோம். இவற்றை நாம் காட்டுவோம். இவ்வாண்டு இறுதியில் ஒரு பயங்கரவாத எதிர்ப்பு மாநாட்டை நடாத்தவுள்ளோம். பயங்கரவாதத்துக்கு எதிரான எல்லா வெளிநாட்டு அமைப்புகட்கும் நாம் அழைப்பு விடுவோம். எல்லாச் சிங்கள அமைப்புக்களையும் இணைக்க நாம் இன்ரநெற், ஈமெயில்களைப் பயன்படுத்து-வோம். நாம் ஒரு பிரதான இணைப்பு மையமாக இயங்குவோம்.

**உங்கள் அமைப்பு இன மோதலை தூண்டக்கூடும் என்ற பயம் நிலவுகிறதே?**

எங்கள் நோக்கம் பயங்கரவாதத்தை தோற்கடிப்பதே. மற்றவர்களும் இவ்-வமைப்பில் இணையலாம். சிங்களவர்கள் மட்டும் அல்ல. அரசாங்கத்திற்கு சிங்களவர்கள் பயங்கரவாதிகள் என்ற ஒரு முற்சாய்வான அபிப்பிராயம் இருக்கிறது.

1983இலிருந்து தமிழ் மக்கள் 128 தடவை சிங்களவர்களைத் தாக்கியுள்-ளார்கள். இத்தகைய ஆத்திரமூட்டல்களுக்கு மத்தியிலும் கடந்த 17 ஆண்டுகளாக சிங்கள மக்கள் எதிர்த்துத் தாக்கவில்லை.

சிங்கள மக்கள் தாம் இனவாதிகள் அல்ல என்று நிரூபித்து விட்டார்கள். தமிழ்ச் சமூகம், துப்பாக்கி ஏந்திய நபர்களது உத்தரவுகளை ஏற்கிற ஒரு சமூகமாக உள்ளது. அந்தச் சமூகம் ஒரு செத்துப் போன சமூகம். இனவாதம் என்பது ஒரு இனத்தின்மீது திட்டமிட்ட விதத்தில் குறிப்பிட்ட காலத்துக்குத் தாக்குவதாகும்.

1983இலிருந்து சிங்கள மக்கள் இத்தகைய ஒரு திட்டமிட்ட தாக்குதலில் ஈடுபடவில்லை. ஆனால், தமிழ் மக்கள் அப்படி அல்ல. அவர்கள் திட்டமிட்ட விதத்தில் தாக்கியுள்ளார்கள்.

அவர்கள் வடக்கையும் கிழக்கையும் தமது தளமாக அமைத்துக் கொண்டார்கள். அங்கு வேறு எந்த மக்களும் வாழ முடியாது. இதனால் தான் இப்பகுதிகளில் ஒரு இனச்சுத்திகரிப்பு மேற்கொள்ளப்-பட்டது.

இதன் இரண்டாம் கட்டம் தான் மலையகம் இதில் இணைவதாகும். மூன்றாவது கட்டம் கொழும்பை செயலற்றதாக்குவது. இதுதான் உண்மை-யான இனவாதம். தமிழ் மக்கள் கட்டம் கட்டமாக இலங்கையைக் கைப்பற்றும் விதத்தில் செயற்பட்டு வருகிறார்கள். இதுதான் தமிழ் விரிவாக்கவாதமாகும்.

**இதற்காக இப்படி ஒரு அமைப்பை உருவாக்க வேண்டுமா? அரசாங்கம் சிங்கள மக்களைப் பாதுகாக்க போதிய நடவடிக்கை எடுக்கவில்லை யென்று கருதுகிறீர்களா?**

ஆம். பிரிவை மட்டுமல்ல. இனவாதிகள் அல்லாத தமிழர்களையும் கூட அது பாதுகாக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் விரட்டப்-பட்டார்கள். இதனால் தான் நாம் இந்த பயங்கரவாதப் பிரச்சினையை ஒரு பொது மனிதனின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்க ஆரம்பித்தோம்.

**கடந்த வெள்ளி நடத்தப்படவிருந்த எதிர்ப்பு ஆர்ப் பாட்டத்தை கடைசி நிமிடத்தில் கைவிட்டதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

அவர்கள் ஆர்ப்பாட்டங்களை நடாத்தட்டும். இது யாழ்ப்பாணம் அல்ல. இது ஒன்றும் துப்பாக்கிகட்கு பயந்து செத்துப் போன ஒரு சமூகம் அல்ல.

அவர்களது மே தினம் முழுக்க முழுக்க ஒரு இனவாத மே தினம். எங்களிடம் அது முழுமையாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் சொன்னவற்றை நாம் சொன்னால் கைது செய்யப்பட்டு விடுவோம்.

இத்தகைய விளையாட்டுக்கள் நிறுத்தப்படவேண்டிய தருணம் இதுதான். நாங்கள் வேண்டியளவுக்கு சகித்துக் கொண்டிருந்து விட்டோம். தொண்டமான் புலிகளின் எல்லா தாக்குதலுக்குப் பிறகும் எதுவும் செய்யாமலிருப்பதற்காக, சிங்களவர்களை புகழ்ந்து கொண்டு ஊர்வலம் போக வேண்டும்!

---

## இலங்கையில் நிலவிவரும்....

இல்லை என்றாகிறது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் உடல் எவ்வளவு மோசமாக சிதைக்கப்பட்டிருந்தாலும் அவை பிரசுரிக்கப்படலாம் என்றாகிறது. இதைத் தவிர, இத்தகைய படங்களைப் பார்ப்பது, மேலே கூறியது போல சிறுவர்களை பாதிக்கின்றது என்பதை எல்லா மனோவியல் நிபுணர்களும் ஏற்றுக் கொள்வதில்லை. சில தொடர்பு சாதனவியலாளர்கள், இத்தகைய ஒரு சட்டத்தை அவசர கால சட்ட விதிகளின் கீழ் கொண்டுவர வேண்டியதில்லை. இது தொடர்பாக அரசாங்கம் செய்தி ஆசிரியர்களுடன் கலந்துரையாடி ஒரு சுய கட்டுப்பாட்டுக்கு முயன்றிருக்கலாம் என்றனர்.

**குழு அரசியல் அழுத்தங்களால் உருவான தணிக்கை**

குழு அரசியல் அழுத்தங்களைச் சமாளிப்பதற்காக தணிக்கைகளைக் கொண்டு வருவது இலங்கை அரசாங்கத்துக்குப் புதிய விடயம் அல்ல. உள் நாட்டிலும் மற்றும் சர்வதேச ரீதியிலும் பலத்த எதிர்ப்பைச் சம்பாதித்த ஒரு நடவடிக்கை தான் 1997 நவம்பரில் ஜனாதிபதி சந்திரிக்கா திடீரென பி.பி.சி வழங்கியிருந்த (ஆனை பைாவ உாடை-னசநெ) (நள்ளிரவுச் சிறுவர்கள்) என்ற படத்தை தயாரிப்பதற்கான அனுமதியை ரத்துச் செய்ததாகும். பரிசு பெற்ற சல்மான் ருஸ்டியின் நாவலை அடிப்படையாகக் கொண்ட ஒரு படம் இது. தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் மற்றும் வெளியுறவு அமைச்சு ஆகியவற்றிடமிருந்து இப்படத்தைத் தயாரிப்பதற்கான அனுமதியை பி.பி.சி ஏற்கெனவே பெற்றிருந்தது. ஜனாதிபதியால் ஜனவரியில் இவ்வனுமதி மறுக்கப்படுவதற்கு 2 மாதங்களுக்கு முன்பே படத்தைத் தயாரிப்பதற்காக பி.பி.சியைச் சேர்ந்தவர்கள் இங்கு வந்து அதற்கான தயாரிப்பு வேலைகளைத் தொடங்கியிருந்தார்கள். ஜனாதிபதி செயலகம் இம் மன மாற்றத்துக்கான எந்தக் காரணத்தையும் தெரிவிக்கவில்லை. ஆனால், பாராளுமன்றத்திலுள்ள ஒரு சில முஸ்லிம் உறுப்பினர்களின் சிறு குழுவொன்றினது அழுத்தத்தைச் சமாளிக்கவே அரசாங்கம் இவ்வாறு மனம்மாறியது என்று பரவலாக நம்பப்படுகிறது. இந்த நூல், ருஸ்டியின் பிரச்சினைக்குரிய நூலாக, முஸ்லிம் அபிப்பிராயத்திற்கு முரணானது என்று சில முஸ்லிம் பிரிவினரால் கருதப்படும் 'சாத்தானின் வேதங்கள்' (ளுயவயniஉ ஏநசளநள) என்ற நூல் எழுதப்படுவதற்கு 10 வருடங்களுக்கு முன் எழுதப்பட்டதும், முஸ்லிம் கருத்துத் தொடர்பாக ஏதாவது கூறுகிறது என்று சொல்ல முடியாத ஒரு நூலுமாகும். உண்மையில் சில காலங்களுக்கு முன் தடைசெய்யப்பட்ட சாத்தானின் வேதங்கள் போலல்லாது இந்த நூல் இலங்கையில் எங்கும் தாராளமாக விற்கப்படுகிறது.

இப்படத் தயாரிப்பை தடை செய்தது, குழு அரசியல் நலன்களுக்கு பாதிப்பை உண்டாக்கும் என்று கருதிச் செய்யப்பட்ட தடைகளில் மிக அண்மை உதாரணமாகும். Satanic Verses S.J. தம்பையாவின் Budhism Betrayed? நஸ்லிமா நஸ்ரீனின் லஜ்ஜா என்ற நூல்களும் சில பௌத்த முஸ்லிம் குழுக்களின் நலன்களை முறையே பாதிக்கும் எனக் கருதி தடை செய்யப்பட்டவையாகும்.

இத்தகைய தடைகளின் ஆபத்து குறித்து இரு இலங்கைக் கல்வியாளர்கள் ஒரு வார இதழில் எழுதினார்கள். ஒரு சகிப்புத் தன்மை மிக்க, பல்லினத் தன்மை வாய்ந்த சூழலுக்கு கோரிக்கை விடுக்கும் அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்கள்:

**வேறு தணிக்கைகள்**

1998 ஓகஸ்டில் 'தீர்ப்பு' (The judgement) என்ற திரைப்படத்தின் தயாரிப்பு பாதுகாப்பு அதிகாரிகளால் தடைசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. 2005ம் ஆண்டளவில் தமிழ் அரசு ஒன்று வடக்கில் நிறுவப்பட்ட பின்னர் இலங்கை அரசியல் ரீதியாக பிளவுபட்ட ஒரு நாடாக இருப்பதை காட்டுவதாக இந்தப் படம் அமைந்ததாக அதன் தயாரிப்பாளர் கூறுகிறார். அவர் சொன்னர்:

'(பாதுகாப்பு அதிகாரிகள்) எமக்கு மிகவும் அமைதியான மொழியில் எழுதிய கடிதத்தில் அந்தப் படம் அரசியல் ரீதியாக ஆபத்தானது என்று தெரிவித்திருந்தார்கள். நாடு பிரிந்தபின் வடக்கு நன்றாக வளர்ந்து வரும் போது தாம் போக்கிடமின்றி தவிப்பதாக தெற்கில் உள்ளவர்கள் உணர்கிறார்கள். இதனால் அவர்கள் தம்மை ஆட்சி செய்யும் பாரம்பரிய கட்சிகளின் மீதும் அவர்களது பொய் வாக்குறுதிகள் மீதும் அதிருப்திப்பட்டு ஒரு மூன்றாவது அணியை எதிர்நோக்குகிறார்கள்."

இராணுவத்தினது ஆதரவும் ஒத்துழைப்பும் அதன் தளபாடங்களும் இன்றி இப்படம் தயாரிக்கப்பட முடியாது. இத்தகைய ஒரு நடவடிக்கையானது பாதுகாப்பு அதிகாரிகள், ஒரு கலாரீதியான வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் மீது மேற்கொண்ட தேவையற்ற ஒரு தலையீடாகும்.

தமிழில்: அருண்



புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் இருந்து இடைக்கிடை நல்ல பல தொகுப்புகள் வெளிவருகின்றன. இதில் பிரான்ஸிலிருக்கும் சபாலிங்கம் நண்பர்கள் வட்டத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் சபாலிங்கம் நினைவு மலரான "தோற்றுத்தான் போவோமா?" இதழ் அண்மையில் கிடைக்கப் பெற்றது.

தமிழ் மக்களின் தற்கால உயிர்ப்பின்றிய மோசமான அரசியல் நிலைமையையிட்டு அனுதாபப்படும் இதழின் முன்னுரை "... அன்றாடக் கொடூர நிகழ்வுகளும் சர்வசாதாரணமாகிப் போகும் வாழ்க்கைச் சூழலில், சபாலிங்கமும் - சபாலிங்கத்தின் கொலையும் மறக்கப்பட்டு, மறைக்கப்பட்டு போய்விடுமோ என்ற பயநிழல் எம் மத்தியில் விழத்தான் செய்கிறது. ஒரு மனிதனுடைய குறைந்தபட்ச விருப்பமும் - உயர்ந்த பட்ச உரிமையும் அவனுடைய உயிர் வாழ்தலாகும். அந்த விருப்பும் உரிமையும் ஆட்டம் காணும் ஒரு நிலையை எம்மினத்திடையே மிக மலிவாக விதைத்த காரணிகளை ஆரம்பத்திலேயே தட்டிக் கேட்காது, சிலநேரங்களில் தட்டிக்-கொடுத்தும், பல சந்தர்ப்பங்களில் கைகட்டி நின்றும் முடிவில் ஒன்றும் செய்யமுடியாத நிலையில் மௌனமாகவிருந்த மொத்த இனமும் தாம் செய்த பாவத்துக்கு சிலுவைகளைச் சுமந்தே ஆகவேண்டும்..." என்றும்,

"...அராஜகம், வன்முறை, மனித நேய மறுப்பு என்றவுடன் எல்லோர் மனங்களிலும் ஈழவிடுதலை இயக்கங்கள் தோன்றி பயமுறுத்தும் சூழ்நிலையை ஏற்படுத்திய கடந்தகால கசப்பான நிகழ்வுகளைப் பற்றி அனைவரும் சிந்திக்க கடமைப்பட்டுள்-ளோம். புகலிட நாடுகளில் எழுத்துப் பேச்சு சுதந்திரத்திற்கு விடுக்கப்பட்ட, விடுக் கப்பட்டுக் கொண்டிருக்கும் சவாலை நாம் மறுப்பதற்கில்லை. கனடாவில் தேடல் நூலகம் எரிக்கப்பட்டதும், பாரிஸில் ஈழநாடு அலுவலகம் கொளுத்தப்பட்டதும் மிகப்பெரிய வன்முறைகளாகும். ஆனால் அவைகளுக்கு அப்பால் நமக்கு நம்பிக்கையூட்டும் பேனாக்கள் இன்னும் இருந்து கொண்டு தான் இருக்கிறது..."

என்றும் குறிப்பிட்டுக் கொண்டு வரும் இதழின் முன்னுரை எமது மக்களின் வரலாற்றுத் தவறுகளையும், தேவையற்ற மௌனத்தையும் விட்டு நம்பிக்கையை முன்தள்ளிக் கொணர்கின்றது.

நினைவு மலராக வந்தாலும் பல தரமான ஆக்கங்களைத் தன்னோடு கொண்டு வந்திருக்கின்றது. பொதுவான கண்ணோட்டத்தில் எல்லா ஆக்கங்களுமே தமிழர் போராட்டத்தில் உட் படுகொலை-களையும், மாற்றுக்கருத்து மறுப்புக்களையும் பிரதிபலிப்பதாயும், பெண்களுக்கெதிரான அடக்குமுறை பற்றிப் பேசுவதாயும், மனித அவலங்கள் மீது பயணிப்பதாயும் உள்ளது. நல்ல பல மொழிபெயர்ப்பு இலக்கியங்-களும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

புஸ்பராஜாவின் கவிதை சொல்லிச் செல்வதைப் போல்,

..............

நாம் அறிவோம்
கோணேஸ்வரியும், கிருஷாந்தியும்
இன்னும் பல
துவசம் செய்யப்பட்ட
ஆத்மாக்களையும்
முன்னைய தொடர்கதை, பின்னைய
தொடரும் கதை
வெறிக்கு எம் உயிர்மட்டுமல்ல,
சதையும்தான்
நியாயம் மறுக்கப்பட்டு,
மறைக்கப்பட்ட மண்ணில்
ஒடுக்குமுறை வெறியரிடம் மனிதமும்
மண்ணாங்கட்டியும்

0000000

அண்மையில் அறிந்தோம் -
வெட்கினோம்
முன்றலில் நிறுத்தி
தீர்த்துக் கட்டினர் இருவரை
துரோகிகள் என
நியாயப்படுத்தினர்
கைகட்டி, கூட்டமாய் நின்று
வேடிக்கை பார்த்தது மனிதர் கூட்டம்.
தட்டிக் கேட்க, பணிந்து கேட்க
யாருமில்லை.
வெட்கி நின்றது கிழக்கு மண்
......"

என்று வக்கற்றுப் போன எமது நிலையை, நம்பிக்கை தரும் சில எழுத்துக்களூடாக வெளிப்படுத்துகிறது தோற்றுத் தான் போவோமா சஞ்சிகை.

வாழ்வு நகரலும், வலுக்கட்டாயமாக நகர்த்தப்படலும் என்பது எமது இருப்பாகிப் போய்விட்ட நிலையில், தமிழ் மக்களின் போராட்டமும் அதனுள் படுபயங்கரமாக உருவெடுத்த உட்படுகொலைகளும், மாற்றுக் கருத்துக்களை உயிரோடு கொன்று புதைத்தமையும், சர்வாதிகாரப் போக்கும் மக்களை உயிரை மட்டும் கையில் ஏந்திக் கொண்டோடும் நடைப் பிணங்களாகவும், எல்லாவற்றுக்குமான மௌனிகளாகவும் இட்டு வந்துள்ளது.

இவை எல்லாவற்றையும் உடைத்து ஆங்காங்கே சில நம்பிக்கைக்குரிய எழுத்துக்கள் வந்தாலும், அந்த எழுத்துக்களும் ஒன்றிணைவுக்கான முழக்கங்களும் ஒரு தொகுப்பினூடோ அல்லது சில இதழ்களினூடோ மறைந்து போவது ஏன்?

குறைந்த பட்சம் மாற்றுக் கருத்தை மதிக்கவும், அது கொலை செய்யப்படாமல் இருக்கவும் என்ற ஒரு ஒருங்கிணைவுக்கான வழியைக்கூட இந்த எழுத்துக்களால் ஏன் உருவாக்க முடியாமற் போயிற்று?

காலம் தடம் பதித்து சென்ற மிகக் கொடூரமான தடங்களைப் போல் ஒவ்வொரு மனிதரும் அல்லது சில மனிதர்களும் தனித்தனியாக போராடலும் அதன் சாவும், பின்பு அந்த சாவின் மீது எழும் அனுதாபத்துடன் கூடிய வேட்கையும் ..........! நாம் பரிதாபத்துக் குரியவர்களாய். இதுவே எம்மினத்தின் மீதான சாபமா....?

மாற்றுக் கருத்துக்களுக்கும் எதிர்ப்புக் குரல்களுக்குமான இடத்தை உருவாக்க முயல்வது மட்டுமல்ல, ஏதாவது ஒரு தடத்தில் நாம் ஒன்றிணைவதற்கான வெற்றிடமும் எம்முன் பெரிதாகவே உள்ளது.

அதற்கான வழிமுறை தான் என்ன?

தோற்றுப்போகாமல் வழி கண்டாக வேண்டும்.

-ரதி



மார்க்சீயமும் பெண்நிலைவாதமும்
மிக முற்போக்கான ஒரு கூட்டிணைவை நோக்கி...
ஆங்கில மூலம்: ஹெய்டி ஹார்ட்மன்
தமிழாக்கம்: மௌ. சித்திரலேகா
வெளியீடு:
சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
46/2, பழைய வாடி வீட்டு வீதி,
மட்டக்களப்பு.
விலை60/-

மார்க்சியப் பெண்ணியம் பற்றி தொடர்ந்து விவாதங்களை எழுப்பிய Heidi Hartmanன் The unhappy marriage between marxism and feminism: Towards a progressive union என்ற கட்டுரையின் மொழிபெயர்ப்பே இந்நூல். இந்நூல் குறித்த இக்கட்டுரையின் மூன்றாவது தமிழ் மொழி-பெயர்ப்பாக வந்திருப்பது இதன் முக்கியத்துவத்தை காட்டுகின்ற அதேநேரத்தில், மறுபறத்தில் மிகக் குறைந்த செயற்களமுடைய தமிழ்ப் பெண்ணியச் சூழலின் மண்ணுக்குள் முகம் புதைத்திருக்கிற சூழலையும் காட்டுகிறது. 1993ல் லண்டனிலிருந்து வெளிவந்த உயிர்ப்பில் இதன் முதலாவது மொழிபெயர்ப்பு வந்தது. பின்னர் 1998 செப்டெம்பர் முதற்பதிப்பாக வெ. கோவிந்தசாமியினதும், நடராஜ்ஜினதும் மொழி பெயர்ப்பிலும், தொகுப்பிலும் இதன் இரண்டாவது மொழிபெயர்ப்பு "மார்க்சியம் - பெண்ணியம்: உறவும், முரணும்" என்ற தலைப்பில் நூலுருவில் வந்தது. இந்நூல் தனியே அக்கட்டுரை-யின் மொழிபெயர்ப்பாக மட்டுமல்லா-மல் அக்கட்டுரைக்கு வந்த பல்வேறு எதிர்வினைகளின் தொகுப்புகளும் மொழிபெயர்க்கப்பட்டு அழகாக, விரிவாக வந்துள்ளது. ஆங்கிலத்தில் வந்த தொகுப்பை Lydia Seargent என்பவர் 1981ல் தொகுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவை போக தற்போது மௌ. சித்திரலேகாவால் இக்கட்டுரை மேற்குறித்த தலைப்பில் நூலாகியிருக்கிறது. தமிழில் பல்வேறு நூல்கள் வரவேண்டிய அவசிய-மிருக்கிற தமிழ்ச் சூழலில் அதுவும் குறிப்பாக தமிழ் பெண்ணியச் சூழலில் எமது மொழியாக்கத் திறனை, 'நல்லறிஞர் சாத்திரங்களை தமிழுக்குக் கொண்டு வரும்' ஆற்றலை வேறு வேறு விடயங்களில் செலுத்தினால் மிகப் பயனுள்ளதாய் இருக்கும். தமிழில் வரும் பெண்ணியம் சார்ந்த நூல்கள் பற்றிய அகலப்பார்வை இருந்திருந்தால் இதற்கான 'தேவையற்ற' உழைப்பை, செலவைத் தவிர்த்து இன்னுமொரு பெண்ணியம் சார்ந்த நூலை தமிழுக்குக் கொண்டு வந்திருக்கலாம். சூரியா வெளியீட்டகத்தார், தமிழுக்குத் தேவையான இன்னும் தமிழுக்கு வராதவைகளை தேடியாய்ந்து தமிழுக்குக் கொண்டு வரும் தங்கள் பணியைத் தொடர்வார்கள் என்று நம்புகிறோம்.

- சத்யா



இனப்பிரச்சினை
-ஓர் இஸ்லாமியக் கண்ணோட்டம்
எம்.ஏ.எம்.மன்ஸூர் (நளீமி)
வெளியீடு:
மீள்பார்வை பதிப்பகம்
63/5C ஸ்டேஸ் வீதி,
கொழும்பு - 14

'இனப்பிரச்சினை பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம் யாது என்ற கருத்து இங்கு எழுத முயற்சி செய்யப்-படுகிறது' என்ற நூலாசிரியரின் கூற்றுக்கேற்ப இனப்பிரச்சினை பற்றிய இஸ்லாமிய அணுகலை பல்வேறு சிறு தலைப்புகளூடே தந்துள்ளார்.


இஸ்லாமிய தனித்துவ சிந்தனைப் போக்கோடு ஒரு முற்போக்கான இதழாக வெளிவரும் 'மீள்பார்வை'யின் இவ்வெளியீடு முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி இனப்பிரச்சினை வரலாற்றில் முஸ்லிம்களுக்கென்று அவரவர் சிந்த-னைக்கேற்ப கருத்துத்தளம் எடுக்கும் பிறருக்கும் இந்நூல் பயன் தருவதாகும்.

-சத்யா

---

## சோ.சந்திரசேகரத்தின் மலையகக் கல்வி -சில சிந்தனைகள்

### நூல் அறிமுகம்




இலங்கையிலும், வெளிநாடுகளிலும் இருந்து வெளிவரும் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும், ஆங்-கிலத்திலும், தமிழிலும் இதுவரை 200க்கு மேற்பட்ட கல்வியியல் கட்டுரைகளை எழுதியுள்ள பேராசிரியர் சோ. சந்திரசேகரன் அவர்களது 12வது நூலாக "மலையகக் கல்வி சில சிந்தனைகள்" என்ற நூல் வெளிவந்துள்ளது.

இந்நூல் பின்வரும் 13 தலைப்புகளில் உள்ளடக்கங்களைக் கொண்டுள்ளது.

1. சுதந்திரத்தின் பின்னர் அரசியலும் மலையக மக்கள் வாழ்க்கை நிலைமைகளும்.
2. மலையகக் கல்வியின் வரலாற்றுப் பின்னணி.
3. மலையகக் கல்வி வளர்ச்சி பற்றிய ஆய்வுகள்.
4. உலகளாவிய கல்விச் செல்நெறிகளும் மலையகக் கல்வியும்.
5. மலையகத்தின் எதிர்காலக் கல்வி வாய்ப்புகள்.
6. 21ம் நூற்றாண்டை எதிர்நோக்கும் மலையகக் கல்வி.
7. மலையகக் கல்வி நிலையும் தேசியக் கல்வி முறையும்.
8. தேசியக் கல்வி ஆணைக்குழுக்களின் அணுமுறைகள்
9. மலையக மாணவர்களின் பரீட்சை செயலாற்றல்.
10. மலையக சமூகமும் உயர் கல்வியும்.
11. பல்கலைக்கழகக் கல்வியில் பின் தங்கியிருக்கும் மலையக சமூகம்.
12. 21ம் நூற்றாண்டில் மலையகப் பல்கலைக்கழகம்.
13. கல்விப் பிரச்சினைகளும் நியாயமான பராபட்சக் கொள்கையும்.

சிறுசிறு கட்டுரைகளாக அமைந்துள்ள இவ்வாக்கங்கள் மலையக மக்களது கல்வி சம்பந்தமான பிரச்சினைகளை பல கோணங்களிலிருந்து ஆராய்கிறது.


சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் பெருந்தோட்ட மக்கள் சமூக, பொருளாதார ரீதியில் ஒடுக்கப்பட்டமை, சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்தில் அவர்களின் குடியுரிமை, வாக்குரிமைகள் பறிக்கப்பட்டமை, இல-ங்கை - இந்திய ஒப்பந்தங்களால் வலுவிழக்கப்பட்டமை, இனக்-கலவரங்களால் பாதிக்கப்பட்டமை, பெருந்தோட்டப் பாடசாலைகளில் மிகவும் தரங்குறைந்த கல்விமுறை காரணமாக இன்றும் 40 வீதமானோர் எழுத்தறிவற்ற-வர்களாகக் காணப்படல், நகர்ப்புற எழுத்தறிவு வீதம் 89.1 ஆக இருக்க பெருந்தோட்ட மக்களது எழுத்தறிவு வீதம் 59.4ஆக உள்ளமை, கல்விச் சீர்திருத்தங்கள் எவையுமே தோட்டப்புற பாடசாலைகளை சென்றடையாமை, பாடசாலைக்கல்வி பயிலாதோர் 21.3 வீதமாக உள்ளமை. 6 மலையக மாவட்டங்களில் விஞ்ஞான உயர்நிலை வகுப்பு பாடசாலைகள் சிங்கள மொழிமூலம் 125 இருக்க தமிழ்ப் பாடசாலைகள் 9 மட்டுமே உள்ளமை. சுதந்திரமடைந்த 50 ஆண்டுகள் கடந்தும் கூட இன்னமும் ஆரம்பக்கல்வித் தகைமையைக் கூட அவர்கள் முழுமையாகப் பெறாமை. 10 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்ட சமூகம் தனக்கென ஓர் உயர் கல்வி அமைப்பை கொண்டிராமை, இலங்கையின் எழுத்தறிவு வீதம் 86ஆக இருக்க எழுத்தறிவு அற்ற 14 வீதத்தினரில் பெருந்தோட்டப் பிள்ளைகளே அதிகமாக உள்ளமை. பாடசாலை இடைவிலகல் 20 வீதமாக உள்ளமை. நாட்டிலுள்ள 10 இலட்சம் பிள்ளைத் தொழிலாளர்களில் பெருந்தோட்டப் பிள்ளைகளே அதிகமாக உள்ளமை. 32,000 பல்கலைக்கழக மாணவர்களில் 200 பேருக்குட்-பட்டவர்களே மலையக மாணவர்களாக உள்ளமை. க.பொ.த. உ/த பரீட்சைக்குத் தோற்றும் 160,000 மாணவர்களில் 600பேரே மலையக மாணவராக உள்ளமை, உயர்கல்வித் தகைமைகள் கோரும் பதவிகளில் மலையகத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு சிலரே உள்ளமை, ஆசிரிய மாணவர் விகிதம் தேசிய ரீதியில் 21.1 என்றிருக்க பெருந் தோட்டப் பகுதியில் அது 64.1 என்ற விகிதத்தில் இருத்தல், பெருந்தோட்டப் பெண்களில் 52 சதவீதமானோரே எழுத்தறிவுடையோராயிருத்தல், தரப்படுத்தல், மாவட்ட ரீதியான அனுமதிகளாலும் மலையக மாணவர் நன்மைபெற முடியாமை போன்ற ஏராளமான வியத்தகு விபரங்களை இந்நூல் வாயிலாக நாம் தெரிந்து கொள்-ளக்கூடியதாக உள்ளது. இந்நூல் மலையகத்தின் கல்வி நிலையை மட்டுமல்ல அம்மக்களின் வரலாற்றினை முழுமையாக அறியத்தக்க ஆவணம் போல் அமைந்துள்ளது. மலையக மக்களின் பின் தங்கிய கல்வி நிலையை மட்டுமல்ல அதன் மேம்பாட்டுக்கான வழிமுறைகளையும் கூறுகிறார். ஒரு ஜனநாயக அமைப்பில் பிற்பட்டோரை உயர்த்திவிட விசேட திட்டங்கள் அவசியம் என்பதையும், மலையகத்துக்கான ஒரு பல்கலைக்கழகம் தேவை என்பதற்கான தர்க்க ரீதியான காரணங்களையும் முன்வைக்கிறார்.

கடந்த காலங்களில் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகள், கல்வியியல் கல்லூரிகள், தேசியக் கல்வி நிறுவனம், பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பயிலும் ஆசிரிய மாணவர்கள் கற்கக் கூடிய பல கல்வியியல் தொடர்பான நூல்களை எழுதிய பேராசிரியர் அவர்கள், இந்நூல் மூலம் மலையகம் சார்ந்த ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அதிகாரிகள், அரசியல்வாதிகள், தொழிற்சங்கவாதிகள், கல்வித்துறைச் சார்ந்த ஆய்வாளர்கள், சமூகவியலாளர்கள் ஆகிய அனைத்துப் பிரிவினரும் பயன்பெறும் வகையிலே இந்-நூலினை ஆக்கித்தந்துள்ளமை பெரிதும் வரவேற்கத்தக்கதாகும்.

சுருங்கக் கூறின் பேராசிரியர் அவர்-கள் நீண்டகாலமாக பல்கலைக்கழகத்தில் கல்வித்துறையில் விரிவுரையாற்றிய அனுபவங்களையும், அத்துறைச் சார்ந்த ஆய்வுகளை மேற்கொண்டு பல நூல்களை வெளியிட்ட அனுபவங்களையும் கொண்டு இந்நூலில் மலையக மக்களின் கல்விநிலை, அதன் வரலாற்றுப் பின்னணி, கல்விப் பிரச்சினைகள், அவற்றைத் தீர்த்து வைக்கப் பயன்படக் கூடிய ஆலோசனைகள், சிந்தனைகள் என்பவை பற்றிய கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல் எனலாம்.

வின்னேஸ் ஸ்தாபனத்தால் அழகிய முறையிலே அச்சிட்டு வெளியிடப்-பட்டுள்ள இந்நூல் சகல தரப்பட்டரதும் வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

வே. சண்முகராசா.



# வவுனியா வைத்தியசாலை: இதற்கு யார் பொறுப்பு?

எனது சொந்த இடம் இல. 819, கட்சன் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி. நான் தற்போது யாழ். பல்கலைக்கழகத்தில் இறுதிவருட பொருளியல் சிறப்புக்கலை மாணவனாக கல்விக் கற்றுக் கொண்டிருக்கிறேன். எனது பெற்றோர் மேற்குறித்த முகவரியில் உள்ளனர். நீண்டகாலமாக எனது அம்மம்மா திருநாவுக்கரசு இராசுகிளி (63) என்பவரும் எம்முடன் வசித்து வந்தார். கடந்த ஜனவரி மாதம் அவர் திடீரென சுகவீனமடைந்து கிளி. அக்கரையான் அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். பெப்ரவரி மாதம் 2ம் திகதி அக்கராயன் வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக வவுனியா ஆதார வைத்தியசாலைக்கு செஞ்சிலுவைச் சங்க அம்புலன்ஸ் வாகனத்தில் அனுப்பியுள்ளனர். பெப்.08.ம் திகதி குறிப்பிட்ட இவ்விடயம் தொடர்பாக எனக்கு எழுதிய மடல் பெப்.22ம் திகதி கிடைத்தது. நான் உடனடியாக வவுனியா ஆதார வைத்தியசாலைக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு எனது நண்பனிடம் கேட்க எண்ண அவர் அங்கு இல்லை. அச்சந்தர்ப்பத்தில் இன்னொரு பெண் தாதி தாம் பார்த்துச் சொல்வதாகவும் மாலை தொலைபேசி எடுக்கும் படியும் சொன்னார். மீண்டும் மாலை தொலைபேசி எடுத்துக்கேட்டபோது குறித்த நபர் சிகிச்சை முடித்துக் கொண்டு பெப்.08இல் திரும்பவும் அக்கராயன் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுவிட்டார் எனத் தகவல் தந்தார்கள். இதனால் நான் இவ்விடயம் தொடர்பாக கவனம் எடுக்கவில்லை. பின்பு ஏப்ரல் 1ம் திகதி வன்னிச் சென்றேன். வன்னி சென்று வீட்டிற்குப் போனபோது அம்மம்மா அங்கு இல்லை. வீட்டார் என்னிடம் தகவல் கேட்டனர். நான் மேற்படி விடயம் தொடர்பாக வவுனியா வைத்தியசாலைத் தாதி சொன்ன பதிலைச் சொல்லிவிட்டு உடன் அக்கராயன் வைத்தியசாலையுடன் தொடர்பு கொண்டேன். அவர்கள் டிக்கட்டுக்களைப் பரிசீலனை செய்து பார்த்து நோயாளி வவுனியா அனுப்பப்பட்டிருக்கிறார். திரும்பி வரவும் இல்லை. எதுவித தகவலும் இல்லை எனக்கூறினர். இது ஏப்ரல் 14-15ம் திகதிகளில் ஏற்பட்டது. ஏப்ரல் 16ம் திகதியுடன் வவுனியா உயிலங்குளம் ஊடான பாதை மூடப்பட்டதனால் நான் குருநகர் ஊடாக யாழ் வந்து ஏப்.29ம் திகதி குருநகர் முகாமில் இருந்து விடுதலை ஆகி பின்பு மே 01 இல் மீண்டும் வவுனியா வைத்தியசாலையில் தாதியாக பணிபுரியும் நண்பனிடம் கேட்டபோது அவர் முழுவிபரத்தையும் பெற்றுப் பார்த்துச் சொல்வதாகச் சொன்னார். மறுநாள் அவர் பின்வருமாறு தகவல் தந்தார். பெப்.02இல் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் பெப்.04இல் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார் என்றும், மீண்டும் அங்கிருந்து பெப்.08இல் வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு அன்றைய தினமே அங்கு இறந்துவிட்டார் என்றும் பதிவேட்டில் பதிவு உள்ளதாக கூறினார். இது குறித்து யாது செய்யலாம், ஏன் இவ்வளவு காலமும் எமக்கு ஒருவித தகவலும் தரவில்லை. உடலை என்ன செய்திருப்பார்கள் என வினவ அவர் டி.எம்.ஓவிடம் இது பற்றிக் கதைக்குமாறு கூறினார். நான் இது பற்றி டி.எம்.ஓவிடம் மே 06இல் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டபோது பெண்ணாக இருந்த வைத்திய அதிகாரி என்னிடமிருந்து இறந்தவரின் தவகலைப் பெற்றுவிட்டு தான் அறிந்து மறுநாள் கூறுவதாகச் சொன்னார். மறுநாள் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது அந்தக் காலப்பகுதியில் லீவில் நின்றதாகவும், டொக்டர் மகேந்திரம் தான் பொறுப்பாக இருந்தார் எனவும் பொறுப்பில்லாத பதில்களைத் தந்தார். அதனால் ஆத்திரத்துடன் எனக்கு நீங்கள் என்ன சாட்டும் சொல்ல முடியாது. இப்படி ஒரு சம்பவம் நடந்து 3 மாதகாலமாக எதுவித தகவலும் அனுப்பாமல் விட்டது எவ்வளவு தவறு எனக்கதைத்த போது அவர் தொலைபேசி தொடர்பைத் துண்டித்து விட்டார். பெப்.08இல் பக்ஸ் செய்தி ஒன்றை அவருக்கு அனுப்பி வைத்தேன். இப்பக்ஸ் செய்திக்கு மாவட்ட வைத்திய அதிகாரி எதுவித பதிலும் தரவில்லை.

இவ்வாறான பொறுப்புணர்வற்ற செயற்பாடுகளுக்கு யார் பொறுப்பு? வவுனியா மாவட்ட வைத்திய அதிகாரி அல்லவா பதில் சொல்ல வேண்டியவர். நோயாளியின் பதிவேட்டில் சகல முகவரியும் தெளிவாக இருந்தும் எதுவித பதிலும் மூன்று மாதகாலமாகியும் அனுப்பாது விட்டது மகா தவறு அல்லவா?

நா. உதயகுமார்.
யாழ். பல்கலைக்கழகம்

# 'தலாக்'கிற்கும் தலைப்பிற்கும் என்ன சம்பந்தம்?

சிங்கப்பூர் எழுத்தாளரான இளங்கோவன் அவர்களுடைய "தலாக்" நாடகத்தை கடந்த மூன்று இதழ்களில் சரிநிகரில் வாசிக்கக் கிடைத்தது.

இன்றைய இலக்கிய உலகில் இஸ்லாம் பற்றி அதன் கோட்பாடுகள் பற்றி பலர் எழுதத் தலைப்பட்டுள்ளனர். இஸ்லாம் பற்றி முரண்பாடாக விரோதமாக எழுதுவோரை விட்டு, இஸ்லாம் கோட்பாடுகளை கண்மூடித்தனமாக நியாயப்படுத்துவோர் இவ்விரு வகையினருள்ளும் இஸ்லாமியக் கோட்பாடுகள், சமூகப் பின்னணி, பழக்க வழக்கங்கள் பற்றி எதுவுமே அறியாத நிலையில் எழுதுவோர் தொகை கணிசமான அளவு உள்ளதென்பது ஓர் உண்மை. இளங்கோ அவர்களையும், இவ்வகையினருள் ஒருவராகவே கணிக்க வேண்டியுள்ளது.

இஸ்லாமிய ஷரீ அத்தில் (சட்டவாக்கத்தில்) "தலாக்" என்ற விவாக விடுதலைக்கு ஆழ்ந்த அடர்த்தியான பொருட்செறிவும், பின்புலமும், ஏன் எதிர்ப்புணர்வும் உண்டு" என்பதை இளங்கோவன் அறிந்திராததன் விளைவே இந்நாடகத்தின் பெயரிடலுக்கு காரணமாகும்.

ஏனெனில், இந்நாடகத்தின் கரு, கதாபாத்திரங்கள், சம்பவங்கள் எவற்றுக்கும் "தலாக்"கிற்கும் எதுவிதமான தொடர்பும் கிடையாது. இந்நாடகத்தில் தலாக் என்பது ஓர் ஆணின் அதிகார துஷ்பிரயோகமாகவும், பெண்ணின் கழிவிரக்கம், பயம் பற்றிய உணர்வாகவும், சுற்றத்தாரின் அச்சுறுத்தல் ஆயுதமாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளமை வியப்புக்கும், கேலிக்கும் உரிய ஓர் அம்சமாகவே உள்ளது.

இந்நாடகத்தன் பிரதான ஆண் பாத்திரமான சம்சுதீனை (சாம்) ஒரு சாமுவேல் அல்லது சுந்தரலிங்கம் அல்லது சமரநாயகா என்பதாக சித்திரித்துக்கொண்டால் நாடகத்தின் சுருக்கம் இதுதான்.

"சாமுவேல்/சுந்தரலிங்கம்/சமரநாயகா என்பவன் ஒரு பெண்ணை ஏமாற்றித் திருமணம் செய்கிறான். அவன் ஏற்கெனவே வேற்று மதப் பெண்ணொருத்தியுடன் வாழ்ந்து கொண்டு மிருக்கிறான். தட்டிக்கேட்ட புது மனைவியை கொடுமைப்படுத்துகிறான். வல்லுறவு கொள்கிறான். சிசுவைக் கலைக்கிறான். இந்நிலையில் ஒரு பெண் அனுபவிக்கும் பல்வேறுபட்ட மனோ நிலையின் வடிவமே நிஷா/ நித்யா/ நிலுகா" என்பதைத் தவிர வேறு என்ன...?

இதற்கு ஏன் தலாக் என்ற நாமம்? ஏன் சம்சுதீனும்? நிஷாவும்?

விதி, ரெட்டைவாலு குருவி, வேட தாரி என்று... அல்லது பிரபல நாவலாக வெளிவந்து திரைப்படமாகிய "47 நாட்கள்" என்ற பெயர் கனகச்சிதமாக அமையுமே...!? விதி திரைப்படத்து ராஜா - ராதா ஜோடியும் பொருத்தம் தானே...!

"தலாக்" என்று பெயரிட்டதன் காரணம் கதாபாத்திரங்கள் முஸ்லிம்கள் என்ற ஒரே காரணத்துக்காக மட்டுமா? சமூகத்தில் இந்தப் பண்புகள் கொண்ட இந்து, பௌத்த, கிறிஸ்தவ மனிதர்கள் எங்குமே, எவருமே இல்லையா? பின்னர் ஏன் தலாக் என்ற இஸ்லாமிய ஷரீஅத் பெயர் ஒன்றுமில்லை... இளங்கோவன் அவர்களது அறியாமை தவிர!

மறுபடியும் சொன்னால், "இஸ்லாமிய ஷரீஅத்தில் தலாக் என்பதற்கு ஆழந்த அடர்த்தியான பொருட்செறிவும், பின்புலமும், எதிர்ப்புணர்வும் உண்டு". இதுபற்றி விவாதிப்பதற்கு நீண்ட இடம் தேவை. சரிநிகர் இடம் தரின் ஓர் ஆய்வுக்கட்டுரையே சமர்ப்பிக்கலாம்.

இந்நாடகத்தில் வரும் சில சம்பவங்கள் இஸ்லாம் பெண்ணுரிமையை மறுப்பது போன்ற ஒரு பிரமையை ஏற்படுத்தக் கூடியனவாயிருப்பினும் அவை தொடர்பான விவாதத்தை இங்கு எடுத்துக் கொள்ளவில்லை. இந்நாடகத்தின் தலைப்பிற்கும் கருப்பொருளுக்கும் தொடர்பில்லை என்பதை விளக்குவதே இப்பத்தியின் நோக்கமாகும்.

ரா. அப்துல்லாஹ் அஸ்ஸாம்,
புத்தளம்.

# உலக கணினி...

அல்லாவிடின் அவர்களது தளத்தில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டும். அவ்வாறு இறக்குமதி செய்கையில் கால, பண விரயங்கள் ஏற்படுகின்றன. சில தளங்களில் தமிழ்ச் சொற்களை பட உருக்களாக (graphic files) மாற்றி வெளியிடுகின்றனர். இது காலதாமத்தை ஏற்படுத்துகின்றது. உதாணமாக, 'ஈழம்' வெப்தளத்தில் இம்முறையே கடைப்பிடிக்கப் படுகின்றது.

இச்சாவிப்பலகைப் பிரச்சினையானது 'இன்ரநெற்' உலகில் தமிழுக்கு மாபெரும் பிரச்சினையாக உள்ளது. ஆங்கிலத்திற்கு இவ்வாறான பிரச்சினைகள் எழுவதில்லை. ஏனெனில், ஆங்கிலத்தில் ஒரேயொரு சாவிப்பலகை முறையே (ASCII) உலகமெங்கும் புழக்கத்தில் உள்ளது. தமிழிலும் TSCII (Tamil Standard Code for Information Interchange) என்ற சாவிப்பலகை முறைமையை ஏற்படுத்தும் முயற்சிகள் நடைபெறுகின்றன. இது எவ்வளவு தூரம் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் என்பது குறித்து எதிர்வு கூற முடியாத நிலை உள்ளது.

தமிழ் 'இன்ரநெற்' உலகில் தமிழர்களின் சர்வதேச மயப்படுத்தப்பட்ட தளம் என்ற ரீதியில் www.tamilweb.com இனைக் குறிப்பிடமுடியும். இது தமிழர்கள் வசிக்கும் ஒவ்வொரு நாட்டிலும் தனது பிரதிநிதிகளைக் கொண்டுள்ளது. அதன் மூலம் அந்நாட்டுத் தகவல்களை அது பெற்றுக்கொள்கின்றது. இத்தளத்தில் தேனீ - தேடல் இயந்திரம், சிந்தனைத் தடாகம் - 'வெப்' சஞ்சிகை, IID - தமிழர்கள் விபரப்புத்தகம் போன்றவற்றைக் குறிப்பிட்டுக் கூற முடியும். இதில் தேனீ என்பது தமிழ், தமிழர் சம்பந்தப்பட்ட ஒரு தேடல் இயந்திரம் ஆகும். சினிமா - படப்பாடல்கள், கல்வி, பொழுதுபோக்கு, வரலாறு, சோதிடம், மொழி, இலக்கியம், தொடர்பு ஊடகம், சாத்திர சங்கீதம், இந்தியா - தமிழ் நாடு, இலங்கை, ஈழம், சிங்கப்பூர், மலேசியா, இதர தமிழர் வசிக்கும் நாடுகள், ஸ்தாபனங்கள், இடங்கள், அரசியல், சமூக பண்பாட்டு, மென்பொருட்கள், விளையாட்டு என்ற வகைப்படுத்தல்களின் கீழ் ஏராளமான இணைப்பு முகவரிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

கல்வி என்ற தமிழ்க்கல்வி சம்பந்தப்பட்ட மென்பொருள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவற்றுள் ஒன்று ஆகும். இது குப்புச்சாமி என்பரால் உருவாக்கப்பட்டது. இதன் நோக்கம் தமிழை ஆங்கிலத்திற்கூடாக கற்றல் என்பதாகும். இதில் தமிழ் முதல் எழுத்துக்களை எவ்வாறு எழுதுதல் என்பதனை அசைவியக்கம் மூலம் காட்டுதல், தமிழில் 1-100 வரையான எண்களை எவ்வாறு எண்ணுதல், அவற்றின் தர்க்க கட்டமைப்பு (Logic Structure) ஆங்கில எழுத்துக்களில் தமிழ்ச் சொற்களின் ஒலி உச்சரிப்பு, தமிழ் சொற்களை விளையாட்டாகக் கற்றல் (games) என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. முரசு அஞ்சல் என்னும் மென்பொருள் தமிழில் இலத்திரனியற் தபால் அனுப்புதல், பெறுதல், ஒரு சாவிப்பலகை முறையில் உள்ளவற்றை இன்னொரு சாவிப்பலகை முறைக்கு மாற்றுதல், எழுத்துக்களை தட்டச்சு செய்தல் போன்ற தேவைகட்குப் பயன்படுத்தப்படுகின்றது. இதனை (www.murasu.com) என்ற முகவரியில் இருந்து இலவசமாக இறக்குமதி செய்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

தமிழில் வாழ்த்து அட்டைகள், தமிழ் பாடல்கள், புரட்சிப் பாடல்கள் என்பவற்றை www.tamilworld.com இலிருந்து பெறமுடியும். இத்தளத்திலிருந்து பாடல்களை இறக்குமதி செய்து எமது கணிணியில் கேட்க முடியும். சில தமிழ் வெப் தளங்கள் வெளிநாட்டில் ஒலிபரப்பப்படும் வானொலி நிகழ்ச்சிகளை இன்ரநெற்றின் ஊடாக ஒலிபரப்புகின்றன. பாடசாலைகள் என்ற ரீதியில் பல பாடசாலைகளின் பழைய மாணவர்கள் தங்கள் பாடசாலை சார்பான தளங்களை உருவாக்கி உள்ளனர். உதாரணமாக யாழ் இந்துக்கல்லூரி (members.tripod.com/k-Devan), ஹாட்லிக் கல்லூரி (www.hartleycollege.com) என்பவற்றைக் குறிப்பிடலாம். மற்றும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய வெப்தளங்களாக www.vanavil.com www.tamilnadu.com, www.tamilcanadian.com, www.tamilmurasu.com, www.tamilnet.com, www.chennaionline.com, www.eelamweb.com. என்ற தனித்து இயங்கும் 'வெப்' தளங்களையும், ஏராளமான வேறு 'வெப்' தளங்களில் பகுதியாக இயங்கும் தளங்களையும் குறிப்பிடலாம்.

இலங்கைத்தீவில் இருந்தான இலக்கிய முயற்சிகள் 'இன்ரநெற்'றில் இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு அரிதாகவே உள்ளன. இவற்றை நிவர்த்தி செய்து எம் தேசத்து இலக்கியங்களையும் பன்னாட்டவரின் பார்வைக்குக் கொண்டு வரவேண்டியது எங்களது கடமையாகும் மற்றும் எமது பாரம்பரிய கலைகள், இலக்கியங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டியதும், ஆவணப்படுத்த வேண்டியதும் எங்களது முக்கிய பொறுப்பாகும். இக்கடமையினை உணர்ந்து எமது தேசத்தின் இலக்கியங்களை, கலைகளைப் பாதுகாக்க கலை இலக்கியவாதிகள், விமர்சகர்களுடன் இணைந்து பல்கலைக்கழகங்கள் முன்வரவேண்டும் என்பதும் அவற்றை 'இன்ரநெற்' என்ற வலுமிக்க சாதனத்தின் மூலம் யாவரையும் அடைய வைக்க வேண்டும் என்பதும் எல்லோரதும் அவா ஆகும். அத்துடன் இன்ரநெற்றின் பயன்பாடுகளை அனுபவிக்க நாமும் அவற்றில் நுழைந்து அடுத்த பொற்காலத்தை எதிர் கொள்வோம்.

நன்றி: இளங்கதிர்

# நமது கலை......

இந்த நிலை, இலக்கிய விமர்சனத்திற்கும் சேர்த்து இன்று ஏற்பட்டிருக்கிறது. இலக்கியம் விமர்சனத்துக்கு உட்படாத ஒன்றாக இயங்கிக் கொண்டிருக்கிறது. இதுதான் இன்றைய யதார்த்தம். ஆபத்தான யதார்த்தம். போலிப் படைப்புகள், போலச் செய்யும் படைப்புக்கள் என்று சிந்தனைத் தேடலோ, ஆழமோ, வீச்சோ அற்ற விதத்தில் படைப்புகள் உருவாகும் ஒரு நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஈழத்துக் கவிதைகளின் உலகச் சிறப்புப் பற்றி, அவை எப்படி தமிழ் நாட்டை தூக்கிவீசிவிட்டு வீறுநடை போட்டுக் கொண்டிருக்கின்றன என்று நாம் மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசிக்கொண்டிருக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறோம். பெருங்காயம் இருந்த டப்பா என்றாலும் எவ்வளவு காலத்துக்குத் தான் மணம் இருக்கும்?

ஆக, இன்றைய தேவை உரமும் வீச்சுமுள்ள ஒரு விமர்சனம். எமது படைப்புக்களையும் படைப்பாற்றலையும் முகத்தில் அறைந்த மாதிரி விமர்சிக்கின்ற நக்கீர விமர்சனம் தேவை.

அல்லது மு.பொ. முதல் சோலைக்கிளி வரை இன்று தேங்கிப் போய்கிடக்கும் பல படைப்பாளிகளின் கைகளில் புதுரத்தம் பாய்ச்ச வேறு வழியில்லை. திடீரென்று வரும் மின்னல்போல் ஒரு சில படைப்பாளிகள் தோன்றியபோதும் அவை மின்னலாகவே இருந்து விடுகின்றன. மின்னல்களை அல்ல சூரியப் பேராளிகளை உருவாக்கும் நல்ல விமர்சனத்தின் தேவையை உணர்ந்து எமது இலக்கிய சூழல் துணிவு கொள்ளப் போவது எப்போ என்பதே இன்றைய முக்கிய கேள்வி!

# கனடா மாநாடு...

குறுக்கிட்டு வேறு கடும்போக்கான (Radical) மாற்று வழியொன்று இருப்பதாகக் காட்டுவது மட்டுமேயாகும். இடதுசாரிகள் பலமடைவதை நிறுத்தச் சம்பிகவுக்கோ, முதலாளித்துவவாதிகளுக்கோ, ஏகாதிபத்தியவாதிகளுக்கோ, இந்திய முதலாளித்துவவாதிகளுக்கோ எதிர்காலத்தில் ஆதரவு அளிக்க வேண்டியிருக்குமென்றால் அது நியாயமான தர்க்கமாகும். ஆனாலும், அவ்வளவு தூரத்திற்கு நிலைமை வளர்ச்சி பெற்றுள்ளதாக எனக்குத் தெரியவில்லை.

எவ்வாறெனினும், இந்த முதலாளித்துவ ஜனநாயக அமைப்புக் கூட திரும்பவும் பெரும் சிக்கலுக்குட்படும் பயங்கரமான யுகமொன்றிற்குள் தள்ளப்படுவதாகவே எல்லா விடயங்களிலிருந்தும் புலப்படுகின்றது. வடக்கினதும் - தெற்கினதும் இடதுசாரி அணிகளின் ஒன்று சேர்க்கையினால் மட்டுமே இதிலிருந்து நாட்டை மீட்டெடுக்க முடியும். ஈழம் தனி நாடொன்றாக உருவாவதற்கும், சம்பிகவின் மரணப் பொறிக்கு எதிராகவும் இடதுசாரிகள் மாற்றுவழி ஒன்றைக் கட்டியெழுப்ப முடியுமென்றே நான் நினைக்கின்றேன்.

விக்ரமபாகு கருணாரத்ன.
நன்றி : லக்பிம - 19990606.

தமிழில் : சி. செ. ராஜா.

Registered as a newspaper in Sri Lanka


# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

*"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"*

- பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.

தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.


## தணிக்கைக்கு ஓராண்டு! அரசுக்குப் பாராட்டு!!

செய்தித் தணிக்கை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டு ஓராண்டு ஓடிவிட்டது.

கடந்த வருடம் ஜூன் மாதம் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட இந்தச் செய்தித் தணிக்கை, இன்னமும் தொடர்ந்து அமுலில் இருந்து வருகிறது.

மக்களுக்கு, உண்மையை அறிவதற்காக உள்ள அடிப்படை உரிமையை மறுதலிக்கும் இந்தத் தணிக்கை, அரசாங்கம் தான் நினைத்தவற்றை, தனக்கு சாதகமானவற்றை மட்டுமே மக்களுக்கு தெரிவிக்கும் நோக்கிற்காக தொடர்ந்து அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

யுத்தம், யுத்த அழிவுகள் போன்ற விபரங்கள் தொடர்பான உண்மைத் தகவல்கள் எவையும் மக்களுக்குச் செல்லாமல் இருப்பதற்காக கொண்டு வரப்பட்ட இந்தத் தணிக்கை முறை, யுத்தத்தினால் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப்படும் மக்களை மட்டுமல்லாமல் அதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஆயுதப்படையினரையும் கூடப் பாதித்து வருகிறது.

கொல்லப்பட்ட படையினரின் குடும்பங்களுக்கு அவர்கள் பற்றிய விபரங்கள் அறிவிக்கப்படாதது முதல், படையினருக்கு கூட அவர்கள் தமது உயிரைக் கொடுத்து நடாத்தும் யுத்தம் எந்தளவுக்கு வெற்றிகரமாக நடாத்தப்படுகிறது என்பது கூறப்படாமலேயே இருக்கிறது.

இந்த அரசாங்கம் பதவிக்கு வருவதற்காக மக்கள் முன்வைத்த பல்வேறு கவர்ச்சித் திட்டங்களில் ஒன்று கருத்து வெளிப்பாட்டு சுதந்திர உரிமையும் வெளிப்படைத் தன்மையும் பற்றியதாகும். ஆனால், இன்றோ யுத்தம் பற்றியோ, அதன் விபரங்கள் பற்றியோ எல்லாத் தகவல்களையும் பாராளுமன்றத்தில் கூட தெரிவிக்க முடியாது என்று கூறுமளவுக்கு அதன் வெளிப்படைத் தன்மை வாக்குறுதி தூக்கி வீசப்பட்டு விட்டது. அடுத்தடுத்து பல தடவைகள் பாராளுமன்றத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பொய்யுரைத்தார் என்று எதிர்க்கட்சித் தலைவரே குற்றம் சாட்டியிருந்தார்.

தொடர்பு சாதனங்கள் ஒரு நாட்டின் ஜனநாயக வாழ்வுக்கு ஆற்றும் முக்கிய பங்களிப்பு, மக்கள் தாம் வாழும் சூழல் பற்றிய சகல உண்மைகளையும் அறிந்து கொள்ள உதவுவது தான். அப்போது தான் அந்த நாட்டில் ஜனநாயக ஆட்சி நிலவுவதற்கான தமது கடப்பாட்டை மக்களால் ஆற்ற முடியும்.

ஐ.தே.க. அரசாங்க காலத்தில் நடந்த அத்துமீறல்களை அணுவணுவாக மக்களுக்கு தொடர்பு சாதனங்கள், குறிப்பாக பத்திரிகைகள் அறிவித்தது தான் ஐ.தே.க அரசாங்கத்தினை வீழ்த்தி அம்மையார் அரசு ஆட்சிக்கு வர வழிவகுத்தது. அம்மையாரும் அவரது அடியாட்களும் கூறிக் கொள்வது போல் மக்கள் தமது ''ஜனநாயகக் கடமையைச் சரிவரச்'' செய்ய வழிவகுத்தது.

ஆனால், அதே மக்கள் இன்று தமது கடமையை சரிவரச் செய்யக்கூடாது என்று அதே அம்மையாரும் அவரது அடிவருடிகளும் நினைக்கிறார்கள். அதனால் தான் எந்த யுத்தத்திற்காக கோடிக்கணக்கான பணம் கொட்டப்பட்டு நாசமாக்கப்படுகிறது என்று கூறி, அதை மீதம் பிடித்து அழைத்துச் செல்ல சமாதானம் வேண்டும் என்று அன்று அம்மையார் கூறினாரோ, அதே யுத்தத்தை இன்றும் தீவிரமாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது அரசாங்கம்.

அதுவும் அது பற்றிய அனைத்து செய்திகளையும் தணிக்கை செய்து யுத்தம் அன்றாடக் கருமங்களில் ஒன்று போல மிகவும் சாதாரணமாகவே நடக்கிறது என்பது போன்ற ஒரு பிரமையை ஏற்படுத்தி வருகிறது அரசாங்கம்.

சர்வதேச வானொலி, இணையம், இலத்திரனில் கடிதம் போன்ற சாதனங்களூடாக உண்மைகள் இலங்கை மக்களுக்கு வெளியாகிக் கொண்டு தான் இருக்கின்றன என்ற போதும், இந்த நாட்டின் பொதுமக்களில் எத்தனை பேருக்குத் தான் இவற்றை பெற்றுக் கொள்ள முடியும்?

வடக்கிலேயும் கிழக்கிலேயும் புலிகள் மட்டுமே சாகிறார்கள். அங்குள்ள மக்களுக்கோ, அரச படைகளுக்கோ எந்த விதமான பெரிய பாதிப்பும் இல்லை. படைகள் நாட்டை விடுவித்து சமாதானத்தைக் காணும் முயற்சில் வெற்றிகரமான நடைபோட்டுக் கொண்டிருக்கின்றன என்ற தகவல் மட்டுமே மக்களுக்கு பரவலாக போய்க் கொண்டிருக்கின்றன.

அரசாங்கத்தின் தணிக்கை ஒரு புறமிருக்க தெற்கிலே இன்று புதுப்-பொலிவுடன் வளர்ந்துவரும் தீவிர சிங்கள இனவெறி நோயானது தொடர்பு சாதனத்துறையையும் பீடிக்கத் தொடங்கியுள்ளது. இதன் காரணமாக சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளில் பக்கசார்பான சுயதணிக்கைத் தன்மை கொண்ட செய்திகள் வெளியாகத் தொடங்கியுள்ளன.

ஒரு புறம், யுத்தம் தொடர்பான தகவல்களை அரசாங்கம் ஒழிக்க முயன்றால், மறுபுறம் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் தொடர்பான விபரங்களை மறைக்கும் போக்கு தொடர்புசாதனவியலாளர்கள் மத்தியில் வளர்ந்து வருகிறது.

மொத்தத்தில் தொடர்பு சாதனங்களிலிருந்து உண்மைகளை மக்கள் சுழியோடித் தான் அறிய வேண்டிய நிலை இப்போது உருவாகியுள்ளது.

ஒரு நாட்டை அதன் உயிரணுக்களிலேயே சிதைத்து விடுவதற்கு இதைவிட சிறந்த ஒரு போர்த்தந்திரம் இருக்க முடியாது.

அத்தகைய ஒரு நிலைமையை உருவாக்கும் முயற்சியில் அம்மையார் அரசு ஆற்றிவரும் பணியை பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

புதிய நூற்றாண்டில் காலடி வைக்கவுள்ள இந்நாட்டு மக்களுக்கு தாம் எங்கே இருக்கிறோம் என்பதை அறிய முடியாத ஒரு வாழ்வை பரிசாக வழங்குவதற்காக செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு ஆட்சியை எப்படிப் பாராட்டாமல் இருக்க முடியும்.

தணிக்கையின் ஓராண்டு பூர்த்தியை ஈட்டி வரும் அம்மையாரையும், அரசாங்கத்தையும் வாயார வாழ்த்துவோம்!

## வவுனியா செஞ்சிலுவைச் சங்கம்:
# ஊழியர்களுக்குக் கல்தா !

வவுனியா செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த மூன்று பேர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப்-பொலிசாரின் தீவிர விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதையடுத்து, வவுனியா கிளை நிர்வாக சபையின் மீது இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமை அலுவலகம் பிரயோகித்த பெரும்-பான்மைத்தனமான அதிகாரத்தினால், அதன் அலுவலகச் செயற்பாடுகள் முடக்க நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

கிளையின் செயலாளர் சிவநாதன் கிஷோர், அலுவலக உதவியாளர் பெனடிற் ரொனால்ட் ஸ்ரீகாந், சாரதியான நாகமணி ஈஸ்வரநாதன் ஆகிய மூவருமே கைது செய்யப்பட்டு, பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பொலிசாரினால் கொழும்பில் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு வருகின்றார்கள்.

இவர்கள் மூவரும் விடுதலைப் புலிகளுக்குப் பொருட்கள் அனுப்-பினார்கள், உதவி புரிந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே விசாரணை செய்யப்பட்டு வருகின்றார்கள். இந்த நிலைமையானது, இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமை அலுவலகத்திற்கு அரசியல் ரீதியாக நெருக்கடிகள் கொடுத்துள்ளதாகவும், சர்வதேச ரீதியில் இச்சங்கத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தி-யுள்ளதாகவும் தலைமைச் செயலகம் வவுனியா கிளையின் நிர்வாகக் குழுவிற்கு அறிவித்துள்ளது.

இது சம்பந்தமாக கலந்து பேச வேண்டும் என்றும் நிர்வாகக் குழுவினரைக் கொழும்புக்கு வருமாறும் அழைத்திருந்த தலைமைச் செயலக அதிகாரிகள், கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாக, இக்கிளையினர் புலிகளுடன் தொடர்பு-டையவர்கள் என்ற ரீதியில் குற்றச்-சாட்டுக்களைத் தெரிவித்து, இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் போவதாகத் தெரிவித்தார்களாம்.

வவுனியா கிளையின் நிர்வாகக் குழு மீதான நடவடிக்கை என்பது, அக்குழுவைப் பதவியில் இருந்து நம்பிக்கையற்ற நிலை காரணமாகப் பதவி நீக்கம் செய்வது என்பது தான் பொருள் என்ற முடிவுக்கு வந்த நிர்வாகக் குழுவினர் தமது பதவிகளை கொழும்பிலேயே வைத்து ராஜிநாமாச் செய்து சங்கத்தின் செயலாளர் நாயகத்திற்-குக் கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு வந்து விட்டார்கள். தங்களுடைய மரியாதை-யையும், வவுனியா மாவட்டத்தின் மரியா-தையையும் காப்பாற்றுவதற்காகவே தாங்கள் இந்த முடிவைக் கொழும்புக்குச் சென்றிருந்த வேளையில் எடுத்ததாக வவுனியாவுக்குத் திரும்பி வந்து இரண்டு தினங்களுக்குப் பின்னர், தங்களுடன் கொழும்புக்கு வராத இரண்டு நிர்வாகக் குழு உறுப்பினர்களிடம் தெரிவித்துள்-ளார்கள்.

இந்த இரண்டு உறுப்பினர்களையும் கொழும்பு தலைமை அலுவலகத்திற்கு வருமாறு அழைப்பு விடுக்கப் பட்டிருப்பது குறித்து தெரிவித்து கொழும்புக்குச் செல்வ-தற்காக அழைத்த போது, தங்களுக்கு முக்கியமான வேலைகள் இருப்பதாகக் கூறி வர முடியாமல் இருப்பதாகத் தெரிவித்-திருந்தார்களாம். கொழும்பில் இருந்து திரும்பி வந்திருந்த வவுனியா கிளைத் தலைவர் செ.மார்க்கண்டேயர், பதில் செயலாளர் என். சந்திர-சேகரம்பிள்ளை, உறுப்பினரான எஸ்.என். ஜி.நாதன், பொருளாளர் ஏ.மயில்வாகனம் ஆகியோரில் தலைவரான செ.மார்க்கண்-டேயருடன் இவர்கள் தொடர்பு கொண்டு கேட்டதன் பின்பே, தாங்கள் தமது பதவிகளை ராஜினாமாச் செய்தது பற்றித் தெரிவித்திருக்கிறார்கள். இவ்வாறு கேட்காவிட்டால், இவர்களும் தமது ராஜினாமாக் கடிதங்களைக் கொடுக்க வேண்டியது பற்றி தங்களுக்குத் தெரியாமல் போயிருக்கும் என்று புழுங்கிக் கொண்டி-ருக்கின்றார்கள்.

அது மட்டுமல்லாமல், வவுனியா கிளையின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அனைவரும் தமது பதவிகளை ராஜிநாமா செய்துள்ளது பற்றி, 16 ஆம் திகதி இரவு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதன் மூலமே அனைவருக்கும் தெரிய வந்துள்-ளது. வானொலிச் செய்தி அறிக்கையில் அறிவிக்கப்பட்டதன் பின்னரும், உத்தியோகபூர்வமாக தமது ராஜினாமா குறித்து இக்குழுவில் அங்கம் வகிக்கின்ற-வர்கள், வவுனியாவில் உள்ள செஞ் சிலுவைச் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர்கள் அல்லது முக்கியஸ்-தர்களுக்கு இன்னும் தெரிவிக்கவில்லை.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானவர்கள் இச்சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் ஆயுட்கால உறுப்பினர்களாகச் சேர்ந்துள்-ளார்கள். இவர்களால் பொதுத் தேர்தல் ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஒரு நிர்வாகக் குழுவை கொழும்புக்கு வருமாறு அழைத்து தலைமை அலுவலகம் குற்றம் சாட்டி, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் போவதாக மிரட்டியுள்ளமையானது என்ன வகையான ஜனநாயகம் என்பது தெரியில்லை.

அது ஒரு புறமிருக்க, இச்சங்கத்தின் வளர்ச்சிக்கும், செயற்பாடுகளுக்கும் உறுதுணையாக இருக்கின்ற உறுப்பினர்-களுக்கு, நிர்வாகக் குழுவினர் உத்தி-யோகபூர்வமாகத் தங்களுடைய நிலையைப் பற்றி விளக்கமளித்து எந்தவிதமான அறிவித்தலையும் இன்னும் வெளியிடாமல் இருப்பது பொதுச் சபை உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிகின்றது.

கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ள மூன்று உத்தி-யோகத்தர்களின் பொறுப்பில் இப்போது வவுனியா செஞ்சிலுவைச் சங்க அலுவலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. கடந்த திங்கட்கிழமை கொழும்பில் இருந்து தலைமை அலுவலகத்தின் செயலாளர் நாயகம் புளத்சிங்கள, வவுனியா அரசாங்க அதிபருக்கு ஒரு வேண்டுகோளை விடுத்-துள்ளார். பராமரிப்புக் குழு ஒன்றினை வவுனியாவுக்கு நியமிக்கும் வரையில், இக்கிளையின் அலுவலகம் செயற்-படுவதற்கு ஒத்துழைக்குமாறு அந்த வேண்டுகோளில் அவர் கேட்டுள்ளார்.

வவுனியா செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்பாடென்பது, இராணுவக் கட்டுப்-பாடற்ற வன்னிப்பகுதிக்கும், வவுனியா இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இடையில் நடைபெறுகின்ற ஒரு சிக்கலான காரியமாகும்.

வீதிச் சோதனைக்காகக் கடமையில் இருக்கின்ற சாதாரணமாகக் கல்விகற்ற இராணுவ சிப்பாய் அல்லது பொலிஸ் கான்ஸ்டபிள் கேட்கின்ற கேள்விக்கு (அது நியாயமான கேள்வியா அல்லது அடாவடித்தனமான கேள்வியா என்பது ஆளுக்கு ஆள் வேறுபடும்) அவரைத் திருப்திப் படுத்தக் கூடிய வகையில் பதில் கூறாவிட்டால் தமிழ் குடிமகன் ஒருவன் புலிகளுடன் தொடர்புடையவன் அல்லது, புலிகளைப்பற்றி தெரிந்திருந்தும் பொலி-சாருக்கு அல்லது இராணுவத்திற்குத் தகவல் தெரிவிக்கத் தவறிவிட்டார் என்ற குற்றச்சாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து நடவடிக்கை எடுக்க முடியும்.

அவ்வாறான நடவடிக்கைகள் இப்போது நாட்டில் சாதாரணமாக எடுக்கப்பட்டு வருகின்றன.

இத்தகைய ஒரு நிலைமைக்குக் கீழே, பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியில், அதாவது, கடுமையான ஒரு சண்டையில் ஈடுபட்டுள்ள இராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே தொடர்பு கொண்டு செயற்பட்டு வருகின்ற வவுனியா செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றார்கள். அவர்கள் மீதான விசாரணைகள் இன்னும் முடிவ-டையவில்லை. அவர்கள் மீது ஆதாரபூர்வமாகக் குற்றம் எதுவும் சாட்டப்படவுமில்லை. இந்த நிலையில் தான் வவுனியா கிளையின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மீது தலைமைச் செயலகம் அழுத்தங்களைப் பிரயோகித்து அவர்களின் பதவிகளை ராஜிநாமா செய்யச் செய்துள்ளது.

பதிவு செய்யப்பட்ட பொதுச் சபை உறுப்பினர்களினால் தெரிவுசெய்யப்பட்ட நிர்வாகக் குழுவை தனது அதிகாரத்தைப் பிரயோகித்து செயற்படாமல் செய்துள்ள தலைமைச் செயலகத்தின் நடவடிக்கையை விட, யாரால் தாங்கள் தெரிவு செய்யப்பட்டார்களோ, அவர்களுக்கு சாதாரண பண்புக்கு அமைய தமது தமது ராஜினாமா குறித்துத் தெரிவிப்பதற்குத் தவறியுள்ள நிர்வாக சபை உறுப்பினர்களின் செய்கை மோசமானதாகத் தெரிகின்றது.

தமிழர்கள் என்றால் புலிகள் என்ற ஒரு மாயைக்குள் சிக்கியுள்ள பெரும்பான்மைத்-தனத்தின் ஒரு தெளிவான வெளிப்பாடாக, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ம்க்களுக்கு சேவைகள் ஆற்றப்படுவதையும், அவர்களுக்கு வெளிநாடுகளில் இருந்து உதவிகள் வருவதையும் தடுக்கும் நடவடிக்கைகள் இலங்கை அரசாங்கங்-களினால், காலங் காலமாகவே மேற்கொள்-ளப்பட்டு வருகிறது.

இதனை அடியொட்டியே, இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமை அலுவலகமும், வவுனியா கிளையினர் மீது நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்றால் அது மிகையாகாது.

**இராசு.**

